உ

ஜகத்குரு

# ஸ்ரீசங்கரகுருபரம்பரை.

சங்கரர்பிள்ளைக்கவி.

(படங்களுடன்)

ஆத்ரேய. ஸ்ரீகிருஷ்ணசாஸ்திரி,
பாஷாத்ரய பண்டித, கவிரத்னம்.

**Approved by the Text Book Committee.**

உ

# ஜகத்குரு
# ஸ்ரீ சங்கர குரு பரம்பரை.

பழமையான நூல்களின் ஆதாரங்களுடன்

பலவிஷயங்களைச் சேர்த்துள்ள

இரண்டாம்பதிப்பு.

T.S.G.BHUTGOSWAMI.

பாஷாத்ரய பண்டித கவிரத்னம்,

ஆத்ரேய ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரி.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

ப்ரமோத-௵ கார்த்திகை-௴

*Rights reserved*] **1930** [விலை ரூ. **1.**

# படங்கள் அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஜகத்குரு ஸ்ரீகாமகோடிபீடாதிபர் | 1 |
| 2. | ஸ்ரீசங்கரபகவத்பாதஸ்வாமிகள் | 15 |
| 3. | ௸ ௸ | 29 |
| 4. | ஜகத்குரு ஸ்ரீகாமகோடி பீடாதிபர் | 45 |
| 5. | ஸ்ரீகாமகோடிபீடாதிபரின் ஸ்ரீமுகமுத்ரை. | 50 |
| 6. | 64 சுதர்சன மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ | 55 |
| 7. | 65 சந்த்ரசேகரேந்த்ரஸரஸ்வதீ | 79 |
| 8. | பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ (திருவெண்காடு ஸமாதி) | 85 |
| 9. | 58 பகவந்நாமபோதேந்த்ரஸரஸ்வதீ (கோவிந்தபுரம் ஸமாதி) | 89 |
| 10. | ஸ்ரீசங்கரபகவத்பாதஸ்வாமிகள் | 97 |

# இந்நூலைப்பற்றிய அபிப்பிராயங்கள்.

ஸமரஸபோதினி **1925** மே.

## மதிப்புரை.

### ஜகத்குரு ஸ்ரீசங்கரகுருபரம்பரை.

ஆதிசங்கரர் காலவரையும், அம்மஹான் ஸ்தாபித்த மடங்களும், அப்பெரியாரின் சிஷ்யர்களின்பெருமையும் அவர் தொடங்கி 67-வது பீடாதிபதிகளாகிய நம் ஸ்வாமிகள் வரையிலுள்ள எல்லோருடைய விவரமான சரித்ரங்களும் இதில் அடங்கியுள்ளன. "நூலாராய்ச்சி, சரித்ர ஆராய்ச்சி முதலிய துறைகளில் விருப்பமுள்ளார்க்கு இஃதோர் நல் விருந்தெனப் புகல்வோம். தென்மொழி வடமொழிப் புலமை வாய்ந்த ஆத்ரேய ஸ்ரீகிருஷ்ணசாஸ்திரிகள் இதன் ஆசிரியர்" சந்திரமௌளீச்வர ஸம்பாவனைக்கு உரியாரான மிகப்பெரியாரின் புண்யசரிதங்களடங்கிய இப்புத்தகம் எல்லோரும் படிக்கத்தக்கது எனக்கூறுகின்றோம்

---

சுதேசமித்திரன். **19 SEP. 1925**

### ஜகத்குரு ஸ்ரீசங்கர குருபரம்பரை.

லால்குடி ஹைஸ்கூல் பிரம்மஸ்ரீ ஆத்ரேய கிருஷ்ணசாஸ்திரிகளால் எழுதப்பெற்று, கும்பகோணம் ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

விவாகாதி சுபமுகூர்த்தகாலங்களில் சந்திரமௌளீச்வர சம்பாவனை செய்யப்படுவது அந்தணர்களில் ஒரு சாராராகிய ஸ்மார்த்தர்களிடத்தில் சர்வ சாதாரணமான வழக்கம் இருந்தபோதிலும், அந்த சம்பாவனைக்குரிய பெரியவர்களின் சரித்திரத்தைப்பலரும் அறியாதிருக்கின்றனர். அவர்களுடைய அஞ்ஞானத்தைப்போக்கி அந்த சம்பாவனையின் நோக்கத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்தவும் அத்தகைய சம்பாவனைக்குரிய பெரியார்களுடைய விசேஷத்தை அவர்கள் உணர்ந்து அவர்கள் காட்

டிய வழிகளின்படி நடந்துகொள்ளச் செய்யவும் இந்த நூலானது மிகுந்த உபயோகமானதாக இருக்குமென்பதை நாம் சொல்லத்தேவையில்லை. "ஸ்ரீசங்கார் மதத்தைப்பற்றிச் சிலருக்கு இருந்துவரும் தப்பெண்ணங்களை நிவர்த்திக்கவும் இந்நூல் அனுகூலமானதாக இருக்கும்'' "கல்வி, வணக்கம் முதலிய நற்குணங்களை ஒருங்கே கொண்ட அந்தணரையும், தாழ்ந்த நிலையிலுள்ள பஞ்சமரையும் உலகப்பற்றிழந்து ஆன்மஞானத்தையடைந்த பண்டிதர் ஒன்ருகக் கருதுவர்'' என்ற கீதாவாக்யத்தையும், எல்லாப் பிராணிகளிடத்தும் உள்ள ஜீவன், தானென்றும், ஜீவகோடிகளனைத்தும் தன்னிடத்தே உள்ளன என்றும் உணர்ந்த ஆத்மஞானியான ஒருவன் சுயராஜ்யம் அடைகின்ருன் எனக்கூறுகிற மனுவின் மொழியையும் எல்லோரும் உணரும்படி கற்பித்து, அத்வைதமதத்தை சித்தாந்தம் செய்த ஆதிகுருவின் பிரதிநிதியெனக் கொண்டாடுவதற்கு ஏற்றவர்களாக இப்பாம்பரையினர் இருந்துவருகின்றனர். "சிறுவர்க்கு குரு பக்தியூட்டுதல் நம்மவரின் கடமையாதலின் உயர்தரக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி கற்கின்ற மாணவர்கள் படித்துப் பயனுறுவதற்கு ஏற்றவிதமாக இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாமதங்களின் சித்தாந்தங்களையும் நன்ருகக் கற்றுணர்ந்தவர்களே மதத்துவேஷங்களை விட்டொழிக்கும் ஆற்றல் பெறுவார்களாதலின் இதுபோன்ற புத்தகங்களைப் பாடசாலைகளில் பாடபுத்தகங்களாக அமைத்தல் சாலவும் பொருந்துமென்பதை நாம் கூறத்தேவையில்லை.

உ
சிவமயம்.

மகாமகோபாத்யாய
வே. சாமிநாதையர்
பிரின்ஸிபால்

ஸ்ரீ மீனாக்ஷி தமிழ் காலேஜ்
சிதம்பரம்.

10—8—1925.

அநேக நமஸ்காரம், உபயக்ஷேமோபரி.

தாங்கள் அன்புடன் அனுப்பிய "ஜகத்குரு ஸ்ரீசங்கரகுரு பரம்பரை" என்னும் அருமையான புஸ்தகம் வரப்பெற்று மிக்க ஆனந்தமடைந்தேன். இந்த அரியகாரியத்தைச் செய்து முடித்த தங்கள் விஷயத்தில் இந்த நாடு மிகவும் கடப்பாடுடையது.

இதுபோன்ற அரியகாரியத்தைச் செய்வோரில்லையே. கூடுமானால் இதுபோன்ற பெரியோர்களுடைய சரிதத்தை எழுதிஉபகரிக்கவேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

இங்ஙனம், அன்பன்,
வே. சாமிநாதன்.

---

"New India" 30th May, 1925.

# THE AGE OF SRI SANKARA.

*First or Eighth century, A.D., ?*

Which is the age of Adi Sankara, Sri Sankaracharya who founded among others the Sringery and Kamakoty Mutts? Our modern historians put it as the 8th century A.D. The succession list of the Kamakoty Mutt takes it down 13 centuries earlier to 508 B.C. The Sringery succession list puts it as 44 A.D. Mr. Athreya Krishna Sastriar of the High School Lalgudi who has lately produced a book in Tamil on Jagadguru Sri Sankara Guru Parampara considers after considerable investigation that Adi Sankara's Period was the latter half of the first century A.D.

Mr. Sastriar's argsments may be briefly noticed here. Sri Sankara's guru Govinda Baghavad Pada is said to be a contemporary of Vikramadithya who ruled about the first century A.D. According to records when Govinda BaghavadPada visited Kashmir a king by name Abhimanyu was the ruler there, and historians put his date at 40 A.D. According to records of Sri Kamakoty Mutt the thirteen Swamis who succeeded Adi Sankara were in power for an average of 66 years and the other 53 for 30 years each. If the first figure is rejected and 30 years taken as the average period for each Swamiji the computation agrees with the idea that Adi Sankara lived in the first century A.D.

It may be explained in this connection that the 30th Swamiji at Kamakoty Mutt who according to its succession list was in power from A.D. 788to840 was Abhinava Sankara. Mr. Sastriar argues that historians have committed the mistake of confusing Abhinava Sankara with Adi Snkara.

Mr. Sastriar's book which is of 82 pages is thought provoking and very interesting reading..................-...

...............

Among other things it is interesting to note an effort at determining Sri Vyasa's time. Mr. Sastriar computing 1441 B.C. to be Parikshit's era, and therefore puts Sri Vyasa's time as 3365 years from the present. He points out that this is borne out by Astronomical calculations also.

# முகவுரை.

எண்ணிறந்த மதக்கொள்கைகளையும், அவற்றையாசரித்து வருகிற கணக்கிலா மனிதசமூகத்தையும் கொண்டு நிலவி வருகிற பரந்த இவ்வுலகில், மதத்தலைவர்களைத் தேர்ந்து வணங்கி, அவர்களது கட்டளைகளை நிறைவேற்றிப் பெரியாரென நன்கு மதித்துக் கொண்டாடாத மதாபிமானி யாரேனுமுளரோ? அத்தகைய மதத்தலைவர் நமக்குமுளர். இப்பாரதநாட்டில் வழங்குவது இந்து மதமெனவும், வாழ்பவர் இந்தியர்எனவும் கூறப்படினும் இப்பால் எண்ணிறந்த மதக்கொள்கைகள் அங்கீகரிக்கப்பட்டு ஆசரிக்கப் படுகின்றன. இந்துமத வேறுபாடுகளும் பிறநாட்டு மதங்களும் இத்தேசத்தில் பரவியுள்ளன.

கடவுள் ஒருவரே என்பதும்,யார் யார் எவ்வாறு பாவிக்கின்றனரோ அவ்வாறு திருவுருக்கொண்டு எழுந்தருள்வர் என்பதும், நம் மதத்தின் முதிர்ந்த சித்தாந்தமாகும். மாலாயினும், மாதேவனாயினும், கணபதியாயினும்,கந்தவேளாயினும், அம்மையாயினும், அருகக்கடவுளாயினும் எல்லாம் ஒன்றே எனச்சாற்றி, பராபரக் கடவுளின் படைப்பிலுள்ள ஜீவகோடிகளனைத்தும் வேற்றுமை யற்றது எனப் போற்றிப் புகழுற்றதே அத்வைத சித்தாந்தம், வேதங்களில் பற்பலதெய்வங்களெனக் கருதப்படுகிறவெல்லாம் ஒரே தெய்வத்தின்பெயர்களென வேதம் கூறுகின்றது.‡

எத்தகைய மதக்கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டு ஸமரஸபாவங்களைப் பரவச் செய்கிற அத்வைதமத சித்தாந்தம் செய்தவர் சங்கராசார்யஸ்வாமிகள். இவர்களை முன்னிட்டு, விவாகம் முதலிய சுபமுகூர்த்த காலங்களில் அந்தணர்களால் செய்யப்படுகிற சந்திரமௌளீச்வர ஸம்பாவனைக்கு உரியவர்களான சங்காபரம்பரை

---

‡ एकं सद्विप्रा बहुधा वदन्ति अग्निंयमं मातरिश्वानमाहुः ।
ருக்வேதம் 1-164-16.

तदेवाग्निस्तदादित्यस्तद्वायुस्तदु चन्द्रमाः ।
तदेव शुक्रं तद्ब्रह्म ताआपस्स प्रजापतिः ॥
யஜு:சாகா 32-1.

யினர்களின் சரித்ரம் எல்லோராலும் அறியப்படவேண்டியது அவசியமெனக்கருதி "ஸ்ரீசங்கரகுருபரம்பரை" என்ற இந்நூலை வெளியிட முன்வருகின்றேன்.

ஆசரித்துக்காட்டுபவர் ஆசார்யரெனவும், கௌரவமுள்ளவர குரு எனவும் கூறுகிற லிங்கபுராண வசனத்திற்கு இலக்கியமாய் நமது காமகோடி பீடாதிபர்களான ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் விளக்குகின்றார்கள்.§

"கல்வி, வணக்கம் முதலிய நற்குணங்களை ஒருங்கே கொண்ட அந்தணனையும், தாழ்ந்த நிலையிலுள்ள பஞ்சமனையும் உலகப்பற்றிழந்து ஆன்மஞானத்தையடைந்தபண்டிதர் ஒன்றாகக்கருதுவர்" என்ற கீதா வாக்யத்தையும்,¶

எல்லாப் பிராணிகளிடத்துமுள்ள ஜீவன் தானென்றும், ஜீவகோடிகளனைத்தும் தன்னிடத்தே உள்ளன என்றும் உணர்ந்த ஆத்ம ஞானியான ஒருவன் ஸ்வாராஜ்யமடைகின்றான்" எனக் கூறுகிற மனுவின் மொழியையும், எல்லோரும் உணரும்படி கற்பித்து, அத்வைதமதஸித்தாந்தம் செய்த ஆதிகுருவின் ப்ரதிநிதியெனக் கொண்டாடுதற்கு ஏற்றவர்கள்.†

"ஏனைய தெய்வங்களைப்போலல்லாமல் கண்கண்ட தெய்வமாய் வானத்தில் ஸஞ்சரிக்கும் ஸூர்யனை இடையரும் ஸ்திரீகளும் காண்கின்றார்கள்" எனக்கூறுகிற வேதவாக்கை ‡ அனுஸரித்து,

---

§ स्वयमाचरते यस्तु आचारे स्थापयत्यपि ।
आचिनोति च शास्त्रार्थमाचार्य स्तेनचोच्यते ॥

லிங்கபுராணம் உத்தரபாகம் (20—19—20)

¶ विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डितास्समदर्शिनः ॥

பகவத்கீதை (5—18)

† सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
संपश्यन्नात्मयाजीवै स्वराज्यमधिगच्छति ॥

மனுஸ்மிருதி (12—91)

‡ उतैनं गोपा अदृशन्नदृशन्नुदहार्यः

ஸ்ரீருத்ரம்

சிறுவர்களும் இடையர்களும் கண்காணிக்குமாறு கோகுலத்தில் லீலை செய்த கண்ணபிரானையொப்ப, பாலவிருத்தர்களுக்கும், பண்டித பாமரர்களுக்கும், மற்றுமுள்ள அனைவர்க்கும் சுலபர்களாய்ச் சேவையளித்து அனுக்ரகிப்பவர்கள். மிகச்சிறிய ஊரிலும் புகுந்து பக்திமார்க்கத்தைப்போதித்து அங்குள்ள சிஷ்யர்களுள் மலிந்து கிடக்கும் வேற்றுமையை ஒற்றுமையாக்கி ஸ்ரீகாமகோடி பீடத்தின் பரம்பரையான பெருமையைப் போஷிப்பவர்கள். ஸர்வக்ஞ பீடாதிபதி என்பது காரணப் பெயராய்ப் பொருந்தும்படி ஸகல கலைகளும் கல்லாமல் கற்றவர்கள். சிஷ்யர்களின் க்ஷேமத்தைக் கருதி சந்திரமௌளீச்வரரை ஆராதித்து, நாராயணஸ்மரணையைப் பாராயணம் செய்பவர்கள். அடியேனது குருமூர்த்திகளாகிய இத்தகைய பெரியாரின் அனுக்ரகபலத்தால் பெரிய விஷயங்கள் அடங்கிய இச்சிறிய புஸ்தகத்தை எழுதியுள்ளேன். குற்றம் களைவது பெரியாரின் இயல்பன்றோ!

ஆதி சங்கராசார்யஸ்வாமிகளால் நியமிக்கப்பெற்று நிலைத்தோங்குகிற மடங்களில் ஸ்ரீகாமகோடி பீடம் ஒன்றே பின்னமற்ற பரம்பரையுடையதென்பதும், ஆசேது ஹிமாசலம் புகழ்படைத்து விளங்குவதென்பதும், ஆதிசங்கரர், தமது ஆத்ம பூஜையான யோகலிங்கத்தை ஸ்தாபித்து தமக்கு உரிய பீடமாகக்கொண்டதென்பதும், நமது பரதகண்டத்திற்கும் அக்காமகோடி பீடாதிபரே மதத்தலைவராக ஏற்றுக்கொள்ளத் தகுதியுள்ள மிகப்பெரியாரென்பதும் இந்நூலால் விசதமாகும்.

நமது நாட்டின் ப்ராசீன சரித்திரங்களும், அருமைவாய்ந்த எண்ணிறந்த நூல்களும், அத்தகைய நூலாசிரியர்களின் வரலாறுகளும் ஜீவ்யகாலமும் இப்புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

வடமொழிச் சொற்களை அச்சொற்கள் போலவே உச்சரிக்குமாறு தமிழில் எழுதுவது இந்நூலுக்கு இன்றியமையாததாயிற்று. எல்லோரும் ஸர்வஸாதாரணமாய் வழங்கி வருகிற காரணம்பற்றி கிறிஸ்துவ ஆண்டுகளையே ஈண்டு எழுதியுள்ளோம்.

சிறுவர்களுக்குக் குருபக்தியூட்டுதல் நம்மவரின் கடமையாதலின் உயர்தரக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்விகற்கின்ற மாணவர்களின் பரீக்ஷைக்குப் பயன்படுமாறுஎழுதப்பட்டுள்ளது.

பங்குனி அமாவாஸ்யைக்குப் பிறகு சித்திரை அமாவாஸ்யை முடியவுள்ள நாட்கள் சைத்ரம் எனப்படும். இவ்வாறே சித்திரை மாதம் சுக்லபக்ஷம் ப்ரதமையை ஆதியாகவும் வைகாசிமாதம்அமாவாஸ்யையை அந்தமாகவும் கொண்ட மாதம் வைசாகம். பின் உள்ள மாதங்களேயும் ஜ்யேஷ்ட, ஆஷாட, ச்ராவண, பாத்ரபத ஆச்விந, கார்த்திக, மார்க்கசிர, புஷ்ய, மாக, பால்குன மாதங்களாக அங்கீகரிக்கவேண்டும். ஸ்ரீகாமகோடி பீடாதிபர்கள் சித்தி பெற்ற காலங்களே இம்மாதக் கணக்கில் குறித்துள்ளார்கள்.

இவை சந்திரனுடைய கதியை அனுஸரித்துக்கணக்கிடப்படுகிற சாந்த்ரமாதங்கள். நமது மாதங்கள் ஸூர்யகதியைக்கொண்டு இப்பால் கணக்கிடப்படுகின்றன.

சாலிவாகனசக 496க்குச் சரியான கி. பி. 5வது நூற்றுண்டில் இவ்வழக்கம் துவக்கப்பட்டதென ஜ்யோதிர் கணிதம் என்ற நூல் கூறுகின்றது.*

இந்நூலில் வந்துள்ள அரும்பதங்களுக்கு ஓர் அகராதி குறித்துள்ளோம். இப்புத்தகத்தைஇயற்றுவதற்குஆதாரமானவைகளும், மேற்கோளாயிருப்பவைகளுமான நூல்களின் அட்டவணே ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளிற் சில இப்பால் கிடைக்கவில்லையாயினும், அவைகளைத் தேடுவதற்குப் பலர் முயல்வர் எனக்கருதி அப்புத்தகங்களை இவையெனக் குறித்துக்காட்டாமல் விடுத்தோம். புத்தகம் கிடைக்கவில்லை என்றால் தேடுவோர்க்கு ஊக்கம் குன்றுமன்றே. இந்நூலில் மலிந்து கிடக்கக்கூடிய குறைவை நிறைவாக்கி அடியேனைக் கனப்படுத்துமாறு கற்ற பெரியோர்களைப் பெரிதும் வேண்டுகின்றேன்

திம்மாச்சிபுரம்,
அனந்தநாராயணசாஸ்திரிகள்,
குமாரன்
**ஆத்ரேய ஸ்ரீகிருஷ்ணசாஸ்திரி.**
பாஷாத்ரயபண்டிதகவிரத்னம்.

ஹைஸ்கூல், லாலுகுடி,
சுக்லஹூ பங்குனிமீ
ஏப்பிரல் 1930

---

* शाके षड्गोंघि (496-574 கி.பி.) तुल्यां शरदि समभवत्सौ रवर्षप्रवृत्तिः ॥
ஜ்யோதிர்கணிதம் (424) பக்கம்

## இப்புத்தகத்திற்கு ஆதாரமான நூல்கள்.

1. ஆக்யாஷஷ்டி
2. ஆத்மவித்யாவிலாஸம்
3. ஆர்யபடீயம்
4. ஆநந்தகிரி சங்கரவிஜயம்
5. குருப்ரதீபிகை
6. குருவிஜயம்
7. குருரத்னமாலே
8. குளீராஷ்டகம்
9. கேரளீய சங்கரவிஜயம்
10. சங்கரேந்த்ரவிலாஸம்
11. சாந்திவிவரணம்
12. சாந்தோக்யஉபநிஷதம்
13. சித்விலாஸ சங்கரவிஜயம்
14. சிவரஹஸ்யம்
15. சிவாநந்தலஹரி
16. சிவாத்வைத சைவபாஷ்யம்
17. தாராவளீ
18. தேவி அபராதக்ஷமாபன ஸ்தோத்ரம்
19. தைத்திரீய ஸம்ஹிதை
20. நைஷதம்
21. நைஷ்கர்ம்யசித்தி சந்த்ரிகை
22. பகவத்கீதை
23. பதஞ்சலிவிஜயம்
24. பவிஷ்யோத்தர புராணம்
25. பஞ்சதசிப்ரகரணம்
26. பதகசதகம்
27. பக்திகல்பலதிகை
28. பாரதம்
29. பாணினீய மஹாபாஷ்யம்
30. பாகவதம்
31. பராசரமாதவீயம்
32. புண்யசுலோகமஞ்சரி
33. ப்ரும்மவித்யா விலாஸம்
34. ப்ரும்மாண்ட புராணம்
35. ப்ருஹதாரண்யகதீபிகை
36. ப்ருஹத்சங்கரவிஜயம்
37. ப்ருஹத்கர்கஸம்ஹிதை
38. ப்ராசீன சங்கரவிஜயம்
39. மடாம்நாயம்
40. மஹாபுருஷவிலாஸம்
41. மனுஸ்ம்ருதி
42. மணிப்ரபா
43. மாதவீயசங்கரவிஜயம்
44. மாத்ருகா புஷ்பமாலா
45 மார்க்கண்டேய ஸம்ஹிதை
46 ராஜதரங்கிணீ
47. ருக்வேதம்
48. ருத்ரம்
49. லிங்கபுராணம்
50. வாராஹிஸம்ஹிதை
51. வாயுபுராணம்
52 விவரணப்ரமேயஸங்க்ரஹம்
53. விவேகசூடாமணி
54. விஷ்ணுபுராணம்
55. வேதபாஷ்யம்
56. வேதாந்த ஸூத்ரம்
57. வைத்யாபிதானசிந்தாமணி
58. வ்யாஸாசலீயசங்கரவிஜயம்
59. வையாஸிக்யந்யாயமாலே

60. ஸ்ரீமுகதர்ப்பணம்
61. ஜைமினீயந்யாயமாலை
62. ஜ்யோதிர்கணிதம்
63. ஸர்வதர்சனஸங்க்ரஹம்
64. ஸத்குருஸந்தானபரிமளம்
65. ஸர்வக்ஞவிலாஸம்
66. ஸேதுபந்தம்
67. ஸௌந்தர்யலஹரி
68 ஸம்க்ஷேபசாரீரகம்
69. ஸ்வாத்மநிரூபணம் (போதார்யா)
70. ஸ்தைர்யவிசாரப்ரகரணம்
71. ஹயக்ரீவவதம்
72. ஹரிமிச்ரீயம்
73. ஹர்ஷசரிதம்

## தமிழ் நூல்கள்.

74. அபிராமி அந்தாதி
75. கபிலர் அகவல்
76. குறள்
77 சிதம்பரம்மும்மணிக்கோவை
78. தாயுமானவர்பாடல்
79. நன்னூல் உரை
80. பத்துப்பாட்டு
81. புலவர்புராணம்
82. திருத்தொண்டர் புராணம்

# விஷய அட்டவணை.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | குரு மகிமை ... ... ... | 2 |
| 2. | தேசசரித்ரம் ஓர் ஆராய்ச்சி ... ... | 4 |
| 3. | சங்கரபூர்வாசாரியர் ... ... ... | 7 |
| 4. | சங்கர அவதாரகாலம் ... ... ... | 9 |
| 5. | சங்கரதிக்விஜயம் ... ... ... | 15 |
| ,, | வியாஸர் காலவரை ... ... ... | 19 |
| 6 | மடஸ்தாபனம் ... ... ... | 31 |
| 7. | சிருங்ககிரிமடம் ... ... ... | 33 |
| ,, | ஆசாரியர் அனுக்ரகித்த கிரந்தங்கள் ... | 40 |
| 8 | காஞ்சீகாமகோடி பீடம் ... ... | 44 |
| 9. | சங்கர குரு பரம்பரை ... ... ... | 51 |
| ,, | மூகசங்கரர் ... ... ... ... | 59 |
| ,, | தீர அபிநவ சங்கரர் ... ... ... | 69 |
| ,, | வித்யாதீர்த்தர் ... ... ... | 79 |
| ,, | பகவந்நாமபோதர் ... ... ... | 85 |
| ,, | சங்கரர்பிள்ளைக்கவி ... ... ... | 97 |

# பிழைதிருத்தம்.

இப்பிழைகளைத்திருத்திப்படிக்குமாறுநேயர்களைவேண்டுகின்றேன்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 31 | ஒன்ற | என்ற |
| 22 | 9 | வருஷாரம் | வருஷாரம்பம் |
| 29 | 22 | महेशाशा | महेशांशा |
| 40 | 2 | तत्वमसि | तत्वमासि |
| 43 | 20 | चतुष्स्या | चतुष्षस्या |
| ,, | ,, | भुवनमं | भुवनम् |
| 53 | 25 | विवादि | विघादि |
| ,, | 27 | शान्तवदे | शान्तवेद |
| ,, | கடைசி | सत्यबोधाधार्यवर्यः | सत्यबोधार्यः |
| 60 | 26 | गुम्फनै | गुम्भनै |
| 61 | 13 | गुरुगौंखं | गुरोगौंखं |
| 67 | 24 | सेवनाप्यै | सेवनाप्स्यै |
| ,, | 26 | कच्चया | काञ्चया |
| 69 | 12 | ஆர்ய | ஸூர்ய |
| 70 | கடைசி | तिशानल | दिशानल |
| 72 | 24 | च्छकक | च्छंखक |
| ,, | 28 | देदीत्य | देदीध्य |
| ,, | ,, | नवभटा | नवपभटा |
| ,, | 29 | वेदाट्टति | वेदद्दति |
| 77 | 23 | दुर्यन्त्रै | दुर्यन्प्र |
| 82 | 5 | மாகக்குண | மாகக்ருஷ்ண |
| 83 | 23 | என்று | என்ற |
| 86 | 27 | डिम्भस्य | डिम्बस्य |

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபர்



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்தர ஸரஸ்வதி.

## விநாயகர் துதி.

सरागलोकदुर्लभं विरागिलोकपूजितं
सुरासुरैर्नमस्कृतं जरापमृत्युवारकम् ।
गिरा गुरुं श्रिया हरिं जयन्ति यत्पदार्चकाः
नमामि तं गणाधिपं कृपापयःपयोनिधिम् ॥

புணரிசூ ழுலகி னுளும் புகழுறும் பெரியோனுகிக்
குணமெலா மொருங்கே கூடும் குன்றுபோ லிருந்தோ னெங்
அணையிலாக் கருணைகூரும் ஆணவ மகன்ற ஆசான் [கள்
உணருமாக் காதை கூற உம்பலே ரம்பன் காப்பே. (1)

### அருமபதப் பொருள்.

(1) *புணரிசூழ் - கடல்சூழ்ந்த, அணையிலா - கரையில்லாத, உம்பல் - யானை, எரம்பன் - விநாயகன்.*

## சங்கர குரு ஸ்துதி.

जिह्वा मे मधुमत्तमा भवतु सा मेधाच विष्वक्प्रभा
कर्णाभ्यां बहु यच्छ्रुतं गुरुवरात्पूर्वं मया शैशवे ।
तद्धोपायितमस्तु मे दृढतरो देहश्च निर्व्याधिकः
एवं सन्तु ममेप्सितानि सकलान्याचार्यवर्याज्ञया ॥

உலகதனிற் பலமதங்க ளுண்மையாக
ஓங்குநல தத்துவங்க ளின்மையாகக்
கலகமலி யந்நாளிற் கங்கைசூடும்
கண்ணுதலே அத்திரியின் மரபின்வந்த
திலகமெனக் காலடியில் தோன்றிப் பல்லோர்
தினமுநினை அத்துவித வித்தையிங்கு
இலகவரு மென்குலத்தான் உலகுக்காசான்
இருதாளு மென்சிரத்தி லிருப்பதாமே. (2)

### அரும்பதப்பொருள்.

(2) *உண்மையாக - இருந்ததினுலும், கலகமலி - கலகம் நிறைந்த கண்ணுதலே - சிவபிரானே, இலகவரும் - விளங்குமாறு வருகிற, உலகுக்காசான் - ஜகத்குரு.*

உ

|| श्री गुरुभ्यो नमः ||

# ஸ்ரீ சங்கர குரு பரம்பரை.

## அத்தியாயம் 1.

### குருமகிமை.

உலகெலாம் கடவுள் படைப்பு. அந்த ஸர்வக்ஞர் ஒருவரே எல்லோர்க்கும் தந்தை. எங்கும் நிறைந்துவிளங்குகிற அவரது படைப்பிலுள்ள ஜீவகோடிகளனைத்தும் ஒருவருக்கொருவர் ஸஹோதரராவர். ஸமபுத்தி ஒன்றுதான் மோக்ஷத்தையளிக்கக் கூடியது. அவன் வேறு நான் வேறு என்று நினைப்பவன் மிருகங் களுக்குச் சமமென உபநிஷத்துக்கள் கூறுகின்றன. கண்களுக் குப் புலப்படுவனவெல்லாம் அக்கடவுளின் அம்சமாதலின் எத்த கைய ஜீவனிடத்தும் பேதபுத்தி வைத்தலாகாது. குடத்திலுள்ளது கள்ளாயினும் கங்காதீர்த்தமாயினும் அதில் ப்ரதிபலிக்கும் சூர்யன் ஒன்றேயன்றோ! ஆதலின் எல்லா ஜீவராசிகளும் நல்லதாயினும் பொல்லாதாயினும் கடவுளின் இருப்பிடமாம். இந்தத் தத்துவம் உணர்ந்தவரே ஹம்ஸர். "அஹம் ஸ:" "நானே அக்கடவுள்" எனப் பொருள்படுகிற இத்தொடர்மொழியின் முதல் எழுத்தை விலக்கினால் ஹம்ஸர் என்றாகிறது. எனினும், ஸம்ஸாரம்என்ற நீரில் கலந்துள்ள பிரும்மமாகிய பாலைப் பிரித்துப் பருகும் இயல்புடை யாரை ஹம்ஸர் எனச்சொல்வதும் பிழையாகாது. இதுதான் அத்வைதம்.

* எல்லோரும் விரும்பக்கூடிய இவ்வித்தையைப் புகட்டியவர் நமது சங்கரபகவத்பாதர். இவரைப் புகழாதவர் இவ்வுலகிலுண்

---

* बुद्धो युद्धसमुद्यतः किल पुनः स्थित्वा क्षणाद्विद्रुतः
कोणे द्राक्कणभुग्व्यलीयत तमःस्तोमावृतो गौतमः ।
भग्नोऽसौ कपिलोऽपलायत ततः पातञ्जलाश्चाञ्जलिं
चक्रुस्तस्य यतीशितुश्चतुरता केनोपमीयेत सा ॥

சங்கரதிக்விஜயம்.

டோ! சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கிய இப்பரம புருஷரைக் கண்ணாரக்கண்டு அம்ருததாரைபோன்ற உபன்யாஸங்களைச் செவியாரக்கேட்டு ஆனந்திக்கும் பாக்கியம் பெற்றவர்கள் இவரைச் "சங்கரர் எனத் தகுதியாம்" எனக் கொண்டாடினர்.

அன்னியமதத்தினரான பவுத்தரும், சமணரும் தத்துவமுணர்ந்து அத்வைதியாயினர். மேலும் காபாலிகர், லோகாயதர், நையாயிகர் முதலிய பலரும் இம்மகானுடைய கொள்கையையே மேற்கொண்டனர். சாங்க்யரும் வைசேஷிகரும் தங்களது சங்கைகளற்றுச் சங்கரரது கொள்கையை விசேஷமெனக் கொண்டாடினர். மதப்பற்று என்ற மதங்கொண்டவர்களும், நினைத்தால் சிரச்சேதம்செய்யக்கூடிய ஆற்றலுடையவர்களும், நாத்தழும்பேற நாஸ்திகம் பேசுபவர்களும், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் எனச் சாதிக்கக்கூடியவர்களுமான பலர் நமது சங்கரரைச் சார்ந்து தொண்டராயினர். இதுதானோ! எம்மதத்திலும் எந்தச் சித்தாந்தத்திலும் அத்வைதமே மேல்என ஸ்வதேசிகளும் விதேசிகளுமான பலர் இக்காலத்தும் புகழ்ந்து போற்றுகின்றனர். உலகிலுள்ள பற்பல மதத்தினர்களும் வெறுப்பில்லாமல் விருப்பம் அடையக்கூடிய ஸமரஸ பாவமுள்ள தத்துவங்களையுள்ளடக்கியுள்ளது இவ்வத்வைதம் ஒன்றேயாம். இக்காரணம்பற்றியன்றோ இப்பெரியாரையும்இவர்பரம்பரையில்கீர்த்திவாய்ந்துவிளங்குகின்ற பூஜ்யர்களையும் "ஜகத்குரு" என எல்லோரும் ஏத்துகின்றனர்.

திவ்விய மங்கள மூர்த்தியாய் அவதரித்து, அடியார்களின் மயக்கத்தைத் தெளியச்செய்து இவர் விளங்கிய காலம் சிலவே. அச்சிறு காலவளவில் இவர் செய்த லோகோபகாரங்கள் எண்ணிறந்தன என்பதிற் சங்கையில்லை. நமது குருமூர்த்திகளாகிய சங்கரர் தம்மைச் சார்ந்தாருக்குத் தரிசனம் தந்து அநுக்கிரகித்த காலம் முப்பத்திரண்டு ஆண்டுகள். தர்மார்த்த காம்ய மோக்ஷங்களும், ருக் யஜுஸ் ஸாமாதர்வண வேதங்களும், ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யங்களும் உருக்கொண்டு வந்தனபோல் விளங்கியவர்களும், பிரமனது நான்கு முகங்களோ எனக் கருதக்கூடியவர்களுமான நான்கு சிஷ்யர்களுடன் பாத நாடு முழுவதும் பாதசாரியாகவே ஸஞ்சாரஞ்செய்து ஆங்காங்கு உபன்யாஸங்களாலும், அமாநுஷமான அற்புதச்செய்கைளாலும் அத்வைதப் பிரசாரம் செய்துள்ளார்கள். இவர்கள் எழுதியுள்ள கிரந்தங்களைப்

பார்த்து எழுதுவதற்கும் நமக்குப் பல்லாண்டுகள் செல்லும். மேலும் தமது சித்தாந்தம் என்றும் நிலைத்தோங்குமாறு நமது பரதநாட்டின் நான்கு திசைகளிலும் நான்குமடங்களை ஸ்தாபித்து தமது சிஷ்யர்கள் நால்வரில் ஒவ்வொருவரை ஒவ்வொரு மடத்திற் கதிபதியாக்கி, அவரவர் அத்வைதப்பிரசாரம் செய்யவேண்டிய பிராந்தங்களை "மடாம்நாயம்" என்ற நூலில் குறித்து, தக்க ஏற்பாடுகள் செய்தனர். கீர்த்திபெற்ற ஸப்தபுரிகளிலும் முதன்மையாகக்கொண்டாடப்படுகிற காஞ்சியைத் தமது வாஸஸ்தானமாகக் கொண்டு அநுக்கிரகித்தார்கள்.

மிகச் சிறியகாலத்தில் இப்பெரிய காரியத்தைச் செய்து, நம் நாட்டிலிருந்த மதச்சிக்கல்களைக் களைந்து உபகரித்த இம்மகானைச் சாதாரணமனிதனாக எவ்வாறு மதிப்பது! "க்ஷேமத்தைச் செய்பவர்" எனப்பொருள்படுகிற சங்கரர் இவர் என்பதிற் சந்தேகம் உளதோ! மிகச் சிறியனும் அறிவீனனுமான நான் மகான்களின் அநுக்கிரகத்தைப் பெறவேண்டுமென்கிற அவாவின்மேலீட்டால் குற்றங்களைந்து குணத்தைக்கொள்வது பெரியாரின் இயல்பெனத் துணிந்து, இவர்களுடைய திவ்விய சரித்திரத்தையும், எல்லோராலும் நெடுநாளாய்க்கொண்டாடப்பட்டு விளங்குகின்ற இவர்களது பரம்பரையின் விருத்தாந்தங்களையும் குறிக்கத் துணிந்துள்ளேன்.

---

## அத்தியாயம் 2.

### தேச சரித்திரம். ஓர் ஆராய்ச்சி.

* உலகிலுள்ள எந்நாட்டாரும் அடைந்துள்ள நாகரீகமும், பேசுகிறபாஷையும், மதக்கொள்கைகளும், நமது வேதங்களில் புனிதபூமியெனப் புகழப்பட்டுள்ள "ஸப்தஸிந்தவ" என்ற பஞ்சாப் மகாணத்திலிருந்து பரவின. இவ்விஷயம் அவ்வத்தேசத்தவர்கள் பேசுகிற பாஷைகளாலும், அந்தந்நாட்டாரின் பழயவரலாறுகளாலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆதிமனிதரின் நாகரீகம் தெரியவிரும்புவோர் நமது வேதத்தை நாடவேண்டும் இவ்வேதமே உலகத்திற்கு ஆதிநூலென எல்லோரும் ஒப்புக்கொண்

---

* एतद्देशप्रसूतस्य सकाशादग्रजन्मनः ।
स्वं स्वं चरितं शिक्षेरन् पृथिव्यां सर्वमानवाः ॥ மனு 1, 20.

டுள்ளார்கள். மேலும் நமது புனித நாட்டின் வரலாறுகளனைத்தும் புராண இதிஹாஸங்களில் நன்குவிளக்கப்பட்டுள்ளன. கணக்கற்ற இத்தகைய உபகரணங்களிருந்தும் நமது தேசசரித்திரம் வரிசையாக எழுதப்படவில்லை என்ற குறை இக்காலத்துள்ள நம்மவர்களால் பெரிதும் உணரப்பட்டுள்ளது.

நம்முன்னோர்களில்அறிவாளிகளானஅந்தணர்உலகப்பற்றை முற்றிலும் துறந்தவர். ராஜ்யலோபத்தை மறந்தவர். இறந்து பிறவாப்பதவியைக் கருதினார்கள். தத்துவத்தைத் தேடித்தேடி ஆராய்ச்சி செய்தார்கள். இப்புண்யபூமியைப் பரிமளிக்கச்செய்த அப்புனிதர்கள் அடர்ந்த அடவியில் வசித்தனர் என்பதற்கு இவர்கள் அனுக்ரகித்துள்ள மொழிகளுக்கு "ஆரண்யகம்" என்ற பெயர் வாய்ந்திருப்பதே போதுமான சாக்ஷியாகும். இத்தகைய பெரிய அறிவாளிகள் தங்களது சரித்திரங்களைப்பரவச்செய்கிற புகழையும் வெறுத்தனர் போலும். மிகப் பழமையான வரலாறுகளை விடுத்து, சுமார் 800-வருஷங்களுக்கு முன் கவிசக்ரவர்த்தியாய் விளங்கிய கம்பருடைய காலத்தை எடுத்துக்கொள்வோம். "கர்ணன் பிறப்பும் பின்னுளில்துலங்கிற்று. கம்பன் பிறப்பின்னந் தெரிந்தார்களில்லை முக்காலுமிது மெய்ம்மையே" "பாரதகாலத்தில் பெருங்கொடையாளியாயும் சுத்தவீரனுகவும் விளங்கிய கர்ணனுடையபிறப்பும், கண்ணபிரான் தூதுசென்ற காலத்தில் வெளியாயிற்று. ஆனால் கம்பனுடைய பிறப்பும் வளர்ப்பும் இன்னும் நன்கு தெரிந்தபாடில்லை" எனப்புலவர் புராணம் என்ற நூல் கூறுகின்றது. சமீபகாலத்தில் மகாகவியாய் க்யாதிபெற்றிருந்த இக்கவியின் வரலாறு இவ்வாருயின் 1900-ஆண்டுகளுக்கு முன்னிருந்தாரின் சரிதத்தைப்பற்றிக்கேட்கவும் வேண்டுமோ. உதாரணமாக ஆதி சங்கருடைய அவதார காலத்தை விசாரிக்கப் புகுந்தால் ஸ்ரீ காமகோடிமடத்தில் கி. மு. 508-என்றும், ஸ்ரீ சிருங்ககிரியில் கி. மு. 44-என்றும், அந்தந்த மடத்துப் பரம்பரையால் அறிகிறோம். காமகோடிகணக்கின்படி சங்கார் சித்தியடைந்த காலத்தை அவதாரகாலமாக த்வாரகை பரம்பரை கூறுகின்றது. இக்காலத்துள்ள சரித்திர நிபுணர்கள் கி. பி. 808-ஐ நமது ஆசாரியரின் காலமெனக்கூறத்துணிந்துவிட்டனர். சங்கருடன் இருந்ததாகக் கருதப்படுகிற ஆநந்தகிரி என்பவர் 800-வருஷங்களுக்கு முன்னர் விளங்கிய ஸ்ரீ ராமானுஜ

மத்வாசார்யர்களே ப்ரஸ்தாபிக்கின்றனர். மேலும் கி. பி. 1200-ல் க்யாதிபெற்றிருந்த பாணன், மயூரன், தண்டி, ஸ்ரீ ஹர்ஷன், முதலிய கவிகளை நமது சங்கரர் வென்று விருது பெற்றதாக ஸ்ரீ வித்யாரண்யர் தமது சங்கர திக்விஜயம் அத்யாயம் பதினைந்தில் கூறுகின்றனர். ஸ்ரீ காமகோடிபீடம் 37-வது ஸ்வாமிகளான அபிநவ சங்கரர் சரித்திரத்தை காச்மீர கவியாகிய வாக்பதிபட்டர் என்பவர் இயற்றியுள்ளார். சங்கரேந்த்ர விலாஸம் என்ற இந்த நூல் ஒன்றே எல்லோரையும் மயங்கச்செய்ததுபோலத் தோன்றுகிறது. இந்த அபிநவ சங்கரேந்த்ராளுடைய சரித்திரங்களில் பல விஷயங்களை ஆதிஸ்வாமிகளுடையதாகப் புகுத்திவிட்டனர். முற்கூறிய ஆநந்தகிரி என்பவர் சிதம்பரத்தைப் பிறப்பிடமாகவும் விசுவஜித் என்பவரைத் தந்தையாகவும்கொண்ட அபிநவ ஆதி சங்கரர் எனக் கூறுகின்றனர். இதனை வேண்டுமென்று செய்ததாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில் நமது ஆதிகுருவின் பிறப்பிடம் தக்ஷிணதேசமாயினும் அவர்கள் க்யாதியடைந்ததெல்லாம் உத்தரதேசம். இவர்களுக்குப் பின் வந்த ஆசாரியர்களில் பெரும்பான்மையோரும் அவ்விடத்தில் கீர்த்திபெற்றனர். வேதாந்த க்ரந்தங்கள் எல்லோரும் விருப்புடன் ச்ரவணம் செய்யக்கூடியனவல்ல. மேலும் இந்நூல்கள் வடமொழியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப்பாஷையை அறிந்திருந்தவர் மிகச்சிலரே. இதுகாரணம் பற்றியே நமது தமிழ் நூல்களில் ஆசார்யபரம்பரையைப் பற்றி அதிகம் ப்ரஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால் இம்மகானுடைய அத்வைதம் மாத்திரம் எல்லோராலும் கையாளப்பட்டிருக்கின்றது. ஜைநம், பவுத்தம், முதலிய மதப்ரசாரங்களால் அத்வைதமதம் அக்காலத்தில் பலரால் விரும்பப்படவில்லை. வடநாட்டாருக்கும் நமக்கும் இக்காலம் போல் இவ்வளவு அந்யோந்ய பாவம் அக்காலத்தில் இல்லை. "வடதிசைப் பார்ப்பான் தென்திசைக்கேகில் நடையது கோணிப்புலையனுவான்" என்று ஒரு த்ராவிட நூல் (கபிலர் அகவல்) கூறுகின்றது. இம்மாதிரியான எண்ணிறந்த காரணங்களால் நமது தேசசரித்திரம் ஒருமைப்பாடில்லாமல் பலபடக் கூறப்பட்டிருக்கின்றது.

இப்பால் இந்துதேசம் முழுதும் ஒன்றாயிற்று. பல பாஷைகளிலும் எழுதப்பட்ட நூல்கள் எல்லோரும் அறியக்கூடியவாறு பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பூமியில்

புதையப்பட்டிருந்த பழமையான நாணயங்களும், சிலாசாஸங்களும் பண்டைச் சரிதங்களை விண்டுவிட்டன, நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி நம் நாட்டில் சஞ்சாரம் செய்தபல அன்னியாது வ்ருத்தாந்தங்களாலும் நமது தேசசரிதம் விசதமாகின்றது. இப்புதிய உபகரணங்களைக் கொண்டு பல நிபுணர்கள் சரித்திர ஆராய்ச்சி செய்கின்றார்கள்.

---

## அத்தியாயம் 3.

### சங்கர பூர்வாசாரியர்.

அத்யாத்ம வித்தைகளுக்கு ஆசிரியர்களைக் கூறுமிடத்து, சிவன், விஷ்ணு, பிரமன், வசிஷ்டர், சக்தி, பராசரர், வ்யாஸர், சுகர், கௌடபாதர், கோவிந்தர், சங்கரர் ஆகிய இவர்களை ப்ரஸ்தாபிப்பது முறை. இவ்வரிசையில் கௌடபாதர், கோவிந்தர், இந்த மகான்களிருவரும் நம் சங்கருடைய பரம குருவாகவும் குருவாகவும் முறையே அமைகின்றனர். ஆசார்யரும் தமது நூல்களில் இவ்வாறே கூறிப் புகழ்ந்திருக்கின்றார்கள். இவ்விரு பெரியாரின் சரித்ரம் நன்கு புலப்படவில்லையெனினும் தக்க ஆதாரங்களுடன் ராமபத்ரதீக்ஷிதர் இயற்றியுள்ள பதஞ்சலி விஜயத்தில் கூறியவாறு கூறுகின்றேன்.

பாணினீயத்திற்கும், காத்யாயன வார்த்திகத்துக்கும் லோகோபகாரமாகப் பாஷ்யம் இயற்றுவதற்கென ஆதிசேஷாம்சமாகப் பதஞ்சலி முனிவர் அவதரித்தனர். பாணினி முனிவர் அனுக்ரஹித்த வ்யாகரணம் முதலாவது ஸூத்ரம் நடராஜாவின் கையிலுள்ள உடுக்கையின் சப்தமாதலின் அந்த நடராஜமூர்த்தத்தில் பேரன்பு வாய்ந்தவர். சிதம்பர க்ஷேத்திரத்தில் வசித்தவரெனக் கூறப்படுகின்றனர். இவ்வடியாரின் வேண்டுகோளுக்கிணங்கிச் சிவபிரான் நடனம் செய்ததாகப்புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளது. "உலகில் பாம்பாட்டிகள் பாம்பை ஆட்டிவைப்பதுண்டு. இந்தச் சிதம்பரக்ஷேத்திரத்தில் ஒரு பாம்பு பாம்பாட்டியை ஆட்டிவைத்த புதுமையைக் கண்டேன்" எனப் பதஞ்சலிக்கு நடனம் செய்த விஷயத்தை ஒரு கவி வியந்து கூறுகின்றார். (சிதம்பரமும்மணிக்கோவை) இவர் தமது சுயரூபம் தரித்து ஆயிரம் முகங்களோடு கணக்கற்ற சீடர்களுக்குத் தாமியற்றியருளிய மகாபாஷ்யத்தைப் பாடஞ்சொல்வது வழக்கம். இவ்வாறாக ஒருநாள் ஏககாலத்தில்

பலருக்குப் பாடம் சொல்லும் விந்தையை அறியவிரும்பிய சிஷ்யர்களில் ஒருவன் இப்பதஞ்சலி முனிவர் தன்னை மறைத்திருந்த திரையைத் தூக்கிப்பார்க்க அவரது முகத்தினின்று வெளிப்போந்த விஷஜ்வாலையால் எல்லோரும் சாம்பலாயினர். இதனைக் கண்ணுற்ற முனிவர் துக்கமுற்றிருக்குங்கால் ஆசிரியரது அனுமதியின்றி வெளியே சென்றிருந்த சிஷ்யனொருவன் எதிரில் வந்து தன்னை மன்னிக்குமாறு விண்ணப்பித்து நின்றான். தன்னிடம் கூறாது வெளிச்சென்ற சீடனிடம் சீற்றங்கொண்ட முனிவர் அவனை "பிரமராக்ஷஸ் ஆகக்கடவாய்" எனச் சபித்தனர். சாபம் ஏற்று வருந்தி மன்னிப்புவேண்டி நின்ற சிஷ்யனுக்கு அவன் கற்றுணர்ந்த மகாபாஷ்யமனைத்தையும் தக்கவனை வேறு ஒருவனுக்கு உபதேசித்தபிறகு சாபவிமோசனம் ஆம் எனக்கட்டளையிட்டனர். அவ்வாறே பிர்மரக்ஷஸான சிஷ்யன் உச்சினி நகரைச் சார்ந்துள்ள கானகத்தே ஓர் ஆலமரத்தில் தங்கி, அவ்வழியே செல்வாரை வ்யாகரணபரீக்ஷை செய்வதும் விடையளிக்க இயலாதாரை விழுங்குவதுமாகக் காலங்கழித்தான்.

இவ்வாறிருக்க, ஓர் சமயம் சந்திரன் என்ற ஓர் அந்தணச் சிறுவன் அவ்வழியே சென்றான். இவனைச் சந்திரகுப்தன் எனவும் சிலர் கூறுகின்றனர். இவன் பிரமராக்ஷஸன் வினவிய வினாக்களுக்குத் தக்கவிடை பகர்ந்தான். தனக்கு சாபவிமோசனம் ஆகுந்தருணத்தை உணர்ந்த அந்த ரக்ஷஸ் மகாபாஷ்யமனைத்தையும் பதஞ்சலி முனிவர் கூறியவாறு கூற சந்த்ரனும் ஆலமரத்தின் இலைகளைப் பறித்து முட்களால் குறித்துக்கொண்டான். தனது குருவாகிய பிரமரக்ஷஸ் நெடுநாள் தங்கிய மரத்தின் இலைகளைப் புனிதமாக மதித்தான் போலும்.

சாபவிமோசனம் பெற்ற பிரமராக்ஷஸன் பழைய மனித உருவத்துடன் புண்ய ஸ்தலயாத்திரை செய்து வருகையில் சுகப்பிரும்மரிஷியைத் தரிசித்து அவரால் ஸந்யாஸம் பெற்று விளங்கினார். கௌடபாதர் சுகமுனிவரது சிஷ்யர் என நாம் முன்னம் சொல்லியது இங்கு நன்கு பொருந்துகின்றது. பிறகு இமயமலைக்குச்சென்று ப்ராவ்ருத் ஒன்ற காச்மீர தேசத்துத் தக்ஷசிலா வேந்தனால் போஷிக்கப்பட்டு அங்கு நெடுநாள் வசித்தனர். இவர்தான் நமது ஆசாரியாரின் பரமகுருவாகிய கௌடபாதர் இந்த விருத்தாந்தம் கௌடபாதோல்லாஸம் என்ற நூலில் காணப்படுவதாக

ஆத்மபோதர் கூறுகின்றார். மாண்டுக்யகாரிகையும், சாங்க்யகாரிகைக்கும், உத்தரகீதைக்கும் வ்யாக்யானங்களும், இந்த மகானுன கௌடபாதர் அருளியிருக்கிறார்கள்.

பாணினீய வ்யாகரண மகாபாஷ்யம் கற்றுச்சென்ற சந்த்ரன் உச்சினி நகரம் செல்லுகையில் ஒரு சூத்ரஸ்திரீயையும், பிறகு வைசிய, க்ஷத்திரிய, பிராமண ஸ்திரீகள் மூவரையும் மணந்து கொண்டார். இவர்களிடம் முறையே பர்த்ருஹரி, பட்டி, விக்ரமன், வரருசி என்ற நான்கு புதல்வர்களைப் பெற்று அவர்களுக்கு, மகாபாஷ்யத்தைப் போதித்துச் சுகமே வாழ்ந்தனர். காலம் செல்லச் செல்ல உலகப்பற்றை வெறுத்துத் தமக்குப் பாஷ்யம் போதித்த கௌடபாதரையணுகி அவரிடம் உபதேசம் பெற்றுத் துறவியானார், பிறகு மகாபாஷ்யத்தைக் காச்மீரம் முதலிய பல நாடுகளிலும் ப்ரவசனம் செய்துகொண்டு நருமதையாற்றங்கரையில் ரமணீயமான ஒரு பர்ணசாலையமைத்து ஆங்கு தவம் புரிந்தனர். இவர்தான் நமது ஆசாரியாரின் குருவாகிய கோவிந்தபகவத்பாதர். *

---

## அத்யாயம் 4
## ஸ்ரீ சங்கர அவதாரகாலம்.

இம்மகானுடைய ஜீவ்ய சரித்ரம் பற்பல புராணங்களாலும், கவிகளாலும், விஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் பாஷை முதலிய எண்ணிறந்த பாஷைகளில் எழுதியுள்ள சங்கர விஜயங்கள் நம் நாடெங்ஙனும் உலவுகின்றன. விதேசவாசிகளான பலர் இப்பரம புருஷரின் வரலாறுகளை நன்கு ஆராய்ச்சி செய்து ப்ரசுரம் செய்துள்ளார்கள். ஆதலின் இவர்கள் விளங்கிய காலத்தையும் சிஷ்யர்களின் காலத்தையும் ப்ரபாவத்தையும் நியமனம் செய்துள்ள மடங்களையும் அனுக்ரகித்த நூல்களையும் பற்றிச்சுருங்கக் கூறி இப்பெரியாரின் ப்ரதிநிதிகளாய் ப்ரக்யாதி பெற்றோங்குகிற நமது ஆசார்யர் வரையிலுள்ள பரம்பரையின் விவரணத்தை விஸ்தாரமாக எழுதுவது அடியேனது நோக்கமாதலின் இப்பால் ஆதிசங்கரரது அவதாரகாலத்தைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

---

* जयतादुपरेवमात्तधामा जयगोविन्दमुनिस्सचन्द्रनामा ।
குருரத்னமாலை—11.

நமது சங்கரபகவத் பூஜ்யர்களுடைய அவதாரகாலத்தை நிர்ணயம் செய்வதற்கு *வாயு, பாகவத, விஷ்ணுபுராணங்களும் ஆதி முதல் கி. பி. 1128-ல் காச்மீர வேந்தனுக அமர்ந்த ஜயசிங்கன் காலம் வரையில் பற்பல ஆதாரங்களுடன் கல்ஹணர் என்ற கவி எழுதியுள்ள "ராஜதரங்கிணீ" என்ற க்ரந்தமும், ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களின் பரம்பரையில் 59-வது ஸ்வாமிகளான அத்வயாத்ம ப்ரகாசருடைய ஆப்தசிஷ்யராகிய ஆத்மபோதர் எழுதியுள்ள "ஸுஷமா" என்ற வியாக்யானத்துடன் இணைக்கப்பெற்றதும் 56-வது ஸ்வாமிகளின் சிஷ்யரான ஸதாசிவ ப்ருப்.மேந்திரர் அனுக்ரகித்ததுமான குருரத்னமாலை என்றநூலும்ஆதாரமாகவுள்ளன.

புராணங்களை உற்றுநோக்கினுல், கலியுகாதி 2593-க்குச் சரியான [கி-மு-508] நந்தன வருஷம் வைசாக சுக்லபஞ்சமி புனர்பூசம் தனுர்லக்னம் கூடிய புண்ணியகாலத்தில், சூரியன், செவ்வாய்,சனி, குரு, இந்நால்வரும் கேந்திரம் பெற்றிருக்கும்பொழுது நமது ஆதிஸ்வாமிகள் அவதரித்ததாகக் காண்கின்ருேம்.

கி-மு. 326-ல் க்யாதிபெற்ற சாணக்கியரால் தமது அர்த்த சாஸ்திரத்தில் கொண்டாடப்பெற்ற வாயுபுராணம் சங்கரர் அவதரிக்கப்போவதாகக் கூறுகின்றது. புராண இதிஹாஸங்களின் கூற்று இவ்வாருக தற்போது கிடைத்துள்ள சிற்சில ஆதாரங்களை உபகரணங்களாகக்கொண்டு ஸ்ரீ சங்கரர் அவதாரகாலத்தை ஒருவாறு ஊஹிப்போமாக.

---

* ॥ कल्यादौ द्विसहस्रान्ते ॥

பவிஷ்யோத்தரபுராணம்.

कल्यादिमे महादेविसहस्रद्वितयात्परम् ॥
केरलेशशलग्रामे विप्रपत्न्यां मदंशजः ।
भविष्यति महादेवि शङ्कराख्यो द्विजोत्तमः ॥

சிவாஹஸ்யம் அம்சம் 9 அத்யாயம் 16.

तिष्ये प्रयात्यनलशेवधिबाणनेत्रे (2593)
योनन्दने दिनमणावुदगध्वभाजि ॥ பிராசீன சங்கர விஜயம்.
चतुर्भिस्सहशिष्यैस्तु शङ्करोऽवतरिष्यति ।

வாயுபுராணம்.

நமது பிராசீனமான சரித்திர ஆராய்ச்சிக்கு ஸர்வஸாதாரண மாய் எல்லோரும் அங்கீகரிக்ககூடிய காலம் கி-மு. 326. இந்தக் காலத்தில் தான் சந்திரகுப்த மௌரியனும் சாணக்யனும் விளங்கி னார்கள். நமது புராணங்களை உற்றுநோக்கின் மௌர்யசக்ரவர்த் திகள் மகதநாட்டை வாசஸ்தானமாகக்கொண்டு 137-வருஷங்கள் பாடலீபுரத்தில் ஆண்டதாகப் புலப்படுகின்றது. ஆகவே இவ் வம்சாவளியில் கடைசி வேந்தனான பிருகதச்வன் என்பான் கி-மு. 189-ல் ராஜ்யாதிகாரத்தை இழந்திருக்கவேண்டும்.

பிருகத்ரதன் எனவும் கூறப்படுகிற இம்மன்னன் நியாய விரோதமாகப்பரிபாலனம்செய்துவந்தான். இதனைச்சகியாத புஷ்ய மித்திரன் என்ற சேனைத்தலைவன் இவனைத்தனியே அழைத்துப் போய் வஞ்சகமாகக்கொன்ற ‡பிறகு, தானே வேந்தனெனச் சிங் காதனமேறியதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. இந்தப் புஷ்ய மித்திரன் நமது புராணங்களிலும் காவ்ய நாடகங்களிலும் பெரி தும் கொண்டாடப்பட்டவன். மிளிந்தன் என்ற ஒரு க்ரேக்க வீரன் பெரும்படையோடு நமதுநாட்டில் நுழைந்து பாடலீபுரம் வரையில் வென்று ஜயக்கொடி நாட்டினான். இச்சம்பவம் கி-மு. 156-153-ல் நிகழ்ந்தது. இவ்விதேசவீரனைப் போரில் முறிய டித்து வெருட்டியவன் இப்புஷ்யமித்திரன். இந்த விஷயம் ஏழா வது நூற்றாண்டில் இருந்த பாணபட்டனாலும் "மாளவிகாக்நிமித் ரம்" என்ற நாடகம் 5-ம் அங்கத்தில் காளிதாசனாலும் விளக்கப் பட்டுள்ளது. மிளிந்தனை வென்ற இவ்வேந்தன் அவ்வெற்றியை விளக்கவென ஒரு அசுவமேதம் செய்தனன். அந்த யாகசாலை யில் பதஞ்சலி முனிவர் வீற்றிருந்த விஷயம் §பாணிநீயமகாபாஷ் த்தால் தெள்ளிதெனப் புலப்படுகின்றது.

புஷ்யமித்திரன் கி. மு. 149-ல் இறந்தான். இவன் ராஜ்ய பரிபாலனம் செய்த நாற்பது வருஷகாலத்தில் பதஞ்சலி முனிவ ரும் இவரது சிஷ்யரான கௌடபாதரும் இருந்திருத்தல்வேண் டும். கௌடபாதரின் மாணாக்கரான சந்திரன் க்ஷத்திரியஸ்திரீயி

---

‡ प्रतिज्ञादुर्बलं च बलदर्शनव्यपदेशा दर्शिताशेष सैन्य:
सेनानीरनार्यो मौर्यं बृहद्रथं पिपेष पुष्यमित्र: स्वामिनम् ॥
ஹர்ஷ சரித்ரம்.

§ इहपुष्यमित्रं याजयामहे । பதஞ்சலி மஹாபாஷ்யம்

டம் அடைந்த புத்திரனான விக்ரமன் சகமொன்று கி-மு.56-முதல் உத்தரதேசத்தில் வழங்கிவருகிற விஷயம் இவ்வாராய்ச்சிக்கு ஒருவாறு பொருந்துகிறது. கி. பி. 375-ல் ராஜ்யம் வகிக்கத்தொடங்கிய சகாரிவிக்ரமாதித்யன் காலத்திற்கு 358-ஆண்டுகளுக்குமுன்னர் ஒரு விக்ரமன் விளங்கியதாக ராஜதரங்கிணீ (II-5, 6) கூறுகின்றது. இக்கணக்கின்படியும் கி-பி. 17-ம் ஆண்டில் ஒரு விக்ரமன்ஏற்படுகின்றான். ஆகையால் பூர்வாச்ரமத்தில் சந்திரன் என்றழைக்கப்பட்ட நமது சங்கரருடைய குருவாகிய கோவிந்தபகவத்பாதர் கி-பி. முதல் நூற்றாண்டில் இருந்திருத்தல் வேண்டும்.

புஷ்யமித்திரன் காலகதியடைந்தபிறகு அவனது வம்சத்தில் கடைசியரசனான தேவபூதியென்பவன்அமாத்யர்களில்ஒருவனான வாசுதேவனால் கொல்லப்பட்டான். இவ்வாறு கி. மு. 72முதல் கண்வாயனம் என்ற ஒரு வம்சம் மகததேசத்தை ஆளத்தலைப்பட்டது. இந்தப் பரம்பரையின் அந்திமனான வேந்தனாகிய சுசர்மன் என்பவனைச் சிந்துகன் என்றழைக்கப்பட்ட ஒரு ஆந்திரப் படைவீரன் வென்று ராஜ்யபாரம் வகித்தான். (28 கி. மு. ஸ்மித்துரை எழுதிய பிராசீன இந்திய சரித்ரம் பக்கம் 208) இவ்வாந்திர வம்சத்தில் ஹாலன் என்ற ஓர்அரசன் மநுநெறி வழுவாமல் அரசு செலுத்திவந்தான். காசியிலிருந்து திக்விஜயம் செய்யக்கிளம்பிய நமது ஆதிசங்கரர் அங்கு செல்லவேண்டியது அவசியமில்லைஎனக் கருதி ஜைநம் பௌத்தம் முதலியன அதிகமாகக் கொண்டாடப் பட்டுவந்த மேற்குத்திசையை நோக்கிச்சென்றதாக குருரத்னமாலை கூறுகிறது. †

இந்த ஹாலன் கி-பி. 69 ம் ஆண்டில் விளங்கியதாக ப்ராசீன சரித்ரஆராய்ச்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது- நமது ஆசார்யர் கி-பி. முதல் நூற்றாண்டில் விளங்கியதாகக் கொள்வதற்கு இதனை ஓர் ஆதாரமாகக் கூறலாம்.

சங்கரருடைய குருநாதராகிய கோவிந்தயதீந்திரர் முன்னர் கூறியபடி ‡சந்திரன் என்றழைக்கப்பட்ட பூர்வாச்ரமகாலத்தில்

---

† अपिहालनृपालपालितं द्रागपहायेन्द्रहरिन्मुखं वितन्द्रम् ।
श्रितमुर्मुरमुद्धरं त्रिवेण्यां यतिराड्भट्टमघानिवोवितृण्वतांम् ॥
குருரத்னமாலை. 21.

பாணினீய மகாபாஷ்யத்தை முதன் முதல் காச்மீரதேசத்தில் பரவச் செய்தபொழுது அபிமன்யுவென்றஅரசன் அந்நாட்டை ஆண்டு வந்ததாக ராஜதரங்கிணியில் (I-176) குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ராஜன் கி-பி. 40-ம் ஆண்டில் ராஜ்யம் வகித்ததாக ப்ராசீன நாணய ஆராய்ச்சியால் தற்போது நிர்ணயத்திருக்கிறார்கள். நம் ஆசாரியரது காலவரைக்கு இஃதும் ஓர் ஆதாரமாகக் கூடும்.

ஸ்ரீகாமகோடிபீடாதிபர்களின் பரம்பரையில் ஆதிசங்கரர்காலம் கி-மு 508-ல் துவக்கி 13-வது ஸ்வாமிகளான வித்யாகனர் காலமாகிய கி-பி 317 வரையில் உள்ள ஸ்வாமிகள் பதின்மூவருக்கும் சராசரி 63- ஆண்டுகளும் கி-பி1908-ல் ஸித்திபெற்ற ஆறுவது சந்த்ரசேகரேந்திரர் வரையிலுள்ள ஸ்வாமிகள் ஐம்பத்துமூவருக்கும் சராசரி 30-ஆண்டுகளும் கிடைக்கின்றன. மேலும் வித்யாகனஸ்வாமிகள் காலம் வரையில் கலியுகாதி ஆண்டுகளும் பிறகு சாலிசக வருஷங்களும் வம்சாவளியில் குறித்திருக்கக் காண்கின்றோம். பீடாதிபத்யம் பெற்ற பிறகு ஜீவகாலத்தைக் காட்டுகிற மேற்குறித்த சராசரி 30-வருஷங்கள் ஒப்புக்கொள்ளக் கூடியனவே ஆகும். இவ்வாறே வித்யாகனருக்கு முந்தியஸ்வாமிகளுக்கும் கணக்கிட்டால் நமது ஆதிஸ்வாமிகளின் காலம் முன்னர் ஆதாரமாகக் கூறியவாறு பொருந்துகின்றது.

மேலே குறித்துள்ள சிற்சில ஆதாரங்களால் ஆதிசங்கரரின் காலம் கி-பி முதல் நூற்றாண்டில் ஏற்படக்கூடியதாயிருக்க கி-பி எட்டாவது நூற்றாண்டை அம்மகானுடைய காலமாகக் கூறுவது முற்றிலும் பொருந்தாது. ஸ்ரீ காமகோடிமடத்தின் பரம்பரையைக் கொண்டு இவ்விஷயத்தை நன்கு நிரூபிக்கலாம். ஆதிமுதல் கி-பி 317-ல் விளங்கிய வித்யாகனஸ்வாமிகள் வரையில் கலியாகாதி வருஷங்களும் பிறகு நாளது வரையில் சாலிசகவருஷங்களும் காமகோடி வம்சாவளியில் குறித்துள்ளதாய் முன்னமே சுட்டிக்காட்டியுள்ளோம். இவ்வாறு சகவருஷக்கணக்கு ஏற்பட்ட வித்யாகனர் காலம் தொடங்கி ஸ்ரீ காஞ்சீமடத்தில் கீர்த்திவாய்ந்து விளங்கியவர்களின் சரித்ரம் தற்கால ஆராய்ச்சிக்கு நன்கு பொருந்துகின்றது. உதாரணமாக 19-வது ஸ்வாமிகளான மூகசங்கரர் கி-பி 398-437-ல் காச்மீரப்ராந்தங்களில்அத்வைதப்ராசாரம் செய்து அநுக்ரகித்தார்கள். இரண்டாவது சந்த்ரகுப்தன் எனக்கூறப்படு

கிற சகாரிவிக்ரமன் 375-413-ல் ராஜ்யபாரம் வகித்தான். இந்தக் காலவரையில் மாத்ருகுப்தன் என்ற ஒரு அந்தணச்சிறுவன் சகாரீவிக்ரமாதித்யனால் காச்மீர வேந்தனாக அமர்த்தப்பட்டதும், இவன் கர்வத்தை அடக்குவதற்காக மூகசங்கரர் குதிரைப்பாகனை யும், யானைமாவுத்தனையும் கவிகளாகக்கடாக்ஷித்ததும், கர்வம் அடங்கிய மாத்ருகுப்தன் சங்கரரைப்பணிந்து ப்ரவரசேனன் என்ற ராஜகுமாரனிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்துத் துறவியானதும், மூகசங்கரருடைய திவ்யசரித்திரத்தை எழுதுங்கால் விளக்குவாம். இங்கு கூறிய சரித்திரமனைத்தும் கல்ஹணர் என்ற காச்மீரகவி ஒருவர்ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்எழுதியுள்ள ராஜதரங்கிணீ என்ற நூல் 3=106-323; 3=105-7அத்தியாயங்களிலும், 400-வருஷங்களுக்கு முன் விளங்கிய யோகிதிலகரான ஸதாசிவப்ரும்மேந்திரர் அருளிய குருரத்னமாலை வ்யாக்யானத்திலும் காணக் கிடைக்கின்றன. ஆத்மபோதர் என்ற யதியொருவர் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் குருரத்னமாலைக்கு வ்யாக்யானம்வரைந் துள்ளார்கள். மேலும்ராஜதரங்கிணீ 4=131,145அத்தியாயத்தில் லளிதாதித்யமுக்தாபீடன் என்ற மன்னன் தக்ஷிணதேசங்களில் படையெடுத்த விஷயம் கூறப்படுகின்றது. இவனது சரித்திரத் திரத்தை பவபூதி என்ற வடமொழிப்புலவர் மகாபுருஷவிலாஸம் என்ற நாடகத்தில் குறிக்கின்றார். கி.பி 655-668-ல் காமகோடி பீடாதிபர்களாய் வீற்றிருந்த 30-வது ஸ்வாமிகளான சீலநிதி ப்ரும்மானந்த கனேந்த்ரரைத்தரிசிக்க மேற்குறித்தவேந்தன்காஞ்சிக் குச் சென்றதாகப் பவபூதி கூறுகின்றார். தேசசரித்திரத்திற்குப் பொருந்துகிறஇம்மாதிரியானஎண்ணிறந்தவிஷயங்கள் காமகோடி பரம்பரையில் காணக்கிடைக்கின்றன.

ஸம்க்ஷேபசாரீரகம் ஸர்வக்ஞவிலாசம், பதகசதகம், நைஷ்கர்ம்யசித்தி சந்திரிகை முதலிய பற்பலநூலாசிரியர்களும், கோகர்ண க்ஷேத்திரத்தில் உள்ள ஆலயத்தில் லிங்கரூபியாய் மறைந்தவர்களும் அகஸ்தியரைத் தரிசித்துப் பஞ்சதசாக்ஷரீமந்திர உபதேசம் பெற்றவர்களும் தங்கப்பல்லக்கில் திக்விஜய யாத்திரை செய்து தினந்தோறும் ஆயிரம் அந்தணர்களை உண்பித்தவர்களும் சார்வாக நாஸ்திகனான தர்தீவி என்றவனைவென்று, சிலகாலம் காச்மீரதேசத்தைப் பரிபாலனம் செய்தவர்களும் (ஸ்டீன்ஸ் துரை



ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள்.

மொழிபெயர்த்த ராஜதரங்கிணீ I-65) ஆசேது இமாசலம் உள்ள எல்லோராலும் கொண்டாடப்பட்டவர்களுமான மடாதிபதிகளில் பதினெழுவர் ஐந்தாவது நூற்றாண்டுக்கு முன்னமேயே ஸ்ரீ காமகோடிபீடத்தில் விளங்கி அநுக்கிரஹித்த விஷயம் பின் எழுதப் போகிற பரம்பரையின் விவரணங்களால் நன்கு விளங்கும்.

இவ்வாறிருக்க கி-பி எட்டாவது நூற்றாண்டில் ஆதி சங்கரர் அத்வைத சித்தாந்தம் செய்து விளங்கியதாகக் கூறுவது முற்றிலும் தவறு மேலும் மேலே எழுதப்பட்டுள்ள பற்பல ஆதாரங்களால் கி-மு. 508ஐ அப்பெரியாரின் காலமாகக்கொள்வதும் இயலாது. ஆதலின், ஆதிசங்கராசாரியஸ்வாமிகள் கி.பி முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவதரித்து, அத்வைத ஸ்தாபனம் செய்து அநுக்கிரகித்ததாகக்கொண்டு அவதாரகாலம் என்ற விஷயத்தை இதனோடு நிறுத்தி, சங்கரசரித்திரத்தைச் சிறிதுகூறுவாம்.

---

## அத்தியாயம் 5

### * ஸ்ரீ சங்கர திக்விஜயம்.

கடவுளால் கடாக்ஷிக்கப்பெற்றது எனவும், அனாதியெனவும் புகழப்பட்ட வைதிகமார்க்கம் வழுவிற்று. சமணர், பௌத்தர் நாஸ்திகர் முதலிய எண்ணிறந்த மதத்தினர் நாடெங்கும் பரவினர். கலியின் கொடுமை கடுமையாயிற்று. காபாலிகரும், சாக்தேயரும் நரபலி முதலியன கொடுத்து ஆராதிப்பதில் கருத்தாயிருந்தனர். தர்மம் குன்றி அதர்மம் ஓங்கிற்று. இக்காலத்தில் ஸர்வ ஜீவ தயாபரரான பரமாத்மாவின் அம்சமாய் ஒரு மகான் தோன்றுவது அவசியமல்லவா? இவ்வாறு சம்பவிக்குமெனக் கண்ணபிரானும் பார்த்தனுக்கு உபதேசித்தது உண்மையன்றோ! சங்கரர் அவதரித்தார். மனோவாக்குக்கெட்டாத பரம்பொருளையும்,

---

* लोकानुग्रहतत्परः परशिवस्संप्रार्थितो ब्रह्मणा
चार्वाकादिमतप्रभेदनिपुणां बुद्धिं सदा धारयन् ।
कालडाख्य पुरोत्तमे शिवगुरुर्विद्याधिनथश्च यः
तत्पत्न्यां शिवतारके समुदितः श्रीशंकराख्यांवहन् ॥

மார்க்கண்டேய ஸம்ஹிதை

வினைப்பயனால் மயக்கமுற்றுத்தியங்கும்ஜீவகோடிகள் உய்யும்உபாயத்தையும் தெளிவுற விளக்கி, துர்மத கண்டனம்செய்து உலகுக்கே பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அத்வைத மார்க்கத்தை ஸ்தாபித்தார்.

இம்மகான் அவதரித்த ஸ்தலம் காலடி என்னுமூர். இஃதுகொச்சி சோரனூர் இருப்புப்பாதையில் ஆள்வாய் என்ற க்ராமத்திற்கு ஆறுமைல் கிழக்கிலுள்ளது. "ஸப்தவ்யாஹ்ருதி" என்றமகாமந்திரத்தை வெளியிட்ட முனிவர் எழுவரில் தலைமைபெற்றவரும் யோகியாகிய தத்தாத்ரேயரின் தந்தையும், ரிஷிசிரேஷ்டருமான அத்ரியின் வம்சத்தில் ஆதிசங்கரர் தோன்றினர். வித்யாதிராஜர் என்பவரும், சிவகுரு என்பவரும் முறையேபாட்டனும் தந்தையுமாகக் கொண்டனர். பாக்யவதியான இவரது அன்னையின் திருநாமம் ஆர்யாம்பாள். இவரதுதந்தை மூன்றாவது வயதில் பரலோகம் சென்றதாகச் சிலரும், ஐந்தாவதுவயதில் ஐயனடி சார்ந்ததாகச் சிலரும் கூறுகின்றனர்.

காமகோடிபீடம்37-வது ஸ்வாமிகளான அபிநவசங்கருடைய சரித்திரத்தை வாக்பதிபட்டர் எழுதியுள்ளார் எனவும், சங்கரவிஜயக்காரர் முதலிய பலரையும் இந்நூல் ஆதிசங்கரரைப்பற்றியது என மயக்குவித்தது எனவும் கூறப்படுகின்றது. * அபிநவசங்கருடைய தந்தை இவர் பிறக்கு முன்னரே முக்திபெற்றனர். இவ்வரலாற்றையும் ஆதிசங்கரர் சரிதையில் புகுத்துக்கூறுபவருமுளர். எது எவ்வாறாயினும் நமது ஆதிகுரு அதிவாலிபத்தில் அருமைத் தந்தையை இழந்தனர் என்பது விசதமாகின்றது. உபநயனம் ஐந்தாமாண்டில் நிறைவேறவே, எட்டாமாண்டில் ஸர்வக்ஞர் ஆயினர். குருகுலவாசம் செய்யும்பொழுது ஒரு ஏழையின்வீட்டினுள் பிக்ஷாடனத்திற்குச் செல்ல, அவள் ஒரு நெல்லிக்கனியைக்கொடுத்தனள். அதை அனந்தமாக ஏற்றுக்கொண்ட நமது குருநாதர் அவ்வில்லத்தினில்பொன்மயமானநெல்லிக்கனியைக்கொட்டுமாறு

---

* अन्योन्यं नामसाम्यादन्यूनानधिकविभवत्वादमानुषाशेषकृत्यवत्त्वाच्च मूलकारेणैव प्रपञ्चयिष्यमाणेभ्यो नवशङ्करेन्द्रादिभ्योऽस्य भेदाग्रहेण जन्म-दिग्विजयनिर्याणप्रमुखेषु स्थलेषु तयोर्द्वयोरपि वृत्तजातमेकतस्संकुलीकृत्य निबबन्धुरस्य किमपि किमप्यर्वाचीनाः अविदितभुवनवृत्तान्ताः कवयः ॥

"கனகதாராஸ்தவம்" என்ற துதியால் திருமடந்தையை வேண்ட, அவ்வம்மையும் அவ்வாறே பொன்மாறிபொழிவித்து அவ்வில்லத்தைக் கொழிக்கச்செய்தனள். பிறகு சங்கரர்சூர்ணிப்புழை என்ற நதியில் மூழ்குங்கால் முதலையால் பிடிக்கப்பட்டு அன்னையை வேண்டி ஸந்யாஸம் பெற்று ஸத்குருவைநாடிப் புறப்பட்டனர்.

முதலையாமாறு சபிக்கப்பற்ற ஒரு யக்ஷன் சங்கருடைய பாதத்தைப் பற்றியதால் சாபவிமோசனம் பெற்றுச் சுயரூபம் தரித்துக் குருவைப்போற்றிச் சென்றனன். இப்பால் நம் ஆசிரியர் நாடுநகரங்களைக் கடந்து, நர்மதாதீரமடைந்து கோவிந்தபகவத்பாதரையணுகி வந்தனம் செய்து நிற்க, அவர் இவரை யாரென வினவினர். சங்கரர் வேதாந்தபரமான "தசச்லோகீ" அல்லது நிர்வாணதசகம் என்றழைக்கப்படுகிற பத்து சுலோகங்களால் தன்னை இன்னாரென் அறிவித்து வணங்கி நின்றார். "தத்துவமனைத்தினையும் உள்ளடக்கியுள்ள விஷயங்களையெல்லாம் சூத்ரங்களால் (கயிறுகளால்) கட்டிய வியாஸரைப் புகழ்வது என்னே! இத்தகைய உபகரணமேயில்லாமல் அனைத்தினையும் கட்டுவித்து தசச்லோகியில் புகுத்திய சங்கரர் ஒருவரே புகழத்தக்கவர்!" என மேற்குறித்த தசச்லோகங்களின் உரையாசிரியராகிய மதுசூதன ஸரஸ்வதீ என்பார் சித்தாந்தபிந்து என்ற தமது வ்யாக்யானத்தில் கூறுகின்றார். இதனைச் செவியுற்ற கோவிந்தயதீந்திரர் திகைப்புற்று சங்கரரைச் சங்கரரே எனத்தேர்ந்தாராயினும் உலகவழக்கத்திற்கு ஒப்ப நமது குருநாதருக்கு உபதேசம் செய்தனர். உபதேசங்களை எற்றபின் ஆசிரியரிடம் விடைபெற்று,புலவர்நிறைந்து விளங்கிய புண்யக்ஷேத்ரமாகிய காசிக்குச் சென்றனர்.

வருணை அஸி என்ற நதிகளின் மத்தியில் இருப்பதால் "வாராணஸி" எனப்பெயர் பெற்றதும், வேதங்களால் புகழப்பட்ட கங்கையாற்றின் தீரத்திலுள்ளதும், புண்யபூமியுமான காசியொன்றே இப்பரதநாட்டில் பெரியஸ்தலம். மிகப்புராதனகாலந்தொட்டு இன்றுவரையில் இந்தஸ்தலம் நன்கு பாராட்டப்படுவதை நாம் கூறவும் வேண்டுமோ. நமது பெரியாரான சங்கரர் இங்கு சில காலம் தங்கினர்.

"த்வாபரயுகங்கள் தோறும் வ்யாஸராகவும், மனுவாகவும் அவதரித்து லோகோபகாரம் செய்வீர்களாக" எனச் சிவபிரான்

திருமாலுக்கும் பிரமற்கும் கட்டளையிட்டதாகச் சங்காஸம்மிதை ஸம்பவகாண்டத்திற் காண்கின்றோம். இவ்வாறே பல வ்யாசர்கள் தோன்றி மறைந்திருத்தல் வேண்டும்.† இத்தகைய மகான்களில் ஒருவர் 555-ஸூத்ரங்களாலாகிய உத்தரமீமாம்ஸா எனவும் ப்ரும்மஸூத்ரம் எனவும், வேதாந்த ஸூத்ரம் எனவும் சொல்லப்படுகிற நூலைத் திருவாய்மலர்ந்தருளினர். இவ்வுத்தரமீமாம்ஸையும் கண்ணபிரான் விஜயனுக்கு உபதேசித்த கீதையும், ஈச, கேன, கட ப்ரச்ன, முண்டக, மாண்டுக்ய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்ய, பிருகதாரண்யகங்களான, பத்து உபநிடதங்களும் சேர்ந்து ப்ரஸ்தானத்ரயம் எனப்பெயர் பெறும். இவைகட்குச் சங்கரர் பாஷ்யங்கள் எழுதிப் பண்டித பாமரர் உணருமாறு விளக்கியுள்ளார். ‡ பகவத்கீதையில் (13-4) கண்ணபிரானல் கொண்டாடப்படுகிற ப்ரும்மஸூத்ரபாஷ்யத்தை வ்யாஸமுனிவர் கேட்டு ஒப்புக்கொண்டதாக சங்கரவிஜயங்கள் கூறுகின்றன. 4-அத்தியாயங்களும், 16-பாதங்களும், 181-அதிகாணங்களும், 555-ஸூத்ரங்களும்கொண்ட இவ்வேதாந்த நூலுக்கு 800-ஆண்டுகளுக்குமுன்னர் விளங்கிய ஸ்ரீ ராமானுஜ, மத்வ, ஆசார்யர்கள் வ்யாக்யானம் செய்திருக்கின்றனர். ஸ்ரீ ராமானுஜர் தமது பாஷ்யம் எழுதுவதற்கு ஆதாரமாக போதாயன விருத்தியென்ற நூலை எங்கிலும் தேடிக் காணுமல் ஸ்ரீ சாரதாபீடத்தில் அதனைப்பெற்று, விசிஷ்டாத்வைதபாஷ்யம் வரைந்தபிறகு ஸ்ரீ சாரதாபீடத்தில் அதனை அரங்கேற்றினர் என்றும், அப்பொழுது அடியில் குறித்திருக்கிற

अन्तस्तद्धर्मोपदेशात् வேதாந்தஸூத்ரம், அந்த்ராதிகரணம், 1-1-21. பாஷ்யத்தில் உதாகரிக்கப்பட்ட

---

† विष्णो विधे युवां भूमौ द्वापरे द्वापरे युगे ।
व्यासो मनुश्च संभूय वेदशास्त्रे उभे युवाम् ॥
संक्षिप्य कुरुतम्.............சங்கர ஸம்மிதை 2-18-19,

‡ अद्वैतवादि विपरीतमतावलम्बि-
हस्ताग्रवर्तिवरपुस्तक मप्यकस्मात् ।
उच्चैः पपात जहसुः श्रुतिमस्तकानि
श्री व्याससचित्तकमलं विकची बभूव ॥ சங்கரதிக்விஜயம்.

**कप्यासं पुण्डरीकमेवाक्षिणी** சாந்தோக்யம் 1-6-6-7

உபநிஷத்து வாக்யத்தின் உண்மைப் பொருளைக்கேட்டு மகிழ்ந்த வாணி ஸ்ரீ ராமானுஜ பாஷ்யத்திற்கு "ஸ்ரீபாஷ்யம்" என்று பெயரளித்து அருளியதாகக் கூறப்படுகின்றது. மேலும், மத்வாசாரியர் வ்யாஸமுனிவரைச் சார்ந்து அம்மகானிடம் த்வைத சித்தாந்தங்களைக் கற்று, அதற்கிணங்கத்தாமியற்றிய பாஷ்யத்துடன் இமயமலைக்குச் சென்று அங்கு வ்யாஸரை சந்தித்துத்தமது பாஷ்யத்தைப் படித்தனர் எனவும், அதில் அடங்கியுள்ள பொருளனைத்தும் தமது அபிப்பிராயம் என அம்முனிவர் ஒப்புக்கொண்டனர் எனவும் சொல்லப்படுகின்றது.

## வியாஸர் காலவரை.

இப்பால், வ்யாஸமுனிவரது காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வது அவசியமாயிற்று. தற்போது நடைபெறுகிற சாலிவாகன சகவருஷம்= 1852 (கி-பி- 1930)

**याता: षण्मनवो युगानि गमितान्यन्यद्युगांघ्रित्रयम् ।**
**नन्दाद्रीन्दुगुणा: (3179)तथा शकनृपस्यान्ते कलेर्वत्सरा: ॥**

சித்தாந்தசிரோமணி

**धूसीकाल (3179) युतं वर्षं कल्यब्दमिति कथ्यते ।**

ஆர்யபடீயம்

மேல்குறித்த வசனங்களால் கலியுகாதி 3179-ல் சாலிவாகனசகம் ஆரம்பமெனத் தெரிகின்றது. ஆகவே தற்கால சகவருஷம் 1852 + 3179-5031 வருஷங்கள் கலியுகாதி ஆண்டுகளாகின்றன.

**कलिद्वापरसन्धौ तु स्थितास्ते पितृदैवतम् ।** (மகா)
**मुनयो धर्मनिरता: प्रजानां पालने रता: ॥**

ஸப்தரிஷிமண்டலம் கலியுக ஆரம்பத்தில் மகம் என்ற நக்ஷத்ரத்தில் இருந்ததாக ப்ருஹத் கர்கமுனி கூறுகிறார்.

* யுதிஷ்டிரர் அரசாண்டகாலத்தில் மேற்குறித்த ஸப்தரிஷி மண்டலம் மகத்தில் தங்கியதாக வாராகி ஸம்மிதை 13-ல் காண்

---

* **आसन् मघासु मुनय: शासति पृथ्वीं युधिष्ठिरे नृपतौ ।**
**षट्द्विकपञ्चद्वि (2526) युतशककालस्तस्य राज्ञश्च ॥**

கின்றோம். ஆகவே கலியுகாரம்பமாகிய இன்றைக்கு 5031 ஆண்டுகளுக்கு முன்னர் பாரதகாலம் ஆகின்றது.

மேலும் கலியுகாதி 653 யுதிஷ்டிரர் காலமென ராஜதரங்கிணீ யில் (1-51) குறிக்கப்பட்டுள்ளது. கலிவருஷம் 666ஐ பராசரரும் 662ஐ ஆர்யபடரும் பாரதகாலமாகத் தங்களது நூல்களில் எழுதியிருக்கின்றனர்.

§1300வருஷங்களுக்குமுன் நமதுநாட்டில் மன்னனாய் விளங்கிய இரண்டாவது புளகேசி என்ற வேந்தன் தான் எழுதிய சாசனம் ஒன்றில் பாரதகாலம் 3735-க்குப் பிறகு சாலிவாகனசகம் 556-ல் அச்சாஸனம் அளிக்கப்பட்டதாகக் குறித்திருக்கின்றான். இதன்படி 3735—556 = 3179 வருஷங்கள் கலியுகாதியா சாலிசககாலம்ஏற்படுவதால் கலியாரம்பத்தில் பாரதப்போர்நடந்ததாகக் கொள்ளவேண்டும். ஆதலின் யுதிஷ்டிரர் காலத்தைக் கலியுக ஆரம்பமாகச் சிலரும், கலியுகாதி ஏழாவது நூற்றாண்டாகச் சிலரும் கூறுகின்றனர்.

வியாஸமுனிவர் கூறிய பாரதத்தைக்கேட்டு ஆனந்தமுற்ற பரிக்ஷித்துக்கும், மகாபத்மநந்தன் என்ற வேந்தனுக்கும் உள்ள வருஷபேதம் 1015 என விஷ்ணுபுராணம் (IV-24-104) கூறுகின்றது. மகாபத்மநந்தனுக்குப்பிறகு, நவநந்தர்கள். பிறகு சந்திரகுப்த மௌர்யன். இவனதுகாலம் கி-மு 326 என முன்னமே கூறியுள்ளோம். நந்தர்களுக்கு 100–ஆண்டுகள் வைத்துக்கொண்டால் கி-மு 1441 பரிக்ஷித்தின் காலமாகின்றது. ஆகவே இன்றைக்கு 3371 வருஷங்களுக்கு முன்னர் வியாஸமுனிவர் விளங்கியதாகக் கொள்ளலாம்.

வேதங்களைத்தொகுத்த இம்முனிவர்தைத்திரீயஸம்ஹிதையில் (IV-4-10-1)க்ருத்திகை நக்ஷத்திரத்தைத் துவக்குகின்றார். * இந்த

---

§ त्रिंशत्सु त्रिसहस्रेषु भारतादाहवादितः ।
सप्ताब्दशतयुक्तेषु गतेष्वब्देषु पञ्चसु ॥ (3735)
पञ्चाशत्सु कलौ काले षट्सु पञ्चशतासु च (556)
समासु समतीतासु शकानामपि भूभुजाम् ॥

* कृत्तिकानक्षत्रमग्निर्देवताग्नेरुचस्थ प्रजापते र्धातुः । யஜுர்வேதம்.

நக்ஷத்திரத்தில் சூரியன் நின்ற காலத்தில் உலகெலாம் இராப்பகல் சமநேரமாயுள்ள விஷு புண்யகாலமாய் இருந்திருத்தல் வேண்டும். இப்பால் அப்புண்யகாலம் உத்திரட்டாதி நான்காம் பாதத்தில் ரவி நுழையும் காலத்தில் ஏற்படுகின்றது. இவ்வாறு மாறுபடுவதைஅயனகதியெனவானசாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன. இவ்வயனகதி வானவட்டத்தை ஒரு முறை சுற்றிவருவதற்கு 25000வருஷங்கள் செல்லும் என்று வானசாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இக்கணக்கின்படி வருஷம் ஒன்றுக்கு 50-விகலைவீதம் அயனகதி ஏற்படுகின்றது. ராசி ஒன்றுக்கு 108000 விகலைகள். பாதம் ஒன்றுக்கு 12000 விகலைகள். மேற்கூறியபடி உத்திரட்டாதி நான்காம் பாதம் முதல் க்ருத்திகை வரையில் 14-பாதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே வேதவ்யாஸாதுகாலம் துவக்கி இன்று வரையில் $12000 \times 14 = 168000$ விகலைகள் அயனகதியில் ஏற்பட்டுள்ளன. வருஷம் ஒன்றுக்கு 50-விகலைகள்வீதம் $168000 \div 50 = 3360$ஆண்டுகள் ஆகின்றன. ஆதலின் இவ்வயனகதியின்படி கணக்கிட்டாலும் மேற்கூறிய வண்ணமே வ்யாஸாதுகாலம்இயைகின்றது.

†மகாபாரதம்அநுசாஸனிகபர்வம்273அத்தியாயத்தில்(26-27-28) பீஷ்மாசாரியார் உத்தராயண புண்யகாலத்தில் நிர்யாணமடைய வேண்டுமென 58-இரவுகள் காத்திருந்து அப்புண்யகாலம்நேர்ந்தவுடன் பரலோகம் சென்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. விவாகமே செய்துகொள்ளாமல் பயங்கரமான விரதம் பூண்டு ஒழுகி ஸந்ததியில்லாமல் சென்ற அம்மகாபுருஷனுடையபரலோக ஸாதனத்திற்காக நாமனைவரும் ரதஸப்தமி புண்ணியகாலத்தில் அவருக்குத் தர்ப்பணஞ்செய்கின்றோம். இந்த ஸப்தமிக்கடுத்த நாள் பீஷ்மாஷ்டமி எனக் கூறப்படுகின்றது. ஆகவே பீஷ்மர் விளங்கிய பாரதகாலத்தில் ரதஸப்தமியன்று உத்தராயணபுண்ய காலம் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

---

† दि ष्ट्या प्राप्तोऽसि कौन्तेय सहामात्यो युधिष्ठिर ।
परिवृत्तो हि भगवान्सहस्रांशुर्दिवाकरः ॥
अष्टपञ्चाशतं रात्र्यः शयानस्याद्य मे गताः ।
शरेषु निशिताग्रेषु यथा वर्षशतं तथा ॥
மகாபாரதம் அநுசாஸனிகபர்வம் அத்யாயம் 276;26,27.

மிகப்புராதன காலத்தில் சந்திரனைக்கொண்டேதான் மாதங்கள் கணக்கிடப்பட்டன. திதி என்றமொழி தியதி எனக் கூறப்பட்டு இப்பால் தேதி எனச் சொல்லப்படுகின்றது. சந்திரகதியைக் கொண்டு ஏற்படும் வருஷம் 360 நாட்களாகவும் சூர்யகதியால் கணக்கிடப்படும் வருஷம் 366தினங்களாகவும் இருப்பதால் இவைகளின் பேதம் ஆறு நாட்களாகின்றன. ஐந்து வருஷங்களில் இப்பேதம் ஒரு மாதம் ஆவதால் சந்திரகதியால் ஏற்படும் மாதங்களை அதிகமாஸமெனப் பெயர் வைத்துள்ளார்கள். மேற்கூறிய ஐந்துஆண்டுகளுக்கு ஒரு முறை சந்திர சூரிய வருஷாரம் ஒன்றிவரும். இந்த ஐந்து ஆண்டுகளை யுகம் என வேதாங்க சோதிடம் கூறுகின்றது.

இவ்வாறு ஒன்றிவருங்காலத்தை உற்று நோக்கினல் தைமீ 25வ ரதஸப்தமி நேர்கின்றது. பாரதகாலத்து உத்தராயண புண்ணியகாலம் இஃதேயாம். இப்பால் மார்கழிமீ 8வ யில் உண்மையான உத்தராயண புண்யகாலம் ஏற்படுகின்றது. இதனல் கிடைக்கிற வித்யாஸம் 46-நாட்கள். 360-பாகங்களாகப் பிறிக்கப்பட்டுள்ள வானவட்டத்தில் இந்த 46-தினங்களையும் 46-பாகங்களாகக் கொள்வோம். பாகம் ஒன்றுக்கு 60-கலைகளும், கலை ஒன்றுக்கு 60-விகலைகளும் ஏற்படுவதால் பாகம் ஒன்றுக்கு 3600 விகலைகள் ஆகின்றன. ஆண்டுஒன்றுக்கு அயனகதி 50விகலையென முன்னமேயே சொன்னேம். $3600 \div 50 = 72$-வருஷங்களில் அயனகதி ஒரு பாகம் நகர்கின்றதால் மேற்குறித்த 46-பாகங்களுக்கு $72 \times 46 = 3312$-வருஷங்களாகின்றன. இக்கணக்கின்படியும் பாரதகாலம்முன்கூறியவண்ணம் ஒருவாறுஒன்றிவருகின்றது.

மேற்குறித்த 3366ஆண்டுகளுக்கு முன்னமேயும் நமதுசங்கரர் காலமாகிய 1900-ஆண்டுகளுக்கும், மத்வர் காலமாகிய 800-ஆண்டுகளுக்கும் முன்னமேயும் வ்யாஸர் தரிசனம் அளித்ததாக ஏற்படுகின்றது. மனிதர்களுக்கு ஏற்பட்ட வயது அவர்கள் விடுகிற சுவாஸங்களால் அளவிடப்படுகின்றது. எண்பது வயது ஜீவிக்கக் கூடிய ஒருவன் நாள் ஒன்றுக்கு 21600 சுவாஸங்களை விட்டால் அந்த எண்பதாவது வயதில் மரணமடைவான். உழைப்பினுலும் ஸம்பாஷிப்பதாலும் அதிக சுவாஸம் விடும்படி நேர்வதால் ஆயுள் குறைகின்றது. ப்ராணுயாமம் முதலியன செய்து யோகசித்தி காயசித்தியடைந்தவன் சுவாஸங்களை அடக்கிவிடுவ

தால் நெடுநாள் ஜீவிக்கின்றான். இதனால் சிரம்ஜீவியான இம்முனிவர் சங்கர ராமானுஜ மத்வர் போன்ற பெரியாருக்கு மாத்திரம் தரிசனம் அளித்து இன்றும் சரீரியாகவே இருப்பதாகக்கொள்ள வேண்டும்.

வ்யாஸமுனிவர் அருளிய வேதாந்த சூத்திரங்கள் த்வைத மதத்தைச்‡சித்தாந்தப்படுத்துவனவாயினும் அவையனைத்தும்அத்வைதம் எனச் சங்கார் மேற்கோள் யுத்தி அனுபவங்களுக்குப் பொருந்துமாறு பாஷ்யம் அருளியிருக்கின்றார்.

"வேதமுட னுகம புராணமிதி காச முதல்
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா யெடுத் துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபண ஞான மாகும்"

எனத்தாயுமானவர் கூறியவண்ணம் எந்த மதபேதமும் அந்தத்தில் அத்வைதமாகும். கடவுள் எங்கும் நிறைந்திருத்தலால் அன்ய இம்சை கடவுளை இம்சித்தலாகும். தர்மங்களில் மேலானது யாதெனில் அகிம்சையேயாம். இஃது அத்வைதத்தின் முதிர்ந்த பொருள். காசிக்குக் கிழக்கேயுள்ள மகததேசத்தை ஹாலன் என்ற சிலனை வேந்தன் ஆண்டு வந்ததால் திக்விஜய யாத்திரைக்குக் கிளம்பிய சங்கரர் மேற்கு நோக்கிப் புறப்பட்டார் என முன்னமே சொன்னோம்.

सिताऽसिते यत्र तरंगचामरे नद्यौ विभातुर्मुनिभानुकन्यके।
नीलातपत्रं घटएव साक्षात् स तीर्थराजो जयति प्रयागः ॥

மாகஸ்நாநமாகாத்மியம்.

सितासितेसरितोयत्रसंगते तत्रा प्लुतासो दिवमुत्पतन्ति ।

ருக்வேதம்.

"வெளுப்பும் கருப்புமான நதிகள்கூடுமிடத்தில் மூழ்குபவன் மோக்ஷமடைகின்றான்" என வேதத்தால் புகழப்படுகிற த்ரிவேணி

---

‡ व्यासोपदिष्टसूत्राणां द्वैतवाक्यात्मनां शिवे ।
अद्वैतमेव सूत्रार्थ प्रामाण्येन करिष्यति ॥

சிவாகசியம் (9=16, 15)

சங்கம க்ஷேத்ரமாகிய ப்ரயாகைக்குச் சங்கரர் சென்ருர். பூர்வ மீமாம்ஸா போஷகராய் ப்ரவிருத்தி மார்க்கத்தில் ஆழ்ந்து அதனே ப்ரசாரம் செய்துவந்த குமரிலபட்டரென்ற பட்டபாதர் அங்கிருந்தனர். இவர் பௌத்தமத சித்தாந்தங்களை உணரக்கருதிச் சில காலம் பௌத்தரைப்போல் வேஷம் பூண்டு அவர்களுடன் கலந்திருந்தார். அம்மதத்தினே முற்றும் உணர்ந்த பின்னர் அவர்களுக்கு மாருகத்தான் ப்ரசாரம் செய்யவேண்டி வந்ததை குருத்ரோகமாகக் கருதி, அக்னி ப்ரவவேசமொன்றே அத்தீச்செயலுக்குப் பரிகாரமெனத்தீயில் குதிக்குந்தறுவாயில் நமது சங்கரர் அங்கு குறுக்கிட்டார்.

உத்தரமீமாம்ஸா போஷகரும் நிவிருத்திமார்க்கபோதகருமான நமது குருவுக்கும் குமரிலருக்கும் வாக்குவாதம் நடந்து முடிவில் கர்மப்ரதானமாயுள்ள ப்ரவ்ருத்தியைக் காட்டிலும் ஞான ப்ரதானமாயுள்ள நிவிருத்தியே மேலென குமரிலபட்டர் ஒப்புக்கொண்டார். பிறகு அவர் தமது சிஷ்யரும் தமது சித்தாந்தத்தைக் கைப்பற்றி யொழுகுபவருமான மண்டன மிச்ரரைப்பற்றி சங்கரற்குக் கூறித் தீயில் குதித்துவிட்டார். மண்டனமிச்ரரைக் கண்டு அவரையும் நிவிருத்திமார்க்கத்தில் திருப்புதற்கெனச் சங்கரர் பத்மவனம் என்ற ஸ்தலத்தை நாடிப் புறப்பட்டார்.

---

## மண்டனமிச்ரர்.

நருமதையாற்றங்கரையிலுள்ள கன்னேசிநாட்டைச் சார்ந்த பத்மவனமென்றும் மாகிஷ்மதியென்றும் கூறப்படுகிற க்ராமத்தில் இமமித்ரன் என்ற ஓர் கௌடப்ராமணர் இருந்தார். விச்வரூபன் என்பவர் இவரது குமாரர். சோணபத்ரைதீர வாசியாகிய விஷ்ணுமித்ரன் என்பவரது புத்திரியான ஸரஸவாணியை மணந்து இல்லறதர்மத்தைச் செவ்வனே நடத்திவந்தமையால் இந்த விச்வருபரை "அலங்காரம் செய்பவர்" எனப் பொருள்படுமாறு மண்டன மிச்ரர் என எல்லோரும் அழைத்தார்கள். அவரிடம் சென்ற சங்கரருக்கும் அவருக்கும் வாதம் நடந்தது. இவ்வாதத்தின் பயனுக கர்மமார்க்கத்தில் பற்றுள்ளவராயிருந்த மண்டனர் தமது கொள்கையை மாற்றிக்கொண்டதுமல்லாமல், சங்கரரைப்பணிந்து சீடரானுர். மேலும் நைஷ்கர்ம்யஸித்தி, தைத்திரீய ப்ருகதாரண்

யக உபநிஷத்பாஷ்யங்களுக்கு வார்த்திகம், மானஸோல்லாஸம் பஞ்சீகரணவார்த்திகம், ப்ரும்மஸித்தி, விதிவிவேகம், விப்ரமவிலாஸம், தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரபாஷ்யம் முதலிய சங்கரமதஸித்தாந்தங்களை உள்ளடக்கியுள்ள வேதாந்தநூல்களைச் செய்து உபகரித்தார். சங்கைகளற்று அத்வைதியான இவர்பால் நமது சங்காருக்கு நன்மதிப்பு உண்டாயிற்று.

## பத்மபாதர்

காசியில் வாசம் செய்தபொழுது நமது குருநாதர் பத்மபாதர் என்ற ஒரு சிஷ்யரை ஏற்றுக்கொண்டனர். ஸனந்தனர் எனப் பெயர் பெற்று காவிரியாற்றங்கரையிலுள்ள ஓர் ஊரில் பிறந்து வளர்ந்த இவர்,உபநயனம் நிறைவேறியவுடன் மனம் வேறுபட்டு உலகப்பற்றை வெறுத்து, சத்குருவைத்தேடிச் சங்கரரை நாடினர்.மறு கரையிலிருந்து குருவழைத்தவுடன் கங்கையிற்குதித்துச் சென்ற இவரது பாதங்களைத் தாமரை மலர்கள் தாங்கி, இவரை மூழ்காமல் அக்கரை சேர்த்ததால் "பத்மபாதர்" எனப் பெயர் பெற்றார். இவரது வாசஸ்தானம் சிதம்பரம் எனச் சித்விலாஸ சங்கரவிஜயம் கூறுகின்றது. இவர் விஷ்ணுவின் அம்சம் எனச் செப்புகின்றனர்.

இவ்விரு சீடர்களுடன் ஆங்காங்கு அத்வைதமார்க்கத்தைப் புகட்டிக்கொண்டு சங்கரர் கோகர்ண க்ஷேத்ரம் சென்றனர். மூகாம்பிகை ஸமேதராய் திருக்கோலங்கொண்டருள்கிற மகாபலேசுவரர் ஸந்நிதிக்குப் போகும்போது கருணாமூர்த்தியான நமது குருமூர்த்தி இறந்து கிடந்த ஒரு குழந்தையை உயிர்ப்பித்தார். பிறகு, ஸ்ரீ பலி என்ற ஊரையடைந்தனர்.

## ஹஸ்தாமலகர்.

அங்கு குமரிலபட்டரின் சீடரான ப்ரபாகரர் என்ற பிராமணர் பதின்மூன்று வயதாகியும் ஊமையாயிருந்த தனது மகனைச் சங்கருடைய பாதஸரோருஹங்களில் வீழ்த்தினர். அப்பையனைத் தூக்கியணைத்து அமுதம் போன்ற வாக்கினல் "நீ யார்" எனச் சங்கரர் வினவ அத்வைத ஸாரமான 12-சுலோகங்களை அப்பையன் ஒப்புவித்தான். அப்பன்னிரண்டு சுலோகங்களும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் நல்லறிவை புகட்டக் கூடியனவாதலின்

"ஹஸ்தாமலகர்" என்பது அவரது காரணப்பெயராயிற்று. இவரை வாயுவின் அவதாரமெனச் சொல்கின்றனர்.

## தோடகர்.

பிறகு பற்பல நாடுநகரங்களில் அத்வைதஸாரத்தைப்புகட்டிக் கொண்டும், மழைக்காலத்தில் மாத்திரம் சாதுர்மாஸ்யவிரதாநுஷ்டானம் செய்வதற்கெனச் சில மாதங்கள் அங்கங்கு தங்கியும் சங்கரர் பாதநாடெங்கிலும் திக்விஜயம் செய்துவரும்பொழுது தோடகம் என்ற விருத்தத்தில் ஐந்து சுலோகங்களால் பரம குருவைப்புகழ்ந்து பாடிக்கொண்டு ஒருவர் நாடினர்.

இவர்தான் தோடகாசாரியார். இவருக்கு ஆனந்தகிரிஎன்று மற்றொரு பெயருமுண்டு- ஸ்ரீ காமகோடிபீடம் 5-வது ஸ்வாமிகளான அநந்தானந்தர் என்பவர் மண்டனமிச்ரர் செய்த வார்த்திகங்களுக்கு ஒரு டீகா அருளியிருக்கின்றனர். இதனை ஆநந்தகிரி டீகா எனக் கூறி தோடகாசாரியரோ எனச் சிலர் மயங்குவதுண்டு. மேலும் ஆநந்தகிரி சங்காவிஜயம் எனக்கூறப்படுகிற நூல் ஒன்று, உண்டு என்றும் கி-பி 800-ல் மதசித்தாந்தங்கள் செய்த மத்வ ராமானுஜாசார்யர்களைப்பற்றிப் பேசுகிற இப்புத்தகம் ஆசார்ய சீடரான ஆனந்தகிரிஸ்வாமிகள் இயற்றியதாகக் கூறுதல் பொருந்தாது எனவும் முன்னமே சொன்னோம். மேற்குறித்துள்ள நான்கு சிஷ்யர்களைத் தவிர ஆசாரியர் அவதரித்த காலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அவரைவிட்டு விலகாது ஸஞ்சாரம் செய்தவரும், ப்ருகத்சங்காவிஜயம் என்ற நூலை இயற்றியவருமான சித்ஸுகரெனப் பெயர்வாய்ந்த ஒரு சிஷ்யரும், உதங்கரென்ற மற்றொரு மாணக்கரும் சங்கரரைச் சார்ந்திருந்தனர். சித்ஸுகர் எழுதிய சங்கரசரிதம் இப்பால் கிடைக்கவில்லை. மண்டனமிச்ரர் துறவியான பிறகு சுரேச்வரர் எனப் பெயர் பெற்றார். ப்ருத்வீதவர், ப்ரும்மஸ்வரூபர், விச்வரூபர், எனச் சங்காவிஜயங்கள் இவருக்குப் பெயரிடுகின்றன. இப்பெயர்களை வெவ்வேறு சிஷ்யர்களாகச் சிலர் மயங்குவதுமுண்டு. தோடகரை அக்னியின் அம்சமெனப் புகழ்கின்றனர்.

மண்டனமிச்ரரும் அவரது மனைவியாகிய ஸரஸவாணியும் துர்வாஸமுனிவர் சாபத்தால் புவியில் தோன்றிய பிரமனும் ஸரஸ்வதியும் என்ற விஷயமும், இந்த ஸரஸ்வதியை வாதத்தில் வெல்வ

தற்கெனச் சங்கரர் பரகாயப்ரவேசம் செய்து மயங்கியிருக்குங் கால் பஜகோவிந்தம் எனக்கூறப்படுகிற "மோகமுத்ரகம்" என்ற 12-சுலோகங்களை சிஷ்யர்கூறத்தெளிந்து திரும்பிச் சொந்தமான உடலில் புகுந்த விருந்தாந்தமும் விஸ்தாரமாகச் சங்கரவிஜயங்களில் கூறப்படுகின்றன.

சங்கரர் தமது அன்னையின் மரணத்தையுணர்ந்து சரீரத்தை ஸம்ஸ்காரம் செய்யும்பொருட்டு காலடி சென்றனர். அங்கு இருந்தோர் துறவியான இவர் க்ருத்யம் செய்வது தவறு எனக் கூறி அவ்விடம் வந்து உதவிபுரிய மறுத்தனர். ஆனதுபற்றிச் சங்கரர் அன்னையின் உடலைத் துண்டுகளாகச் சேதித்து வீட்டின் பின் புறத்தில் சுடலையமைத்துக் கருமங்களை நிறைவேற்றிச் சென்றனர்

இச்சம்பவம் நேர்ந்தது முதல்காலடியில் வசிப்பவர்கள் தங்கள் வீட்டில் யாரேனும் இறந்தால் அந்தச் சவத்தைச் சேதிப்பதற்குப்பதிலாகத் தருப்பையைச்சேதித்து வீட்டின் பின்புறத்தில் சுடலையிட்டு எரித்துவருகின்றனர். இதனைச் சங்கரர் இட்ட சாபமெனச் சிலர் கூறுவர். சங்கரர் செய்தியைச்செவியுற்ற அந்நாட்டு அரசனது கட்டளையெனக் கேரளநாட்டு நூல் ஒன்று சொல்லுகின்றது. "சாந்தமும் கருணையும் உருக்கொண்ட திருமேனியுடைய சங்கரர் சாபமிட்டனர்" எனக்கூறுவது பொருந்தாது. ஆதலின் "பெரியாரை அவமதித்ததுபற்றி அரசன் அங்ஙனம் ஆக்ஞாபித்தனன்" என்ற கூற்றையே ஏற்றுக்கொள்வோமாக.

இதன்பிறகு குருவரரான நமது சங்கரர் திக்விஜயம் செய்துகொண்டும், மடங்களை ஸ்தாபித்துக்கொண்டும் காசிக்குச் சென்று அவ்விடம் பரமகுருவான கௌடபாதாசார்யாளைச் சந்தித்து சில காலம் அங்கு தங்கினர். பிறகு கேதாரம் பதரிகாச்ரமம் முதலிய புண்யக்ஷேத்திரங்களைத் தரிசித்து கைலாஸம் சென்று கங்காதரரான சங்கரரிடமிருந்து பஞ்சலிங்கங்களைப்பெற்று போக,மோக்ஷவர முக்தி லிங்கங்கள் நான்கையும் முறையே ச்ருங்ககிரி மடத்திலும், சிதம்பர நீலகண்ட க்ஷேத்ரம். கேதாரம் என்ற மூன்றுஸ்தலங்களிலும் ஸ்தாபித்து, பாரதவருஷம் முற்றிலும் ஸஞ்சாரம் செய்து அத்வைதமதம் நிலைத்திருக்கும்படி அனுக்ரகித்து காஞ்சீபுரம் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு ராஜசேன சோழனால் நன்கு மதிக்கப் பெற்று ஆல யங்களைக் கட்டுவித்து, காமாக்ஷியம்மனுடைய உக்ரத்தைச்சமனம் செய்து * தங்களது ஆத்மபூஜையான யோகலிங்கத்தையும் காம கோடிபீடத்தையும் அங்கு நிலைக்கச்செய்து வசித்தார்கள்.

ஜயாபீட விநயாதித்யன் என்ற வேந்தன் கி-பி 780-810-ல் காச்மீரதேசத்தை ஆண்டுவந்தான். இவனுடைய சபையில் அமர கோசத்துக்கு அழகிய வ்யாக்யானம் எழுதிய க்ஷீரஸ்வாமியும், காவ்யாலங்கார கர்த்தாவாகிய வாமனகவியும் மேலும் பல வித் வான்களும் விளங்கினார்கள். இவர்கள் எல்லோரையும் வென்று விருதுபெற்றவர் வாக்பதிபட்டர். (ராஜதரங்கிணீ IV 489, 497) இந்த பட்டரை ஸ்ரீ காமகோடிபீடாதிபர்களின் 37-வது அபிநவ சங்கரர் வென்றார் என்றும், வாக்பதிபட்டர் சங்கரேந்த்ர விலாசம் என்ற நூலில் அபிநவதீரரை புகழ்ந்துள்ளார் என்றும் முன்னம் சொல்லியுள்ளோம். இவ்வாறு வெற்றிபெற்ற அபிநவசங்கரர் அக்காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடம் ஏறிய விஷயத்தை ஆதிசங்கரர் செய்ததாக வித்யாரண்ய ஸ்வாமிகளுடைய மாதவீய சங்கரவிஜ யம் சாற்றுகின்றது.

காஞ்சியில் வசித்து வருங்கால் நமது சங்கரரை ஸர்வக்ஞர் என எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். இவ்வாறாக தாம்ப்ரபரணீ தீரவாவாசிகளான பலர் சங்கரருடன் வாதம் செய்வதற்கென காஞ்சிபுரத்தில் வந்து கூடினார்கள். இவர்களில் வர்த்தனர் அல் லது'மகாதேவர் என்ற பெயருள்ள எழுவயதுள்ள ஒரு சிறுவன் மூன்றுநாட்கள் வரையில் வாதம் செய்தான். இப்பையனைப்பெரி தும் மெச்சிய சங்கரர் இவனுக்கு ஸர்வக்ஞாத்மன் என்று நாமம் இட்டு தமக்குப் பிறகு காமகோடிபீடாதிபதியாய் அமர்த்தி மண் டனமிச்ரரைப் போஷகராக நியமித்தனர். ‡

---

* प्रकृतिंच गुहाश्रयां महोग्रां स्वकृते चक्रवरे प्रवेश्य योऽग्रे ।
अकृताश्रितसौम्यमूर्तिमार्यां सुकृतं नस्स चिनोतु शङ्करार्यः ॥

குருரத்னமாலை—28.

‡ प्रागष्टमाद्विदितवेद्यमुदूढबाल्यं सर्वज्ञसंज्ञमथ हंसितमात्मनैव।
श्रीकामकोटि बिरुदे न्यदधात् स्वपीठे गुप्तं स्वशिष्यतिलकेन सुरेश्वरेण ॥

வ்யாஸசலீய சங்கரவிஜயம்



காஞ்சீபுரம் ஆலயத்தில்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகள்

மண்டனருக்கும் சங்காருக்கும் வாதம் நடந்த ஆதிகாலத்தில் மண்டனர் தோல்வியுற்ருல் ஸன்யாசியாவதென்றும் சங்கார் தோற்ருல் துறவறம் விட்டு இல்லறத்தில் அமர்வதென்றும் ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இப் பந்தயத்தால் துறவறம் பூண்டதாலும் கிருஹஸ்தாாக நெடுநாள் வாழ்ந்ததாலும் மண்டனர் பாமஹம்ஸர் அல்லாதலால் அவரைச்சங்கார் மடாதிபதியாய் அமர்த்தவில்லையெனச் செப்பலாம். இவர் நெடுநாள் காஞ்சியில் வசித்து அங்கேயே சித்தியடைந்துள்ளார். இவ்விஷயம் காஞ்சீபுரத்திற்கு அருகிலுள்ள புண்யாஸம் என்ற மண்டனமிச்ர அக்ரஹாரத்தில் பூஜிக்கப்படுகிற இவாது சமாதியால் நன்கு விளங்கும். இவ்வாறிருக்க மண்டனர் என்ற சுரேச்வாரையும், ஸர்வக்ஞாத்மரையும் ச்ருங்ககிரி, த்வாரகை மடங்களின் வம்சாவளியில் தலைவர்களாகக் குறித்திருக்கிருர்கள். ச்ருங்ககிரி பாம்பரையில் மண்டனருக்கு எண்ணூறு ஆண்டுகள் மடாதிபத்யம் குறித்திருக்கக் காண்கின்ருேம். மடஸ்தாபனம் என்ற விஷயத்தை எழுதும்போது இதனை நன்கு விளக்குவாம்.

---

काञ्च्यां श्रीकामकोटिं कलिमलशमनीं कल्पयित्वा सुरेशे
श्रीविद्याराज पीठार्चनमहित महाराज्यसांराज्यलक्ष्मीम् ।
संवेश्यात्मीयशिष्ये सकलभुवनसंमोदहेतोर्महात्मा
चिद्रूपस्वानुभूतिं भजति भवमहाम्बोधिसंतारणाय ॥

மார்க்கண்டேய ஸம்ஹிதை.

महेशांशाज्जातो मधुरमुपतिष्ठाद्वयनयः
महामोहध्वान्तप्रशमनरविः षण्मतगुरुः ।
फले स्वस्मिन् स्वायुष्यपि शरचराब्देऽपिच कलेः
विलिल्ये रक्ताक्षिण्यधिवृषैकादशिपरे ॥

புண்யச்லோகமஞ்சரி.

वाणीं विजित्य च वियद्विशदामदेहां
सर्वज्ञपीठमधिरुह्य च तव काञ्चयाम् ।
विद्वत्पदार्चितपदो यमिसार्वभौमो
देव्याः पुरः परतरे पुरुषे विलिल्ये ॥

பிருஹத்சங்காவிஜயம்.

ஜகத்குருவான சங்கரபகவத்பாதர் காஞ்சியில் காமகோடி பீடஸ்தாபனம் செய்து தங்களது ஆத்மபூஜையான யோகலிங்க சந்திரமௌளீசுவரரை அவ்விடம் வைத்து அப்புண்யபூமியிலேயே ரக்தாக்ஷிவருஷம் வைசாக சுக்ல ஏகாதசி திதியில் விதேககைவல்ய ரூபமான முக்திபெற்றார் என்று சிவரகஸ்யம் கூறுவதுமல்லாமல், சங்கராப்யுதயம், வாஸநாதேகஸ்துதி, மார்க்கண்டேய ஸம்ஹிதை முதலிய எண்ணிறந்த இதிஹாஸங்களும் வற்புறுத்துகின்றன.

மேலும் மஹாகாவ்யங்களில் ஒன்றாகிய நைஷதத்தில் காஞ்சி க்ஷேத்ரத்தைப் புகழ்ந்ததுமல்லாமல் அங்கு மகிமைபெற்றோங்குகிற யோகலிங்கத்தைப்பற்றியும் ஸ்ரீஹர்ஷகவி குறித்துள்ளார். *

‡ பல விஷயங்களைப்பற்றிச் சொல்லும்போது மேலானதை முதலில் கூறுவர் எனப் பாணினி முனிவர் சொல்லியுள்ளார். †இவ் வாக்கியத்தால் புராணங்களைக் காட்டிலும் இதிஹாஸங்களின் வ்ருத்தாந்தங்களை மேலெனச் சாற்றுதல் பொருந்துமாதலினாலும் ஸ்ரீகாஞ்சி காமகோடி மடம் ஒன்றே ஸ்ரீசங்கரபகவத்பாதஸ்வாமிகள் தங்களுக்கு உரியதாகக்கொண்டதென்றும் அவர்களது ஸமாதியும் ஸ்ரீகாஞ்சிக்ஷேத்ரமே என்றும் சித்தாந்தம் செய்கின்றோம்.

முன்னம் கூறியுள்ளவாறு அபிநவசங்கரேந்த்ரர்சரித்ரம் அவ் விஷயத்திலும் பலரை மயக்கிவிட்டது. எப்படியெனில், ¶அபிநவ

---

* सिन्धोर्जैत्रमयं पवित्रमसृजत्तत्कीर्तिपूर्ताद्भुतम्
यत्र स्नान्ति जगन्ति सन्ति कवयः केवा न वाचंयमाः ।
यद्बिन्दुश्रियमिन्दुरञ्चति जलं चाविश्य दृश्येतरो
यस्यासौ जलदेवतास्फटिकभूर्जागर्ति योगेश्वरः ॥
(12—38)

‡ अभ्यर्हितंपूर्वम् । பாணிநீய வ்யாகரணம் (2-2-34)

†इतिहासपुराणाभ्यां वेदंसमुपबृंहयेत्। மகாபாரதம்ஆதிபர்வம்(1-293)

¶ आत्रेयकन्दरमनुव्रजितोऽपि शिष्यैरन्तर्हितस्सतनुरेव स शङ्करेन्द्रः ।
புண்யச்லோகமஞ்சரீ.

इति परीत्य दिशो विदिशश्च यः परिधरं परिभूतमतान्तरः ।
पुनरवाप्य पुरारिधराधरं स तनुतेऽतनुतेजसि संस्थितम् ॥
சங்கரேந்த்ர விலாஸம்.

சங்கரர் இமயமலையிலுள்ள தத்தாத்ரேய குகையில்சித்திபெற்றார். பகவத்பாதர் அவ்வாறு சித்திபெற்றதாக மாதவீய சங்கரவிஜயம் கூறுகின்றது.

ஆதலின், காஞ்சியை ஆதிஜகத்குருவின் மடமாகக்கொண்டு அவர்களது பாதங்களை எக்காலும் பூஜித்து உய்வோமாக.

---

## அத்யாயம் 6.

### மடஸ்தாபனம்.

ஸ்ரீ பகவத்பாதாசாரியார், கைலாசத்திலிருந்து கொணர்ந்த லிங்கங்கள் ஐந்து என்றும், யோகலிங்கத்தைக் காஞ்சிகாமகோடி பீடத்திலும், போகலிங்கத்தை ச்ருங்ககிரியிலும், பாக்கியுள்ள மோக்ஷ, முக்தி, வரலிங்கங்களை முறையே சிதம்பரம், கேதாரம், நீலகண்டக்ஷேத்திரங்களிலும் ஸ்தாபித்தார் என்றும், ஏற்கனவே குறித்துள்ளோம். அத்வைத சித்தாந்தம் நிலைத்தோங்குமாறு நமது நாட்டின் வடகோடியில் உள்ள பதரிகாச்ரமத்தில் ஒரு மடத்தையும், தென்திசையிலுள்ள ச்ருங்ககிரியில் ஒரு மடத்தையும், மேற்குக்கோடியிலுள்ள த்வாரகையில் ஒரு மடத்தையும், கிழக்குக் கோடியிலுள்ள ஜகந்நாதத்தில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்து சிஷ்யர்களை அமர்த்திய பிறகு தனக்கு உரிமையாகக் காமகோடி பீடத்தைக் காஞ்சியில் நிலைக்கச் செய்துள்ளார் எனவும் முன்னம் கூறியுள்ளோம்.

பதரிகாச்ரமம் என்ற புண்யக்ஷேத்ரம் நம்தேசத்தின்வடக்கு எல்லையாயுள்ள இமயமலையின் தென்சாரலில் உள்ளது. பரமகுருவாகிய கௌடபாதரைச் சங்கரர் சந்தித்து வந்தித்ததும், யோகிவரரான சுகப்ருமமரைக் கௌடபாதர் சந்தித்து ஸந்யாசம் பெற்றதும் இப்புனித பூமியில்தான் எனச் சரிதங்கள் சாற்றுகின்றன.

மேலும் விஷ்ணுபக்த திலகரான த்ருவர் ராஜ்யபாரத்தை விடுத்து உலகை வெறுத்து இப்பதரிக்குச் சென்றதாக *பாகவத

---

*आत्मस्त्र्यपत्यसुहृदो बलमृद्धकोश मन्तःपुरं परिविहारभुवश्च रम्याः ।
भूमण्डल जलधिमेखलमाकलय्य कालोपसृष्टमिति स प्रययौ विशालाम् ॥
ஸ்ரீபாகவதம் 4; 12-16

புராணம் கூறுகின்றது. சங்கர் இங்கு தங்கி ஜோஷிமடம் எனக் கூறப்படுகிற ஜ்யோதிர்மடத்தை ஸ்தாபித்து, தமது சிஷ்யர்களில் ஒருவராகிய தோடகாசாரியரைத் தலைவராக நியமித்தார். இந்த மடம் சிலகாலம் காலியாகவிருந்ததாகத் தெரிகின்றது. இதன் பரம்பரையின் விவரணங்கள் நன்கு புலப்படவில்லை. இம்மடாதிபதிகளைப் பூர்ணகிரி என்பர்.

நமது நாட்டின் கிழக்குப்ரதேசங்களில் அத்வைத ப்ரசாரம் செய்வதற்கென புரி எனச் சொல்லப்படுகிற ஜகந்நாத க்ஷேத்ரத்தில் ஒரு மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு, ஹஸ்தாமலகர் தலைமைபெற்றார். இம்மடத்திற்குத் தலைவர் பத்மபாதர் எனச் சங்கர விஜயங்கள் கூறினாலும் "மடாம்னாயம்" என்ற நூல் ஹஸ்தாமலகரைத்தலைவர் எனச் செப்புதலால் அதனையே ஏற்றுக்கொள்ள வேண்டியதாகின்றது. பத்மபாதர் த்வாரகைக்குத் தலைவர் எனப் பின்னர் விளக்குவோம். ஆதிமுதல் நாளது வரையில் 142-ஸ்வாமிகள் தலைமைப்பெற்றதாக இந்தப்புரி மடத்தின் வம்சாவளியால் அறிகின்றோம். இம்மடாதிபதிகளின் பெயர்களைத் தவிர்த்துள்ள விஷயங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இஃது விமலா பீடம் எனப்படும். அரண்யர் என்பது இம்மடாதிபர்களின்பட்டமாம்.

மேற்கு ப்ரதேசங்களில் அத்வைத ஸம்ரக்ஷணை செய்வதற்காக நியமித்தது த்வாரகை மடம். இதன் வம்சாவளியை நோக்குங்கால் சங்கரர் சித்தியானகாலத்தை அவதார காலமாகக் குறித்திருக்கக் காண்கிறோம். மேலும் ப்ரும்மஸ்வரூபர், சித்சுகர், ஸர்வக்ஞாத்மன் என்ற மூவரையும் முதல் மூன்று தலைவர்களாக இப்பரம்பரையின் குறிப்பொன்று கூறுகின்றது. பிரும்மஸ்வரூபர் என்பவர் ஸுரேச்வரர் எனப்பட்டம் புனைந்த மண்டனமிச்ரர் எனவும் சங்கரருக்குப் பிறகு காமகோடிபீடாதிபதியாய் அமர்த்தப் பட்டவர் ஏழுவயதுள்ள ஸர்வக்ஞாத்மன் எனவும் முன்னமே கூறினோம். ஆதிசங்கரருடைய ஆப்தசிஷ்யரான பத்மபாதர் முதலில் இங்கு நியமனம் பெற்ற பீடாதிபதி என்றும், பிறகு ஸர்வக்ஞாத்மர், மூன்றுவது பிரும்மஸ்வரூபர் என்றும், சிலர்கூறுகின்றனர். பிரும்மஸ்வரூபர் என்ற மண்டனருக்கு ஸர்வக்ஞாத்மன் எவ்வாறு முந்தியவராகக்கூடும்? (தியாஸபிஸ்ட் பத்திரிகை XVI 3, 5) இந்த த்வாரகை மடாதிபதிகளின் வம்சாவளியில் 20-வது

ஸ்வாமிகளாக விக்ஞானேச்வரதீர்த்தர் கி-பி 483-510 ல் விளங்கியதாகவும், இவர் மிதாக்ஷரம் என்ற க்ரந்தம் எழுதியதாகவும், குறிக்கப்பட்டிருக்கின்றது. கி-பி 1076-1127 ராஜ்யபாரம்வகித்த சாளுக்ய வம்சத்து வேந்தனாகிய ஆறாவது விக்ரமாதித்யன் காலத்தில் மிதாக்ஷரக்காரர் ஜீவித்ததாகச் சரித்ரங்கள் விளக்குகின்றன. ஆதிமுதல் கி-பி 1704 வரையில் 61-ஸ்வாமிகள் பீடாதிபத்யம் பெற்றார்களென வம்சாவளியில் குறித்திருக்கக்காண்கின்றோம். இவ்விஷயம் காமகோடி பரம்பரையை ஒருவாறு ஒப்புகின்றது. நமது நாட்டின் ஸ்வராஜ்ய விஷயமாக உபன்யாசங்கள் செய்கிற காரணம்பற்றித் தற்காலம் விளங்குகிற ஸ்ரீ ஸ்வாமிகள் அடிக்கடி காராக்ருஹவாஸம் செய்ய நேர்கின்றது. மேலும் இம்மடாதிபத்ய விஷயமாக ஒரு வழக்கு நடந்துவருவதாகவும், இப்பால் கேள்விப்படுகின்றோம். இதனைக் காளிகாபீடம் என்பர். பீடாதிபர்கள் ஆச்ரமி எனக் கூறப்படுவர்.

ஸ்ரீ பகவத்பாதர் நியமனம் செய்த மடங்களில் மூன்றைப் பற்றிய விஷயங்களைச் சுருக்கமாகக் கூறியுள்ளோம். இதனால் மேற்குறித்த மடங்கள் ச்ருங்ககிரி காமகோடிமடங்களைப் போல் அவ்வளவு ப்ரக்யாதியுடன் விளங்குவதாகஎண்ணுவதற்கிடமில்லை. இத்தகைய உத்தாமடங்கள் சங்கரரால் நியமிக்கப்பட்டிருந்தும் அந்தப்ராந்தங்களில் மிகப்பழைய காலந்தொட்டு திக்விஜய யாத்திரை செய்தவர்களும், ஜைன பௌத்த நாஸ்திகமதகண்டனத்தால் அத்வைத ஸ்தாபனம் செய்தவர்களும், ஸ்ரீ காமகோடிபீடாதிபர்களே எனப்பின்னர் நன்கு விளக்குவாம். கைலாசத்திலிருந்து நான்கு சிஷ்யர்களைக் கருதிக் கொணர்ந்த லிங்கங்கள் நான்கில் போகலிங்க சந்த்ரமௌளீச்வரரை மாத்திரம் ச்ருங்ககிரியில் ஸ்தாபித்து மற்ற மூன்று லிங்கங்களையும் மேற்குறித்த மடங்களிலும் நிலைக்கச் செய்யாமல் ஆலயங்களில் ஸ்தாபித்த நமது ஆதி குரு இதனை முன்னரே உணர்ந்திருத்தல் வேண்டும். வருங்காலத்தை உணர்தல் சங்கரர்போன்றவர்க்கு அருமையன்று.

ஸ்ரீ ச்ருங்ககிரி மடத்தைப்பற்றி இனி விசாரிப்பாம்:—

ஸ்ரீ ராமசரித்திரத்தில் ப்ரஸ்தாபிக்கப்படுகிற ரிஷ்யச்ருங்க முனிவரது வாசஸ்தானமாய் இருந்ததால் இப்பெயர் புனைந்தது எனக் கூறுகின்றனர். புத்ரகாமேஷ்டியை முன்னிட்டு தசரதர்

ரிஷ்யச்ருங்கமுனிவரை அயோத்திக்கு அழைத்துவந்த ஐதீகம் ஸ்ரீ ச்ருங்ககிரிமடத்தில் இன்னும் நடத்தப்படுகின்றது. இந்த ஸ்தலம் மைசூர் ராஜ்யத்தைச் சார்ந்த கடூர் ஜில்லாவில் துங்காவின் வடகரையில் இருக்கின்றது. துங்கபத்ரை உற்பத்தியாகுமிடம் வராக பர்வதம் எனவும், பகவான் வராகாவதாரம் எடுத்துப் பூமியைத் தூக்கும்பொழுது வலது பல் பதிந்தவிடத்திலிருந்து பத்ரா என்ற நதியும், இடது பல் பதிந்தவிடத்திலிருந்து துங்கா என்ற நதியும் கிளம்பி இவ்விரண்டும் கூடிக்கலந்த நதி துங்கபத்ரை எனவும் புராணம் கூறுகின்றது.

இப்புண்ய பூமியில் நமது சங்கரர் மடஸ்தாபனம் செய்து சிலகாலம் அங்கு வசித்தார்கள். மண்டனமிச்ரரின் மனைவியான ஸரஸவாணி உண்மையில் வாணியின் அம்சம், இந்த அம்மையை வாதத்தில் வென்று தன்னுடன் அழைத்து வருங்கால் திரும்பிப் பார்த்தவிடத்தில் தங்குவதாகக் கூறியுள்ள வாணி தன் சிலம்பின் ஒலியைக் கேளாதவாறு செய்தனள். சங்கரர் "அம்மை வருகின்றுளோ" எனச் சங்கையுற்றுத் திரும்பியவுடன் வாணி அங்ஙனமே நிற்க, அவ்விடத்தில் ஸ்ரீ சாரதாபீடத்தை ஸ்தாபித்தனர் என ஓர் வரலாறுவழங்குகின்றது.

திக்விஜயம் செய்து சென்ற சங்கரர், துங்கபத்ரையில்அனுஷ்டானம் செய்திருந்த நேரத்தில் தவளையொன்று ப்ரஸவவேதனை அடைந்ததையும், இதன் பரமவைரியான பாம்பொன்று படத்தால் நிழல் கொடுத்து நின்றதையும் நோக்கி அதனைப் புண்யபூமியென நிர்ணயித்து அங்கு ஓர் மடத்தை ஸ்தாபித்தனர் என மற்றுமோர் வரலாறுமுண்டு.

ஸ்ரீ ச்ருங்ககிரி சாரதாபீடத்தின் வம்சாவளியில் ஆதிசங்கரருக்குக் கூறப்பட்டுள்ள அவதாரகாலம் கி-மு 44 என்பது தற்கால ஆராய்ச்சிக்கு ஒருவாறு பொருந்துகின்றது. இந்த மடத்தின் முதலாவது பீடாதிபதி மண்டனர் எனவும் பிறகு ஸர்வக்ஞாத்மன் எனவும் குறித்திருக்கின்றனர். இவ்விருவரும் காமகோடிபீடத்தில் விளங்கியதாகத் தக்க ஆதாரங்களுடன் முன்னமே சொன்னோம்.

*ஸ்ரீ காமகோடிபீடாதிபர்களில் ஆறுவதாக விளங்கிய கைவ ல்யயோகி ஸ்வாமிகளின் உத்தரவின்படி ஏழாவது ஸ்வாமிக ளான ஸ்ரீ கிருபாசங்கரர் சுபடவிச்வரூபரை ச்ருங்ககிரி பீடாதி பதியாய் அமர்த்தினர் எனக் காமகோடிபாம்பரையின் சரித்திரத் தால் அறிகின்றோம்,

விச்வரூபருக்குமுன் விளங்கிய ச்ருங்ககிரிஸ்வாமிகள் திக் விஜயயாத்திரை சென்று நெடுநாள் வாராததாலும், இக்காலம் போல புராதனமான அக்காலத்தில் வெளிச்சென்றுருடையயோக க்ஷேமங்களையறிதல் சுலபமில்லையாதலாலும், காமகோடி மடத்தி லிருந்து ஒரு பிரதிநிதி அனுப்பப்பட்டிருக்தல் வேண்டுமெனவும் துங்கா, பத்ரா, என்ற இருநதிகளும் கூடுகிற இடத்தில் ஸ்தாபிக் கப்பட்டிருந்த அப்பீடத்தில் விச்வரூபர் பீடாதிபத்யம் வகித்த அக்காலத்தில் வெளியில் யாத்திரை போயிருந்த ஸ்வாமிகள் திரும் பியதாலும், அப்பெரியார் நதிகள் கூடுகிற அவ்விடத்தில் விஜயம் செய்தல் அவசியமாதலாலும், இப்புண்ய பூமிக்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால் வேறுமடம் ஸ்தாபித்து அதில் விச்வரூபர் தங்கி யிருந்திருத்தல் வேண்டுமெனவும் ஊகிப்பதற்கிடமுண்டு. கூட்லி என்ற மடம் இப்பொழுது விளங்குகின்றது. ஸ்ரீசாரதா தேவி யும் சந்திரமௌளீச்வரரும் அங்கு நன்கு ஆராதிக்கப்படுகின்றன ரென்றும், மைசூர்,பல்லாரி முதலிய ஜில்லாக்களிலும், இப்பீடாதி பரையே குருபீடமாக ஏற்றுக்கொண்டுள்ளாரென்றும் இப்பால் அறிந்துள்ளோம்.

மண்டனருக்கு விச்வரூபர் எனப்பெயரும் உண்டு என்கிற விஷயம் சங்கர விஜயங்களைக் கவனித்தால் நன்கு விளங்கும். கைவல்ய யோகியின் காலம் கி-மு, 55-முதல் 83-வருஷங்கள் எனக்காமகோடி வம்சாவளியில் காணப்படும். ஸ்ரீச்ருங்ககிரி பரம்பரையில் மண்டனர் கி-மு, 28ல் பீடாதிபத்யம் பெற்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலின் க்ருபாசங்கரரால் நியமனம்

---

* श्री कैवल्यमुनीन्द्रशासनवशात् श्री विश्वरूपाभिधं
शृङ्गेर्यां निहितं विधाय नियमाल्लोके व्यवस्थाप्य च ।
चत्वारिंशतमेकयुक्तमभिमण्ड्याचार्यपीठीं दिशं
प्रस्थायैलबिडस्य सिद्धिमभजद्विन्ध्ये कृपाशङ्करः॥

புண்யச்லோகமஞ்சரீ.

செய்யப்பட்ட விச்வரூபரை, மண்டனர் எனக்கொண்டு கணக்கு அமைக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. ச்ருங்ககிரியில் ப்ருத்வீதவர் அமர்த்தப்பட்டனர் எனச் சிலர் சாற்றுகின்றனர். இதுமண்டனருடைய மறு பெயரென முன்னமேகுறித்துள்ளோம். ஸ்ரீபகவத்பாதர் தாமியற்றிய சூத்ரபாஷ்யத்திற்கு வார்த்திகம் எழுதும்படி மண்டனருக்குக் கட்டளையிட்டனர் என்றும், அவ்வாறு எழுதுவதற்கு அம்மண்டனர் அஙர்கர் என மற்ற சிஷ்யர்கள் தடுத்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. வார்த்திகம் எழுதுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்பட்ட மண்டனர் மடாதிபத்யம் பெற்றது எவ்வாறோ விளங்கவில்லை. மேலும் இவர் பரமஹம்ஸர் அல்லர் எனவும், பந்தயத்தில் தோற்றுத் துறவியானவர் எனவும், இக்காரணம்பற்றியே இவரை மடாதிபதியாய்ச் சங்கரர் மதிக்கவில்லை எனவும் முன்னம் குறித்துள்ளோம். எது எவ்வாறுயினும் எண்ணூறுவருஷகாலங்கள் மண்டனர் ச்ருங்ககிரியில் மடாதிபதியாய் இருந்ததாக அப்பரம்பரை கூறுகின்றது.

‡ ச்ருங்ககிரி வம்சாவளியில் எட்டாவது ஸ்வாமிகளான நரஸிம்மதீர்த்தருக்குப் பிறகு விளங்கிய வித்யாசங்கரர் கி-பி. 1333ல் சித்திபெற்றதாகக் குறித்திருக்கின்றனர். 9-வது ஸ்வாமிகளான இந்த வித்யாசங்கரர் கி-பி. 569ல் பாரிஸின் நகரத்திற்கு ஸமீபமாயுள்ள நிர்மலா என்ற இடத்தில் அடங்கியதாகவும், அன்று முதல் அவ்விடத்தில் வருஷந்தோறும் கார்த்திகை சுக்லத்ரயோதசியில் இவர்களது ஞாபகமிருக்குமாறு ஒரு சந்தை கூடுவதாகவும் இப்பால் அறிகின்றோம். (தியாஸபிஸ்ட் பத்திரிகை XVI 292-296) இவருக்குப் பிறகு எண்ணூறு வருஷங்கள் ச்ருங்ககிரிமடம் காலியாய் இருந்ததெனக் குருரத்னமாலை வியாக்கியானத்தில் ஆத்ம

---

‡ सुरेश्वराचार्यवर्यो नित्यबोधघनाभिधः ।
ततो ज्ञानघनाचार्यो ज्ञानोत्तममहामुनिः ॥
ज्ञानगिर्याचार्यवर्यः तथा सिंहगिरीश्वरः ।
ततश्चेश्वरतीर्थाख्यो नृसिंहाधिपतीर्थकः ॥
विद्याशङ्करतीर्थाख्यो लंबिकायोगतत्परः ।
भारतीकृष्णतीर्थाख्यो विद्यारण्यमहामुनिः ॥

ஸ்ரீ ச்ருங்ககிரி குருபரம்பரை.

போதர் கூறுகின்றார். பிறகு 1354-1379ல் விஜயநகர வேந்தனாய் விளங்கிய புக்கமகீபதியின் மந்திரியான மாதவர், வித்யாரண்யர் எனப்பட்டம் புனைந்து ஸந்யாஸம் பெற்று, விரூபாக்ஷி. ச்ருங்ககிரி, புஷ்பகிரி, காவீரம் முதலிய எட்டு மடங்களை ஸ்தாபித்தனர். இவரை வித்யாசங்கரர் எனவும் கூறுவதுண்டு. வேதங்களுக்கு பாஷ்யம் எழுதிய ஸாயனர் இந்த வித்யாசங்கரரின் ஸகோதரர். இவ்விருவரும் காமகோடி பீடாதிபர்களில் 59வது ஸ்வாமிகளான வித்யாதீர்த்தரின் சிஷ்யர்கள் என்பது இவர்கள் அனுக்ரஹித்துள்ள நூல்களால் நன்கு விளங்கும். இவ்விஷயத்தைப் பின்னர் விவரிப்பாம். கி-பி, 569ல் நிர்மலாவில் ஸமாதிபெற்ற வித்யாசங்கரரும், 14-வது நூற்றாண்டில் வித்யாரண்யர் எனவும் கூறப்படுகிற வித்யாசங்கரரும் ஸ்ரீகாமகோடி 49வது அதிபதியான வித்யாதீர்த்தரும் வெவ்வேறு மகாபுருஷர்களெனக் கூறியுள்ளோம்.

நிர்மலாவில் அடங்கிய வித்யாசங்கரருக்கும், 10-வது பாரதீகிருஷ்ணருக்குமிடையில் மடம் காலியாயிருந்த 800-ஆண்டுகளை மண்டனர் ஜீவகாலமாகக் குறித்து, வம்சாவளியைப் பின்னமற்றதாக வெளியிட்டனர்போலும். மத்வமத வளர்ச்சியால் அத்வைதம் குன்றாமலிருக்குமாறு எட்டு மடங்களை வித்யாரண்யர் ஏற்படுத்தினர். அவைகளில் விரூபாக்ஷி, புஷ்பகிரி, ச்ருங்ககிரி, காவீரம் என்ற நான்கு மடங்கள் தற்போது நிலைத்தோங்குகின்றன. இவைகளின் ஸ்ரீமுகமுத்திரைகள் அவ்விஷயத்தை நன்கு உணர்த்தும்.

விரூபாக்ஷிமடம். புஷ்பகிரிமடம். சிருங்ககிரிமடம்.










மேலும் ச்ருங்ககிரி க்ஷேத்திரத்தில் கி-பி, 1338க்குச்சரியான சகம் 1260 பகுதான்ய வருஷத்தில் வித்யாசங்கா ஆலயம் ஒன்று கட்டப்பட்டு அங்குள்ள மற்ற 40 ஆலயங்களைக் காட்டிலும்

மேலாக்கொண்டாடப்பட்டுவருகின்றது. இவ்வாலயம் எல்லா வற்றிலும் அழகு வாய்ந்ததாய் விளங்குகின்றது. வித்யாரண்ய ரால் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட ச்ருங்ககிரி பீடாதிபதிகளான பாரதீ தீர்த்தர் இவ்வாலயத்தைக் கட்டுவித்து கும்பாபிஷேகம் செய்து, வித்யாரண்யஸ்வாமிகளின் உபாஸநா தெய்வங்களான சக்தி, கணபதி, வாகீச்வரி, பிம்பங்களை பிரதிஷ்டை செய்வித்துத் தனது குருபக்தியை விளக்கியுள்ளார். இப்பெரியார் ச்ருங்ககிரி யில் கி-பி, 1328-1380 பீடாதிபதியாய் வீற்றிருந்தார்கள். ஸ்ரீவித் யாரண்யர், கி-பி, 1331-1386ல் விரூபாக்ஷமடத்தின் தலைவராக இருந்தார்களெனத் தெரிகின்றது. இந்த ச்ருங்ககிரியில் வித்யா ரண்யபுரம் என ஒரு வீதியும் உளது. மேற்குறித்துள்ள விவர ணங்களால் ச்ருங்ககிரிமடம் வித்யாரண்யர் பரம்பரை என்பது சொல்லாமலே விளங்கும்.

சாளுக்யவம்சத்து ஒரு வேந்தனுடைய சேனைத்தலைவனை பிஜ்ஜலன் என்பவன் அரசனுக்கு விரோதமாய்க் கலகம் செய்து தன் வசத்திலுள்ள படைகளின் பலத்தால் தானே மன்னனுன். இவன் சமணமதத்தைப் பின்பற்றியவன். மதவிரோதத்தால் சைவர்களிருவரை பொட்டைகளாகும்படி கண்களைக்குத்தி ஹிம் சித்ததைப் பொருத இவனது மந்திரியாகிய பஸவன் என்பவர் பிஜ்ஜலனைக்கொன்றுர். வீரசைவமதத்தை நிலைநாட்டியவர் இந்தப் பஸவர் என்ற அந்தணர் எனத்தெரிகின்றது. இச்சம்பவம் கி-பி, 1167ல் நடைபெற்றது. இந்த வீரசைவர்களும் மத்வர்களும் சம ணர்களும் மைசூர் முதலிய கர்நாடகதேசங்களில் அத்வைதமதம் ஓங்கவோட்டாமல் தடையாய் நிலைத்தோங்கினுர்கள். அத்வை தம் ஒடுங்கக்கூடிய இக்காலத்தில் ஸ்ரீவித்யாரண்யர் எட்டுமடங் களை அப்ராந்தங்களில்ஸ்தாபித்து அங்கங்கு சிஷ்யர்களை நியமனம் செய்து உபகரித்தார்கள். இவர்களின் உடன்பிறந்தாரான ஸாய ணர் வேதங்களுக்குப் பாஷ்யம் அருளியிருக்கின்றுர்கள். வேதங் களில் உள்ள தத்துவங்களனைத்தையும் உணர்தற்குஇஃதொன்று தான் ஆதாரமாய் விளங்குகின்றது. "எந்நன்றி கொன்றுர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை. செய்ந்நன்றி கொன்றமகற்கு" எனத் திருவள்ளுவரும், "செய்தி கொன்றுர்க்கு உய்தியில்" எனப் புற நானூறும்கூறிய அமுதமொழிகளை மனத்தில் நாட்டி,மேற்குறித்த பெரியார் இருவரையும் எக்காலும் போற்றுவாம்.

இப்புசுல்தான்போன்ற அன்னிய மதத்தினர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு விளங்குகிற ஸ்ரீச்ருங்ககிரி பரம்பரையின் ஸ்ரீஸ்வாமிகள் அனைவரும் சிஷ்யர்களிடத்தில் அன்புகொண்டு அடிக்கடி திக்விஜயயாத்திரை செய்துள்ளார்கள். இப்பூஜ்யர்களில் பலர் யோகிகளாகவும், அரியநூல்களை அருளிய கவிகளாயும் விளங்குகிறார்கள். சாரதாதேவியைப் பூஜித்து அவ்வம்மையின் கருணையைப் பூர்ணமாகப் பெற்றவர்கள் பூஜிக்கப்படுவதிற் சந்தேகமுளதோ.

நமது ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் சிஷ்யர்களைக் கருதி ஸ்தாபித்த நான்கு மடங்களைப்பற்றிச் சிறிது குறித்துள்ளோம். இனி பகவத்பாதரின் ஆத்மபூஜையான யோகலிங்க சந்த்ரமௌளீச்வரர் பூஜிக்கப்படுவதும் ஆஸேது ஹிமாசலம் உள்ள பூபாலர்களாலும், பூசுரர்களாலும், கவிச்ரேஷ்டர்களாலும் ஆதிமுதல் பெரிதும் கொண்டாடப்பட்டு விளங்குகிற பீடாதிபதிகளைப் பெற்றதும்,பின்னமற்ற பரம்பரையுடையதுமான ஸ்ரீகாஞ்சீகாமகோடி-பீடத்தை விவரிக்கப் புகுமுன் ஆதிகுரு அருளியதாகக் கூறப்படுகிற நூல்களைப்பற்றிச் சிறிது வரைவாம்.

## ॥ आम्नायः ॥

| | संज्ञा | मठः | पीठः | क्षेत्रम् | तीर्थम् |
|---|---|---|---|---|---|
| 1 | पश्चिमाम्नायः | द्वारका | कालिका | द्वारवति | गोमती |
| 2 | उत्तराम्नायः | ज्योतिः | ज्योतिष्मती | बदरी | अळकनन्दा |
| 3 | पूर्वाम्नायः | गोवर्धन | विमला | पुरी | महोदधिः |
| 4 | दाक्षिणाम्नायः | शृङ्गगिरी | शारदा | रामेश्वरम् | तुङ्गभद्रा |
| 5 | मध्याम्नायः | श्रीशारदा | कामकोटी | काञ्ची | कम्पासरः |

| | देवः | शक्तिः | वेदः | महावाक्यम् |
|---|---|---|---|---|
| 1 | सिद्धेश्वरः | भद्रकाली | सामम् | तत्त्वमसि |
| 2 | नारायणः | ......... | अधर्वणः | अयमात्माब्रह्म |
| 3 | जगन्नाथः | विमला | शुक्लयजुः | प्रज्ञानंब्रह्म |
| 4 | वराहः | शारदा | कृष्णयजुः | अहंब्रह्मास्मि |
| 5 | एकाम्रनाथः | कामकोटी | ऋग्वेदः | ओंतत्सत् |

## அத்யாயம் 7.

### ஆசார்யர் அனுக்கிரஹித்த கிரந்தங்கள்.

நமது குருமூர்த்தி ஸ்ரீ காசியில் வசித்துவந்தபொழுது ப்ரும்மசூத்ரம், கீதை, தசோபநிஷத் என்ற பாஸ்தான த்ரயங்களுக்குப் பாஷ்யங்கள் அருளினூர்கள் என்று முன்னம் சங்கர விஜயம் என்ற அத்யாயத்தில் அறிவித்தோம். காமகோடி ஐந்தாவது ஸ்வாமிகளான அனந்தாநந்தர் இப்பாஷ்யங்களுக்கு வ்யாக்யானம் எழுதியிருப்பது இதனை உறுதிப்படுத்துகின்றது. வேதாந்த சூத்ரங்களுக்கு எழுதப்பட்டுள்ள பாஷ்யங்களைக் கீழ்க் குறித்துக்காட்டுகின்றோம்.

(1) பகவத்பாதர் இயற்றிய பஞ்சபாதிகை.
(2) வாசஸ்பதிமிச்ரர் இயற்றிய பாமதிநிபந்தம்.
(3) அமலானந்தர் இயற்றிய கல்பதரு.
(4) அப்பய்யதீக்ஷிதர் இயற்றிய பரிமளா.
(5) ஆனந்தகிரிஸ்வாமி இயற்றிய ஆனந்தகிரீயம்.
(6) ராமாச்ரமர் இயற்றிய ரத்னப்ரபா.

(7) ஸர்வக்ஞாத்மர் ஷை ஸம்க்ஷேபசாரீரகம்.
(8) மதுசூதனஸ்வாமி ஷை கல்பலதா.
(9) அப்பையதீக்ஷிதர் ஷை சூத்ரவ்ருத்தி.
(10) வித்யாரண்யர் ஷை அதிகரணரத்நமாலா
(11) ஸதாசிவப்ரும்மம் ஷை பிரும்மசூத்ரவிருத்தி.

வீரசைவபாஷ்யங்கள்.

(12) ரேணுகபாஷ்யம்
(13) ஸோமநாத ஆராத்ரியம்.

வேறுமதஸ்தர்கள்.

(14) பாஸ்கராசார்யம்.
(15) விஷ்ணுஸ்வாமி
(16) விக்ஞானேந்த்ர பிக்ஷு
(17) நீலகண்டசிவாசார்யர்

சங்காராசார்யர் அருளியது என எண்ணிறந்த நூல்கள் நம் நாடெங்கிலும் பரவியுள்ளன. அவைகளில் "சங்கரபகவத்பாதர்" இயற்றியவை எனக்குறிப்பிட்ட நூல்கள் ஆதிசங்கரர் அருளியவை எனவும், மற்றவை அப்பெரியாரின் பரம்பரையினர் செய்த புத்த கங்கள் எனவும், கொள்ளவேண்டும்.

‡ விவேகசூடாமணி ஸர்வவேதாந்தசித்தாந்தஸாரஸங்க்ரகம், என்ற இரண்டும் சங்கரர் குருவாகிய கோவிந்தபகவத்பாதரைத் துதித்துத் தொடங்கப்படுகின்றன. உபதேச ஸாஹஸ்ரீ என்ற நூல் மண்டனமிச்ரர் அருளிய நைஷ்கர்ம்ய சித்தியில் மேற்கோளாய்க் கூறப்படுகின்றது. தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரமும், பஞ்சீகரணம் என்றக்ரந்தமும், மண்டனருடைய வ்யாக்யானங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. இக்காரணங்களால் மேற்குறித்த நூல்கள் பகவத்பாதர் கருணைகூர்ந்து கடாக்ஷித்தவை என்பதிற் சந்தேகமில்லை. ஸஹஸ்ரநாம பாஷ்யமும், வேதவ்யாஸமுனிவர் அருளிய பாரதத்தில் ஸநத்குமாரருக்கும், திருதராஷ்டாருக்கும் நடந்த அத்வைதஸாரமான ஸம்வாதத்திற்கு இயற்றப்பட்ட ஸநத்

---

‡ सर्ववेदान्तसिद्धान्तगोचरं तमगोचरम् ।
गोविन्दं परमानन्दं सद्गुरुं प्रणतोऽस्म्यहम् ॥

விவேக சூடாமணி.

ஸூஜாதீய பாஷ்யமும் நமது ஆதிகுரு இயற்றியவை எனச் செப்பலாம்.

† நூலாசிரியர் தமது வயது 85 எனக்கூறுகிற தேவி அபராதக்ஷமாபன ஸ்தோத்ரமும் இதனைப் பல விஷயத்திலும் ஒப்பிடக் கூடிய ஆனந்தலஹரீ என்ற க்ரந்தமும் ஆசார்யார் இயற்றியவை எனக்கூறுவதற்கிடமில்லை. பரதேவதையின் மகிமைகளைப்பற்றியும், ஸ்ரீசக்ரம் முதலிய பற்பல யந்திரங்களைப்பற்றியும், விரிவாய் விளக்கி உருக்கமான பல துதிகளால் நிரம்பி 35 வ்யாக்னங்கள் கொண்டு பெரிதும் போற்றப்படுகிற ஸௌந்தர்யலஹரி என்ற நூல் சைவசமயாசாரியாரான ஞானஸம்பந்தரைக்கூறுகின்றது. §

"தருணமங்கலை யுனதுசிந்தை தழைந்தபாலமு தூறினுல்
அருணகொங்கையி லதுபெருங்கவி அலைநெடுங்கடலாகுமே
வருணநன்குறு கவுணியன்சிறு மதலையம்புயல் பருகியே
பொருணயம்பெறுக விதையென்றொரு புனிதமாரிபொழிந்ததே"

"அம்மே, உனது மனம்குளிர்ந்து பால்பெருகினுல் உன் தனபாரமானது கவிகளால் நிறைந்த பெரியகடலுக்கு உவமையாகும். கௌண்டின்ய ரிஷியின் மரபில் அவதரித்த அந்தணச் சிறுவரான சம்பந்தமூர்த்தியாகிய மேகம் அக்கடலில் குடித்துத்தேவாரரூபமான கவிமாரிபொழிந்தது" என மேற்குறித்த நூலின்மொழி

---

† परित्यक्त्वा देवान्विविधविधसेवाकुलतया
मया पञ्चाशीतेरधिकमपनीते तु वयसि ।
इदानीं चेन्मातस्तव यदि कृपा नापि भविता
निरालंबो लंबोदरजननि कं यामि शरणम् ॥

தேவி அபராதக்ஷமாபன ஸ்தோத்ரம்.

§ तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयःपरावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

ஸௌந்தர்யலஹரி (75)

பெயர்ப்பொன்று கூறுகின்றது. இந்த ஸம்பந்தமூர்த்தி நாயனார் ஆறாவது நூற்றாண்டினர் எனத் தீர்மானம் செய்துள்ளார்கள்.

‡ மேலும், ஸ்ரீசக்கரத்தை உலகிற் பரவச் செய்வதற்கெனச் சிவபிரானை அவதரிக்குமாறு அம்மை தூண்டியதாக மற்றுமோர் ச்லோகம்கூறுகின்றது. அவ்வாறு அவதரித்து ஸ்ரீசக்ரப்ரதிஷ்டை செய்தவர் நமது ஆதிசங்கரர்.

† மாத்ருகாபுஷ்பமாலை என்ற நூல் ஆசார்யர் பூஜித்ததாகக் கூறுகின்றது.இவ்வாறுஆதிசங்கரரைப்பற்றிகூறுகிறநூலைஎவ்வாறு அவர் அருளியதாகக்கொள்வது? இக்காரணங்களால்ஸௌந்தர்ய லஹரி மாதிருகாபுஷ்பமாலா என்றநூல்கள்ஆதிகுருமூர்த்திஅனுக்ர ஹித்ததாகக் கூறுதல் பொருந்துமோ; எனச்சங்கையுறுகின்றோம்.

* "பிரமனும்,திருமாலும், தங்களது தலையும் பாதமும் காண வெண்ணிப் பறவையும் பன்றியுமாய்த் திரியுங்கால், அடியேன் பொருட்டெதிர்வந்தது விந்தை" எனச் சிவானந்தலஹரி பகர்கின்றது. ஜீவகோடிகளுக்குள் வேற்றுமையாகாது எனச் சாற்றுகின்ற அத்வைதமதத்தைப் போற்றவந்த சங்கரர், "திருமாலும் நான்முகனும் திர்யக்ஜன்மமேற்றுத் திரிகின்றனர்" எனச்செப்புவாரோ. ஆகலின் இச்சிவானந்தலஹரியைக் குருவரரின் கூற்றுக்கொள்ளுதற்கில்லை.

---

‡ चतुष्षष्ट्या तन्त्रैस्सकलमतिसंधाय भुवनं
स्थितस्तत्तत्सिद्धिप्रसवपरतन्त्रैः पशुपतिः ।
पुनस्त्वन्निर्बन्धादखिलपुरुषार्थैकघटना
स्वतन्त्रं ते तन्त्रं क्षितितलमवातीतरदिदम् ॥

ஸௌந்தர்யலஹரி (31)

† आद्ये आगमसंप्रदायनिपुणे आचार्यवर्यार्चिते (मातृकापुष्पमाला)

* इदं ते युक्तं वा परमशिवकारुण्यजलधे
गतौ तिर्यग्रूपं तव पदशिरोदर्शनधिया ।
हरिब्रह्माणौ तौ दिवि भुवि चरन्तौ श्रमयुतौ
कथं शम्भो स्वामिन्कथय मम वेद्योऽसि पुरतः ॥

சிவானந்த லஹரீ, (99)

ஸ்ரீ காமகோடிபீடம் 55வது ஸ்வாமிகளான ஸர்வக்ஞஸதா சிவபோதர் ராமநாதபுரம் ப்ரவீரஸேதுபதி மகாராஜாவுக்கு உபதே சித்தாகக் கூறப்படுகிற போதார்யா அல்லது ஸ்வாத்ம நிரூபணம் என்ற கிரந்தத்தைச் சங்காரசார்யர் நூலெனக்கொள்பவருமுண்டு. இஃது 56வது பரமசிவேந்த்ர ஸ்வாமிகளின் சிஷ்யரான ஸதாசிவ ப்ரும்மம் அருளியது என ஆத்மபோதர் கூறுகின்றார்.

இதுகாறும் கூறிவந்தபடி சிற்சில நூல்கள் பகவத்பாதர் திரு வாய் மலர்ந்தருளியவைஎனப்போற்றப்பட்டிருப்பினும் அவ்வாறு இல்லையெனக் கூறினோம். அருமையான கற்பனைகளால் நிரம்பிய வைகளும் படித்தோற்கு பக்தி பரவசம் விளைவிக்கக் கூடியவைக ளும், சொல்லணியும், பொருளணியும் பொலிந்துள்ளவைகளுமான இந்நூல்கள் சங்கரரால் அருளப்பட்டவை அல்லவெனச் சொல் லின் அவைகளின் பெருமை குன்றுமோ ? ஸ்ரீகாமகோடிபீடம் 8வது க்ருபாசங்கரர், 15வது உஜ்வலசங்கரர், 19வது மூகசங்கரர், 37வது அபிநவசங்கரர் என்ற இந்நான்கு பீடாதிபதிகளும் சங்க ரர் எனப்பெயர் வாய்ந்ததுமல்லாமல் அப்பெரியாரோ எனக்கரு தக்கூடிய சரித்திரமுள்ளவர்கள். ஆதலின் ஆதிகுருநாதர் இயற் றியவையல்லாதனவாகச் சொல்லப்படுகிற நூல்களை அம்மகாபுரு ஷரின் பரம்பரையினர் கூறியனவாகக்கொண்டு போற்றக்கட வோம். இனி காஞ்சீகாமகோடி பீடத்தை விவரிக்கப்புகுவாம்.

---

## அத்யாயம் 8.

### ஸ்ரீ காஞ்சீ ஸ்ரீ காமகோடி பீடம்.

---

மிகப்புராதனகாலத்தில் புண்யபூமிகளாயும் பெரிய நகரங் களாயும் கருதப்பட்டவை ஏழுபட்டணங்கள். காஞ்சீ, அயோத்தி, வடமதுரை, மாயா அல்லது ஹரித்வாரம், ஸ்ரீகாசி, அவந்தி, த்வாரகை என்ற இவை ஸப்தபுரிகளெனவும் இவைகளில் முதன் மையாகக் கருதப்பட்டு விளங்கியது காஞ்சியெனவும் முன்னம் குறித்துள்ளோம். நம் தென்னாட்டில் மிகப்பழமையாகக் கூறப் படுகிற ஸ்தலங்களும், அங்குள்ள ஆலயங்களும் 2000-ஆண்டு களுக்கு முந்தியவை அல்லனவெனச் சில சாஸனங்களால்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்.

நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாருக 2600-வருஷங்களுக்குமுன் இயற்றப்பட்ட "பத்துப்பாட்டு" என்ற ஓர் தமிழ் நூல்,

"காந்தளம் சிலம்பின் களிறுபடிந்தாங்கு
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்"

மலைகளுக்கிடையில் ஒரு யானை படுத்திருப்பதையொப்பப் பாம்பணையில் பெருமாள் பள்ளிகொண்டிருக்கிற அவ்விடத்தில் எனக் கூறுகின்றது. இத்தகைய ஸ்தலம் "திருவெஃகா" எனப் பத்துப்பாட்டின் உரையாசிரியராகிய நச்சினுர்க்கினியர் கூறுகின்ருர். மேலும்,

"ஊடவர்களேவ்வா றகன்றேழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்ருனிருந்தான் கிடந்தானிதுவன்றே
மன்ருர் மதிற்கச்சி மாண்பு."

ஊரகத்தில் நின்ற திருக்கோலமாகவும், பாடகத்திலுட்கார்ந்த திருக்கோலமாகவும் வெஃகாவில் பள்ளிகொண்ட திருக்கோலமாகவும் திருமால் எழுந்தருள்கிற ஆலயங்களையுடையவும், அறிஞரால் சிறந்த சபைகளையுடையதும், அழகிய மதில்களாற் சூழப்பெற்றதுமான காஞ்சீபுரத்தை விட்டு விலகுவதற்கு யார்தான் ஒப்புவர்" எனப் பழயதோர் வெண்பாவொன்றும் கூறுகின்றது. (நன்னூல் காண்டிகை.)

கூர்மாவதாரரூபியான விஷ்ணுவால் பூஜிக்கப்படுகிற கச்சபேச்வரர் என்ற சிவாலயமும் ஏகாம்ரநாதர் ஸந்நிதியும் நகரத்திற்கு நடுநாயகம்போல் அமைந்துள்ள காமகோட்டம் என்ற காமாக்ஷியம்மன்கோயிலும் இதனைச்சார்ந்த காமகோடி மடமும் வீணகானம் செய்கிற அம்மையின் பகுதியும் இடபமூர்கிற சிவபிரான் பகுதியும் சேர்ந்த அர்த்தநாரீச்வரர் ஸந்நிதியும் வேறு ஆலயங்களில் தர்சனம் செய்யுமாறு வைக்கப்பெருத சித்ரகுப்தன் பிம்பமும் இந்நகரத்தில் பொலிகின்றன. வித்யாரண்யஸ்வாமிகள் ச்ருங்ககிரியிலுள்ள வித்யாசங்கார் ஆலயத்தில் எவ்வாறு போற்றப் படுகின்றனரோ அவ்வாறே ஆதிசங்கருடைய திருவுருவம்ஒன்று இக்காஞ்சீபுரத்தில் பூஜிக்கப்படுகின்றது.

§ முனிவராகிய அகஸ்த்யர் காஞ்சிக்குச்சென்று அங்குவிளங்கும் திவ்யஸந்நிதிகளைத் தரிசித்துப் பூஜித்ததாக ப்ரும்மாண்டபுராணம் கூறுகின்றது. இன்னும் வரதராஜா, வைகுண்டப்பெருமாள் பாண்டவர் தூதன், விளக்கொளிப்பெருமாள், உலகளந்தபெருமாள் என்ற திருமாலின் ஸந்நிதிகள் விளங்குகிற ஹஸ்திகிரி ஸத்யவ்ரதக்ஷேத்ரமும் இக்காஞ்சியேயாம்.

1300-வருஷங்களுக்குமுன் நமது நாடுமுழுவதும்ஸஞ்சாரம் செய்த சீனதேசத்து யாத்திரிகர் ஒருவர் இக்காஞ்சிக்கு ஈடான நகரம் எங்கிலுமில்லையென்றும் 108-சிவாலயங்களோடு அறுபத்து நான்குமைல் விஸ்தாரமுள்ளதாய்ப் பெருமைபெற்றோங்கியதென்றும் தமது குறிப்பில் கூறியுள்ளார்.

தன் இடைக்குள்ள முத்துக்களையும் பொன்னையும் தானமாகக்கொடுத்தலை முறையே துலாபுருஷதானம் எனவும் துலாபாரதானமெனவும் கூறுவர். ஐந்து உலோகங்களால் நிரம்பிய குடமொன்றைக்கொடுத்தலை மகாபூதகூடம் என்பர். இஃது ஷோடசதானங்களில் ஒன்றும், இவ்வாறான எண்ணிறந்த தானங்களால் பல வேந்தர்கள் இக்காஞ்சியிலுள்ள கோவில்களைப் போஷித்துள்ளார்கள்.

பண்டைக்காலத்துப் பல்லவ வேந்தர்களில் ஒரு வகுப்பாராகிய துண்டபபல்லவர் இந்நகரை வென்று ;இதனுக்குத் "துண்டபபல்லவ விஷயம்" எனப் பெயரிட்டனர்.

இதுகாரணம்பற்றியே நம் தமிழ்நாட்டின் ஓர் பகுதி தொண்டைமண்டலம் எனப் பெயர்பெற்றதுபோலும். 11-வது நூற்றாண்டில் இந்நகரைப் பற்றிக்கொண்ட சோழர்கள் ஜயங்கொண்ட சோழமங்கலம் என இதனைக் கூறினர். எண்ணிறந்த மன்னர்கள் காஞ்சியைப் பற்றுதற்கெனக் கடும்போர் புரிந்து வெற்றியை விரும்பினர். மேற்கூறிய சிற்சில விஷயங்களால் பக

---

§ तस्य चिन्तयमानस्य चरतो वसुधामिमाम् ।
प्राप्तमासीन्महापुण्यं काञ्चीनगरमुत्तमम् ॥
तत्र वारणशैलेन्द्रमेकाम्रनिलयं शिवम् ।
कामाक्षीं कलिदोषघ्नीं मपूजयदथात्मवान् ॥

பிரும்மாண்டபுராணம் உத்தரபாகம் 5, 6—7.

வத்பாதர் விளங்கிய அக்காலத்தில் கச்சிமாநகரமொன்றே இந்தியாவின் தலைநகரமாய் நிலைத்தோங்கியதென்பது சொல்லாமல் விளங்கும்.

பாஷ்யகாரரான ஸ்ரீ ராமாநுஜாசாரியார், ஸ்ரீவேதாந்ததேசிகர் முதலிய பூஜ்யர்களான பலரும் புகழ்படைத்தது இப்புண்ய பூமியேயாம். அறுபத்துமூவரில் ஒருவரான திருக்குறிப்புத் தொண்டரும் எண்ணிலாச் சிவனடியாரும் திருமாலின் மலர் போன்ற பாதத்தில் வைத்த பக்தியென்னும் கடலில் ஆழ்வார்களும் தாழ்விலாக் கீர்த்திவாய்ந்தது இக்காஞ்சியன்றோ? ஜாதியெனும் மலரும், ஆடவரிற் சிறந்த விஷ்ணுவும், ரம்பையென்னும் தெய்வப்பெண்ணும், காஞ்சீ என்ற நகாமும், கங்கைமாநதியும், ஸ்ரீராமபிரானும்,மாககவியியற்றியசிசுபாலவதம் என்றகாவ்யமும், கவிகுலதிலகரான காளிதாஸனும் மேல் எனப் புகழ்கிற ச்லோகம் ஒன்று எல்லோராலும் அறியப்பட்டுப் பழமொழிபோல் வழங்குகின்றது. பண்டைநாள்தொட்டு பாதநாடெங்கும் புகழ்பெற்றும் புவிவேந்தராலும் கவிவேந்தராலும் போற்றப்பெற்றும் விளங்குகிற புனிதரான பரம்பரையைக்கொண்ட ஸ்ரீ காமகோடி பீடமானது சங்கரகுருவரால் தமக்குரியதாக நியமனம் செய்யப்பட்டுப் பங்கமில்லாமல் ஓங்குகின்ற காஞ்சியின் பெருமை பெரிதன்றோ?

கரூருக்கு அடுத்த நெரூரில் ஸமாதிபெற்று இப்பால் பெரிதும் போற்றப்படுகிறவர்களும் அமாநுஷமான அற்புதச் செயல்களால் க்யாதி பெற்றவர்களும் யோகிவரராய் விளங்கியவர்களும், பிரும்மசூத்ரவ்ருத்தி, பதஞ்சலியோகசூத்ரவ்ருத்தி, சித்தாந்தகல்பவல்லி ஆத்மவித்யாவிலாஸம் முதலிய அருமையான க்ரந்தங்களை அருளியவர்களுமான ஸ்ரீ ஸதாசிவப்ரும்மேந்த்ர ஸ்வாமிகள் ஸ்ரீகாமகோடி பரம்பரையில் 56வதாய்ப் பூஜிக்கப்பட்ட இரண்டாவது பரமசிவேந்த்ரஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று அவர்களுடைய பாதுகைகளைச் சிரமேற்கொண்டு வணங்கியதுமல்லாமல் குருரத்னமாலை என்ற நூலால் பெரிய அப்பரம்பரையைப் போற்றியுமுள்ளார். ‡ கி—பி 548-ல் லிங்கரூபியாய்

‡ सदाशिवब्रह्मेन्द्रधृतस्वपादपादुकान् ।
धीरान्परमशिवेन्द्रार्यान् ध्यायामि सततं हृदि ॥

ஜகத்குருபரம்பராஸ்துதி.

மறைந்த 24-வது ஸ்வாமிகளான ஸச்சிதானந்தகனரை ஸித்த விஜயமகாகாவ்யம் கூறும் காச்மீரவேந்தனான லலிதாதித்யமுக்தா பீடனென்பவன் 30-வது சீலநிதிப்ரும்மானந்தகனஸ்வாமிகளை வணங்கி அப்பெரியாரின் ஞாபகார்த்தமாகத் தனது நாட்டில் ஓர் சத்திரம் கட்டுவித்தான். இவ்விஷயம் பவபூதிஎன்ற வடமொழிப் புலவர் ஒருவர் மகாபுருஷவிலாஸம் என்ற நாடகத்தில் குறித்துள்ளார். ப்ரபோத சந்த்ரோதய ஆசிரியரான க்ருஷ்ணமிச்ரர் குரு விஜயம் என்ற க்ரந்தத்தில் 33-வது ஸ்வாமிகளைப்போற்றுகின்றார். காச்மீரகவியாகிய வாக்பதிபட்டரால் சங்கரேந்த்ர விலாஸம் என்ற காவ்யத்தில் புகழப்பெற்றவர்களும் ஆதிசங்கரர் எனக் கருதப் பட்டவர்களும் காமகோடி பீடாதிபர்களில் 37-வது அபிநவ தீரரே எனப் பன்முறையும் பகர்ந்தோம். மங்ககவி, க்ருஷ்ண மிச்ரர், ஜயதேவர், ஸுஹலன், ஜைநனான ஹேமாசாரி முதலிய கவிச்ரேஷ்டர்கள் 46வது பீடாதிபதியைப்புகழ்ந்திருக்கின்றார்கள். கி—பி 1117—1200-ல் மகாகவியாய்க் கீர்த்திபெற்றவரும் அர்ணவ வர்ணனம், நவஸாஹஸாங்கதேவ சரித்ரம், சிவசக்தி சித்தி, கண்டன கண்டகாத்யம், ஸ்தைர்யவிசாரப்ரகாணம், நைஷதம் முதலிய அரும்பெரும் காவ்யங்களை இயற்றியவருமான ஸ்ரீஹர்ஷர் ஸ்ரீகாமகோடிபீடத்தில் 47-வது ஸ்வாமிகளான சித்விலாஸ அத்வைதானந்த போதரைப்பற்றிப் புகழ்கின்றார் ச்ருங்ககிரி சாரதாபீடத்தின் உஜ்ஜீவனத்திற்குக் காரணமான ஸ்ரீவித்யாரண்யஸ்வாமிகளின் குருவாகிய ஸ்ரீவித்யாதீர்த்தர் 50-வது காமகோடி பீடாதிபதியாவார். மிகப்பெரிய இப்பரம்பரையின் பெருமையைப் பின்னர் விரிவாய் எழுதுவோம்.

கதாஸரித்ஸாகரம் எழுதிய ஸோமதேவரும் (45) ப்ரும்ம வித்யாபரணம், சாந்திவிவரணம், குருப்ரதீபிகை என்ற நூல்களை அநுக்ரகித்த சித்விலாஸ அத்வைதானந்தபோதரும் (47) ஆத்ம புராணம் என்ற கீதாபாஷ்யத்தையருளிய சங்கராநந்தரும் (51) சிவகீதாபாஷ்யம் வரைந்த இரண்டாவது பரமசிவேந்த்ரரும் (56) ஸ்ரீருத்ரத்தை விஸ்தாரமான வ்யாக்யானத்தால் விவரணம்செய்த விச்வாதிகஆத்மபோதரும் (57) நாம சித்தாந்தம் செய்து பக்தி பாவசத்தைத் தூண்டிய பகவந்நாமபோதேந்திரும் (58) காமகோடி பீடாதிபர்களேயாவார்கள்.

ஆந்திரநாட்டு வேந்தனுகிய விஜயகந்த கோபாலதேவன் என்ற மன்னனொருவன் 1291-ஆு ஜூலை-மீ 9உ உள்ள இனம் சாஸனம் ஒன்றை ஸ்ரீகாமகோடி பீடாதிபர்களுக்கு அளித்துள்ளான். கி—பி 1611—1672-ல் கோல்கொண்டா சுல்தானுயிருந்த அப்துல்லா குடாப்ஷா என்ற ராஜனிடம் மந்திரிகளாயிருந்தவர்களும், பெயர்பெற்ற ராமபக்தரான பத்ராசலம் ராமதாஸ்ஸ்வாமிகளின் மாதுலர்களுமான அக்கண்ணு மாதண்ணு என்பவர்கள் (58) ஸ்ரீ பகவந்நாமபோதருக்கு ஓர் தாமிரப்பட்டயம் கொடுத்திருக்கிறுர்கள். டில்லி சக்ரவர்த்தியான ஔரங்கமன்னரின் புதல்வராகிய பகதூர்ஷா என்பவர் ஹிஜிரா 1088 ஷவ்வல்மீ 1உக்குச் சரியான கி—பி 1710 ஏப்ரல்மாதத்தில் (60) மூன்றுவது மகா தேவேந்திரருக்கு ஓர் மான்யம் விட்டிருக்கிறுர். சந்த்ரமௌளீச்வர பூஜைநிவேதனங்களுக்கும் ப்ராம்மணசந்தர்ப்பணங்களுக்கும் ஸ்ரீஸ்வாமிகள் யாதொரு இடையூறுமின்றி ஸ்வேச்சையாய் அநுபவித்துக்கொள்ளவேண்டுமெனவும் ராஜாங்க அதிகாரிகள் இது விஷயத்தில் ப்ரவேசிக்கக்கூடாதென்றும் பகதூர்ஷா என்ற மகம்மதியமன்னர் எழுதிய சாஸனம் கூறுகின்றது. இதனுல் தற்காலத்திய சரித்திரக்காரர்கள் கூறுகிறவண்ணம் மகம்மதிய வேந்தர்கள் அவ்வளவு மதவைராக்யம்கொண்டு ஒழுகியதாகக் கொள்வதற்கில்லை.

மேலும் நம் நாட்டின் வடகோடியில்உள்ள இமயமலையில் அன்னியநாட்டாரால்கீழ்ப்படுத்தப்படாமல் ஸர்வாதிகாரத்துடன் ஸ்வராஜ்யம் செய்கிற நேபாளமகாராஜாஅவர்கள் காஞ்சீ காமகோடி பீடாதிபர்களைத் தங்களது குருவாகக்கொண்டிருத்தலுமல்லாமல் தமதுநாட்டு வருமானத்திலோர் பகுதியைக் காணிக்கையாகச் செலுத்திவருகிறுர்கள்.

இமயமலை, காச்மீரம், ஸ்ரீகாசி, உஜ்ஜினி, விந்தியமலை, த்ரியம்பகம், ஜகந்நாதம், ராமேச்வரம், பொதியமலை முதலிய பாதநாடெங்கிலும் உள்ள நகரங்களில் ஸமாதிபெற்று பூஜிக்கப்படுகின்றவர்களும், 26த்ராவிடர் 13 கர்நாடகர், 16ஆந்த்ரர், 8மகாராஷ்டார், 2 உத்தரதேசத்தவர் முதலிய பற்பல நாட்டாருமான பலரைப் பீடாதிபதிகளாய்ப் பெற்று ஆஸேது இமாசலம் புகழ்படைத்து ஓங்கிவிளங்குவது இக்காமகோடி பீடமொன்றேயாம்,

மேற்கூறிய விஷயங்களால் ஸ்ரீகாஞ்சி மடாதிபதிகள் பரத நாடெங்கிலும் திக்விஜயம் செய்தவர்களென்பதும் கொண்டாடப் படுகின்றவர்களென்பதும் சொல்லாமல் விளங்கும்.

பகவத்பாதரால் நியமனம் செய்யப்பெற்று தமக்கு உரியதாகக்கொண்ட இப்பீடாதிபதிகள் இந்திரஸரஸ்வதீ என்றழைக்கப் படுகின்றனர். சங்கரர் வாணியை வாதத்தில் வென்றதால் ஸரஸ்வதீ என்ற பட்டம் பெற்றுள்ளார்கள். மண்டனருடைய சரீர உபாதியை அச்விநிதேவர்கள் நிவர்த்தித்ததற்கு இந்திரன் கோபித்தானெனவும், பிறகு சங்கரருடைய மகிமைகளையறிந்த அத்தேவ ராஜன் தனது பட்டத்தைச் சங்கரருக்கு அளித்துச்சென்றான் என்றும் கூறப்படுகின்றது. ஆகவே, காமகோடி பீடாதிபர்கள் இந்த்ரஸரஸ்வதீகளாயினர். இவ்வாறே பதரீ, ஜகந்நாதம், த்வாரகை, ச்ருங்ககிரி மடாதிபதிகள் முறையே கிரி, அரண்யர்,ஆச்ரமி, பாரதி என்ற பட்டங்களைப்பெற்று விளங்குகின்றனர்.

"ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீகாமகோடி பீடாதிபர்" என ஸ்ரீமுகமுத்திரையும் ராஜசின்னங்களும், பிருதுகளும்பெற்றஇம்மடாதிபதிகள்பாரதநாடனைத்திற்கும்பரமாசாரியர்.

யோகிவரரான 60வது ஸ்வாமிகளின் காலத்தில் கர்நாடக யுத்தம் மிகப்பயங்கரமாய் நடந்தது. அப்பொழுது தக்ஷிணதேசங்களில் திக்விஜய யாத்திரை செய்துவந்த நமது பீடாதிபதிகளை 1740-1763ல் தஞ்சாவூர் வேந்தரான ப்ரதாபஸிம்ம மகாராஜா தமது ராஜதானியில் நிலைக்கச் செய்தனர்.

ஸ்வாமிகள் காவேரி தீரத்தில் விஜயம் செய்ய விரும்பியதால் ஸ்ரீசரபேந்த்ர மகாராஜா அவர்கள் 1821ல் கும்பகோணத்தில் அழகிய ஓர் மடம் கட்டுவித்தார்கள். ‡ அதுமுதலாக ஸ்ரீகாஞ்சிமடாதிபதிகள் கும்பகோணத்தில் வசித்துவருவதை அறியாதார் யார்?

1638-1692ல் பீடாதிபத்யம்வகித்த பகவந்நாம போதேந்த்ர ஸ்வாமிகளும், 1746-1788ல் காமகோடி பீடாதிபதிகளான நான்

---

‡ श्रीचन्द्रमौलीश्वरस्वामिसन्निवासार्थं राजश्री छत्रपति शेरफोजीमहाराजकृत आलयप्रतिष्ठा शालिवाहनशक 1743 वृषनामसंवत्सर माघशुद्धपञ्चमीभानुवार ॥

கும்பகோணம் மடத்திலுள்ள சிலாசாஸனம்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபர்களின்

# ஸ்ரீமுக-பிருதுகள்.

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालङ्कारत्रयस्त्रिंशत्कोटिदेवतासेवित श्रीकामाक्षीदेवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्रीमहादेवीसनाथ श्रीहस्तिगिरिनाथसाक्षात्कारपरमाधिष्ठान सत्यव्रतनामांकितकाञ्चीदिव्यक्षेत्रे शारदामठसुस्थितानाम् अतुलितसुधारसमाधुर्यकमलासनकामिनीधम्मिल्लसम्फुल्लमल्लिकामालिकानिष्यन्दमकरन्दझरीसौवस्तिकवाङ्गिनगुम्भाविजृम्भणानन्दतुन्दिलितमनीषिमण्डलानाम् अनवरताद्वैतविद्याविनोदरसिकानाम् निरन्तरालंकृतीकृतशान्तिदान्तिभूम्नाम्सकलभुवनचक्रप्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठाविख्यातयशोऽलंकृतानाम् निखिलपाषण्डषण्डकण्टकोद्घाटनेन विशदीकृतवेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापकाचार्याणाम् श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्यश्रीजगद्गुरु श्रीमच्छंकरभगवत्पादाचार्याणाम् अधिष्ठाने सिंहासनाभिषिक्त श्रीमन्महादेवेन्द्रसरस्वतीसंयमीन्द्राणाम् अन्तेवासिवर्य श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीश्रीपादाः ॥

காவது சந்த்ரசேகரேந்த்ரரும், 1814-1851ல் காஞ்சீமடாதிபதி களான 5வது சந்த்ரசேகர ஸ்வாமிகளும், ஜம்புகேச்வரம், அகிலாண்டேச்வரிக்குத் தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்திருக்கின்றனர்கள். ஜம்புகேச்வரத்திலும், குளித்தலையிலும் (குளிர்தண்டலை) முசிரிக்கு ஆறு மைல் மேற்கிலுள்ள மகேந்த்ர மங்கலத்திலும் ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களுக்குச் சொந்தமான கட்டிடங்களும் பூஸ்திதியும் உண்டு.

## அத்தியாயம் 9.

### ஸ்ரீசங்கரகுருபரம்பரை.

ஆதிசங்கரருடைய அற்புத சரித்திரத்தை எழுதப்புகுந்த அடியேன் அவரது அவதாரகாலத்தையும், ஆப்தசிஷ்யர்களையும் ஸ்தாபித்த மடங்களையும் அநுக்ரகித்த கிரந்தங்களையும்பற்றிச் சிறிது கூறி காஞ்சீகாமகோடி மடத்தின் பெருமைகளைப்பெரிதும் போற்றியுள்ளேன். இனி புண்யச்லோகமஞ்சரி, குருரத்நமாலை, ஜகத்குருபரம்பராஸ்துதி முதலிய நூல்களை ஆதாரமாகக்கொண்டு காமகோடி பீடாதிபர்களின் சரித்ரத்தை எழுதத்தொடங்குகின்றேன். க்யாதிபெற்ற இப்பெரியார்களின் பரம்பரையைப்பற்றிப் பேசுதலே நமது பாக்யமும் முக்கியமான நோக்கமுமென முன்னரே குறித்துள்ளோம்.

13-வது ஸ்வாமிகளான வித்யாகனர் கி-பி 272 முதல் 317 வரையில் பீடாதிபத்யம் வகித்தார்கள். இவர்களுக்குப் பிறகு விளங்கிய ஸ்வாமிகள் எல்லோருக்கும் குறிப்பிட்டிருக்கிற காலவரை தற்கால சரித்ர ஆராய்ச்சிக்கு நன்கு பொருந்துகின்றது. ஆதலின் சரித்ர வாயிலாக நிர்ணயம் செய்யக்கூடாத முதல் பதினொரு ஸ்வாமிகளின் காலவரையை ஸ்ரீ காமகோடி மடம் வம்சாவளியில் குறித்தவாறே எழுதுகின்றேன்.

நவீன முறையில் கல்வி கற்கும் மாணவர்களைக் கருதி எழுதப்படும் இப்புத்தகத்தில் நமக்குரியனவான கலியுகாதி வருஷங்களையும்,சாலிசகவருஷங்களையும் விடுத்து எல்லோரும் ஸர்வஸாதாரணமாய் உபயோகித்துவருகிற கிறிஸ்தவ வருஷத்தைக் குறித்துள்ளேன். மதாசாரியார்களின் சரிதமாகிய இதனைக் கற்றோரும் மற்றோருமான அனைவரும் கருத்துடன் நோக்குவர் என்பது அடியேனது துணிபு.

(1) சங்கரபகவத்பாதஸ்வாமிகள்.

(2) ஸர்வக்ஞாத்மேந்த்ர ஸரஸ்வதீ.

ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்யஸ்வாமிகள் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் ஏறும்பொழுது தாம்பரணீ தீரவாஸியான வர்த்தனர் என்றும், மகாதேவர் என்றும்பெயர்வாய்ந்த ஏழுவயதுள்ள ஒரு திராவிடர் மூன்றுநாள் வாதம்செய்து சங்கரரால் நன்குமதிக்கப்பட்டனர் எனவும், இவரே காமகோடிபீடத்தின் இரண்டாவது தலைவர் எனவும், பால்யரான இவருக்குப் போஷகராக ஆசார்யரின் முதலாவது சிஷ்யரான மண்டனர் அமர்த்தப்பட்டனர் எனவும் முன்னம் சொல்லியுள்ளோம்.

இவர்கள், ஸம்க்ஷேபசாரீரகம், ஸர்வக்ஞவிலாஸம் என்ற இரண்டு க்ரந்தங்களை அருளியிருக்கின்றார்கள். மநுகுலாதித்யன் என்ற வேந்தன் உலகைப் புரக்குங்காலத்தில் ஸம்க்ஷேபசாரீரகம் என்ற நூல் அருளப்பட்டதாக அப்புத்தகத்தின் முடிவுரை கூறுகின்றது. § பெரிய புராணத்தில் கூறப்பட்டவனான மநுச்சோழன் இம்மன்னனே எனத் தோன்றுகின்றது.

இம்மகான் கி—மு. 476முதல் 364வரையில் பீடாதிபதியாயிருந்து நளவருஷம் வைசாகக்ருஷ்ணசதுர்த்தசியில் காஞ்சீக்ஷேத்ரத்தில் அடங்கினார்கள்.

(3) ஸத்யபோதேந்த்ர ஸரஸ்வதீ.

இவர்கள் அமராவதீதீரவாஸியான த்ராவிடர். பாலனேசர் என்றழைக்கப்பட்டனர். இவர் அநுக்ரஹித்த பதகசதகம் என்ற நூலால் பௌத்தஜைநமத கண்டனம் செய்து அத்வைதஸ்தாபனம் செய்துளார் என்பது விளங்குகின்றது. கி—மு 364-268ல் காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கி நந்தனவருஷம் மார்கசீர்ஷ க்ருஷ்ணாஷ்டமியில் விண்ணுலகு சென்றனர். இவரது ஸமாதியும் காஞ்சீபுரமே.

---

§ श्रीदेवेश्वरपादपङ्कजरजस्संपर्कपूताशयः
सर्वज्ञात्मगिराङ्कितो मुनिवरस्संक्षेपशारीरकम् ।
चक्रे सज्जनबुद्धिवर्धनमिदं राजन्यवंशे नृपे
श्रीमत्यक्षतशासने मनुकुलादित्ये भुवं शासति ॥

(4) ஞானானந்தேந்த்ர ஸரஸ்வதீ.

சோழமண்டலத்தைச்சார்ந்த மங்கலம் என்ற க்ராமத்தாராகிய த்ராவிடரான நாகேசர் என்பவருக்குத் திருக்குமாரனாய்ப் பிறந்த இவர் ஞானோத்தமர் எனப் பூர்வாச்ரமத்தில் அழைக்கப் பட்டனர். மண்டனமிச்ரர் அருளியுள்ள நைஷ்கர்ம்யஸித்தி என்ற க்ரந்தத்திற்கு சந்த்ரிகை என்ற வ்யாக்யானம் இவர்கள் செய்துள்ளார்கள்.

இப்பெரியார் தம்முடைய குருவாகிய ஸத்யபோதரையும், பரமகுருவாகிய ஸர்வக்ஞாத்மரையும் அந்த வ்யாக்யானத்தில் பாராட்டுகின்றார். ‡ கி–மு 268—205-ல் பீடாதிபதியாய் விளங்கி மன்மதவருஷம் மார்கசீர்ஷ சுக்லஸப்தமியில் காஞ்சீபுரத்தில் ஸித்திபெற்றார்கள். அறுபத்துமூவரில் ஒருவரான ஆனாயநாயனார் சிவனடி சார்ந்ததும், லாலுகுடி என்ற திருத்தவத்துறைக்கருகிலுள்ளதுமான திருமங்கலம் என்ற க்ராமம் இப்பெரியாருடைய ஊராயிருக்கலாம்.

(5) சுத்தானந்தேந்த்ர ஸரஸ்வதீ.

விச்வநாதர் என்றழைக்கப்பட்ட இவரது ஊர் வேதாரண்யம் என்றும், கி—மு 205முதல் 124வரையில் காமகோடி பீடாதிபதியாய் ,சந்த்ரமௌளீச்வரரைப் பூஜித்தனர் என்றும், நளவருஷம் ஜ்யேஷ்டசுக்லஅஷ்டமியில் காஞ்சியிலேயே ஸமாதிபெற்றனர் என்றும் கூறுகின்றனர். இவரும் ஒரு த்ராவிடராவர்.

(6) அநந்தாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் ஒரு சோநாட்டு ஆந்திரமரபினைச்சார்ந்த அந்தணர். சின்னையா என்பது இவரது பூர்வநாமம். சங்கரபாஷ்யங்களுக்கும்

---

वस्तुख्यातिविवादितादितिमिरं नैष्कर्म्यसिद्धस्फुट-
व्याख्याचन्द्रिकया विधूय सुधियां सतद्दृष्टिमुन्मीलयन् ।
अन्तस्संभृतशान्तवेदनसुधोद्योतस्समुद्योतते
सर्वज्ञाश्रमचन्द्रमास्त्रिजगतीसर्वज्ञचूडामणिः ॥

பரமகுருஸ்துதி.

यमनियमनिलयधिषणोजयतिश्रीसत्यबोधाचार्यवर्यः ॥

குருஸ்துதி.

மண்டனர் இயற்றியுள்ள வார்த்திகங்களுக்கும் ஒரு டீகா இம் மகான் அருளியிருக்கின்றார். அதனை ஆநந்தகிரிடீகா என இப்பால் வழங்குகின்றார்கள். கி—மு 124—55-ல் பீடாதிபத்யம் ஆண்ட பிறகு ஸ்ரீசைலம் என்ற ஸ்தலத்தில் க்ரோதனவருஷம் வைசாக க்ருஷ்ணநவமியில் இவர் சித்திபெற்றார்.

## (7) கைவல்யாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

காமகோடி மடாதிபதியாவதற்குமுன் மங்கண்ணு என்று அழைக்கப்பட்ட இவர் திருப்பாடி என்னும் கிராமவாஸியான ஆந்திரமரபினைச்சார்ந்த அந்தணர் யோகசித்தியால் க்யாதிபெற்ற இவரைக் கைவல்யயோகியெனப் பல்லோரும் போற்றினார்கள். கி—மு 55முதல் கி-பி 28வரையில் உள்ள 83வருஷங்கள் மடாதிபதியாய் விளங்கிய இவர்கள் ஸர்வதாரிவருஷம் தைமாதப்பிறப்பன்று புண்யரஸா என்ற மண்டனமிச்ரர் அக்ரஹாரத்தில் அடங்கினார்கள்.

## (8) க்ருபாசங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

பூர்வாச்ரமத்தில் கங்கையா எனப் பெயர்வாய்ந்த தெலுங்கு நாட்டாரான இப்பெரியவர் கி—பி 28–69-ல் காமகோடி பீடாதிபதியாய் விளங்கினார்கள். சைவம், ஸ்காந்தம், வைஷ்ணவம், காணபத்யம், சாக்தேயம், ஸௌரம் என்ற சிவன், முருகன், விஷ்ணு, கணபதி பராசக்தி, சூர்யன் முதலிய தேவதைகளை முறையே தொழுது உய்யக்கூடிய ஷண்மதங்களை ஸ்தாபித்தவர் இவர்தான் எனப் போற்றுகிறார்கள். தமது சிஷ்யரான ஸ்வரூபடவிச்வரூபரை ச்ருங்ககிரி பீடாதிபதியாய் இவர் அமர்த்தினர் எனவும், மண்டனரின் மறுபெயரையுடைய இந்த விச்வரூபரை மண்டனராகவே மதித்து அவர் 800வருஷங்கள் ச்ருங்ககிரியில் பீடாதிபதியாய் விஜயம் செய்ததாகப் புனைந்து கூறப்பட்டுள்ளது எனவும் முன்னம் கூறினோம்.

மதுமாம்ஸாதிகளை வைத்துச்செய்கிற வாமபூஜை ஆகாது என விளக்கி வைதிகபூஜையே மேலெனக்காட்டி நம் நாட்டாரைச் சீருறச்செய்தும், காசி, காஞ்சீ, திருவொற்றியூர், திருவானைக்கா முதலிய ஸ்தலங்களில் தாடங்கப்ரதிஷ்டை செய்வித்தும் மத்வர், ராமாநுஜர் முதலிய மதாசாரியர்கள் தங்களது சித்தாந்தங்களைச்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளான 64 பீடாதிபதி
ஸ்ரீ சுதர்சன மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

சுலபமாய் ப்ரசாரம் செய்வதற்கு ஆஸ்பதமாய் பலி முதலியன செய்து பூஜிக்கும் தாந்திரீகமார்க்கத்தை ஒருவாறு கண்டித்தும் இவர் உபகரித்தார்.

அத்வைதசித்தாந்தம் கற்று அதனால் முதிர்ந்த ஞானமார்க்கத்தைப்பற்றிக் கொள்ளவியலாத பலர் இப்பெரியார் போதித்த வைதீகபூஜையை ஏற்றுக்கொண்டு உஜ்ஜீவித்தனர் என்பது இவரது சரித்ரத்தால் விளங்குகின்றது. பரம உபகாரியான க்ருபாசங்கரஸ்வாமிகள் விபவவருஷம் கார்த்திகை க்ருஷ்ணத்ருதீயையன்று விந்தியமலைச்சாரலில் உள்ள ஒரு புண்யஸ்தலத்தில் ஸித்தி பெற்றார்கள்.

காஞ்சீபுரத்திலல்லாது உத்தரதக்ஷிண தேசங்களில் ஸித்தி பெற்ற ஸ்ரீகாமகோடி பீடாதிபர் அனைவரும் பரதநாடெங்கிலும் திக்விஜயயாத்திரை செய்துளார் என்றும் ஸித்திபெற்ற நாட்டிலுள்ள இளைஞரையே பின் சந்ததியாராகத் தேர்ந்தெடுத்துள்ளார் என்றும் இங்கே கூறுகின்றோம்.

## (9) ஸுரேச்வரேந்த்ர ஸரஸ்வதீ.

69—127 வருஷங்களில் மடாதிபரான இவர் மகாராஷ்ட்ர தேசத்திலுள்ள மகாபலேச்வரத்தில் பிறந்து மகேச்வரர் என்றழைக்கப்பட்டார். வடநாடுகளில் விஜயயாத்திரை செய்து காஞ்சியில் சிலகாலம் வஸித்து அக்ஷயவருஷம் ஆஷாடபூர்ணிமா திதியில் அங்கேயே இவர்கள் ஸமாதிபெற்றார்கள்.

## (10) சிவாநந்த சித்கனேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் ஓர் கர்நாடக ப்ராம்மணர். ஈச்வரவடு என இவருக்கு நாமகரணம் செய்திருந்தார்கள். 127—172-ல் பீடாதிபதியாய் சந்த்ரமௌளீச்வரரை ஆராதித்து வ்ருத்தாசலத்தில் விரோதிக்ருத் வருஷம் ஜ்யேஷ்டக்ருஷ்ணதசமியில் அடங்கினார்கள்.

## (11) முதலாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

சந்த்ரசேகரர் என ஏழு ஸ்வாமிகள் காமகோடி பீடாதிபர்களாய் விளங்கியிருத்தலால் இவரை அப்பெயரைப் பூண்டவர்களில் முதலாவதாகக் குறித்தோம். பாலாற்றங்கரையிலுள்ள ஓர் க்ராமத்தில் ஹரி என நாமம்பெற்றுக் கல்வி பயின்றுவந்த இவர் த்ராவிடமரபினைச் சார்ந்தவர். 172முதல் 235வரையில் காமகோடி

பீடாதிபர் இவரே. தமது சிஷ்யராகியஸச்சித்கனரிடம் பீடாதிபத்யத்தை ஒப்புவித்து சேஷாசலம்என்ற மலையிலுள்ள ஓர் குகையில் ஆநந்தவருஷம் ஆஷாடசுக்லநவமியில் அழியாப்போனந்தமெய்திய இவரது பெருமையே பெருமை.

## (12) ஸச்சித் கனேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் கடிலநதிதீரவாஸியான சேஷார்யர் என்ற த்ராவிடர். இவரும் தங்களது குருவைப்போலவே சிஷ்யரிடம் மடத்தை ஒப்புவித்து நிர்மாணமவுனியாகி காஞ்சிக்குப்பக்கத்திலுள்ள ப்ராந்தங்களில் ப்ரும்மவரிஷ்டராய் ஸஞ்சாரம் செய்தார். இவரது மடாதிபத்யம் 235முதல் 272வரையிலுள்ள 37 ஆண்டுகள். கரவருஷம் மார்கசீர்ஷசுக்லப்ரதமையில் காஞ்சியிலுள்ள ஓர் ஆலயத்தில் லிங்கரூபியாய் மறைந்து ஸித்திபெற்றார்கள். †

அவ்வாலயம் காயாரோகணர்கோயிலென இன்னும் கொண்டாடப்படுகின்றது.

## (13) முதலாவது வித்ய கனேந்த்ர ஸரஸ்வதீ.

ஆந்த்ரமண்டலத்தைச்சார்ந்த ஓரூரில் நாயனு என்றழைக்கப்பட்ட இந்த ஸ்வாமிகள் 272-317க்கு இடையிலுள்ள 45வருஷங்கள் பீடாதிபத்யம் பெற்றார்கள். மலையாசலத்தைச்சார்ந்த தேசங்களில் உக்ரமாகவிருந்த ஓர்பைரவமூர்த்தியின் உக்ரத்தை அந்நாட்டாரின் வேண்டுகோளுக்கிணங்கிச் சாந்தமாக்கி உபகரித்தார்கள். பிறகு அம்மலைப்பக்கங்களிலுள்ள அகஸ்த்யபர்வதத்தில் தாதுவருஷம் மார்கசீர்ஷ அமாவாஸ்யைதினம் அடங்கினார்கள்.

ஸ்ரீகாமகோடிபீட பரம்பரைக்குறிப்பில் இந்த ஸ்வாமிகளின் காலம் தொடங்கி கலியுகாதிஆண்டுகளைக்குறிக்காமல் சாலிவாகன சகவருஷங்கள் கையாளப்பட்டு வருகின்றன எனவும் இவருக்குப் பிறகு விளங்கிய பீடாதிபதிகளில் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிற சராசரி 30வருஷங்களை இவருக்குமுந்திய 11 பீடாதிபர்களுக்கும் வைத்தால் கி—பி முதலாவது நூற்றாண்டு சங்கரபகவத்பாதர்க

---

† फलहायनकाष्ठमौनसेवावलहासास्पदबालमुग्धभावम् ।
अजरामरमात्तलिंगभावं भज सच्चित्घनमन्तरंगदेवम् ॥

குருரத்நமாலை 41.

ளுடைய காலமாக ஏற்படுகின்றது எனவும் இதுமுதல் விளங்கிய ஸ்ரீஸ்வாமிகளின் சரித்ரங்கள் தற்கால சரித்ரஆராய்ச்சிக்கு நன்ருகப் பொருந்துகின்றன எனவும் முன்னம் பன்முறையும் உரைத்துள்ளோம்.

(14) கீஷ்பதி கங்காதரேந்த்ர ஸரஸ்வதீ.

சுபத்ரர் என்றழைக்கப்பட்ட இவருடைய ஊர் காஞ்சீபுரம். இவரை ஆந்திரர்மரபினைச்சார்ந்த அந்தணரெனக் கூறுகின்ருர்கள். அகஸ்த்யமலையில் ஸமாதிபெற்ற இவரது குருவின் ஸமீபத்தில் இருந்த இவரும் அப்ராந்தங்களில் ஸஞ்சாரம்செய்து அகஸ்த்யரைத்தரிசித்து அவரிடம் பஞ்சதசாக்ஷரீ மந்திரஉபதேசம்பெற்று 317முதல் 12ஆண்டுகள் பீடாதிபதியாயிருந்து 329க்குச்சரியான ஸர்வதாரிவருஷம் சைத்ரசுக்லப்ரதமையன்று அகஸ்த்யமலையிலேயே அடங்கி ஸமாதிபெற்ருர்.

(15) உஜ்வலசங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் தபதீநதீதீரத்திலுள்ள மகாராஷ்ட்ரமரபினைச் சார்ந்த அந்தணர். அச்யுதகேசவர் என்பது இவரது பூர்வநாமம். குலசேகரன் என்ற அரசனெருவன் இவருடைய அநுக்ரகத்தால் கவிவேந்தன் ஆனதாகக் கூறப்படுகின்ருன். குலசேகராழ்வார் என்பவர் இவர்தானே என்பது நன்கு விளங்கவில்லை. உஜ்வலஸ்வாமிகள் பாதநாடெங்கிலும் விஜயயாத்திரைசெய்து காச்மீரம்சென்று, அங்குவ்யாபித்திருந்த ஜைனரான சகயவனர்களை நமதுநாட்டிற்கு வெளியேற்றி, 329-முதல் 367-வரையிலுள்ள 38-வருஷங்கள் பீடத்தில் வீற்றிருந்து, அத்வைதஸ்தாபனம் செய்து, அக்ஷயவருஷம் விருஷபசுக்லாஷ்டமீதிதியில் காச்மீரநாட்டிலேயே கலாபுரியில் சித்திபெற்ருர்கள். இதனை உஜ்வலசங்கரபுரி என இப்பொழுதும் சொல்கின்ருர்கள்.

(16) பாலகுரு ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதீ.

ஜைனமதஸ்தனுன தேவமிச்ரன் என்பவன் காச்மீரவேந்தனுக்கு மந்திரியாய் உத்யோகம் வகித்திருந்தான். இவனது புதல்வன் அதிபால்யத்திலேயே அத்வைதப்பற்றுள்ளவனுய் ஆசார்யபக்தி பூண்டு ஒழுகினன். இதனைச்சகியாத இப்பையனது தந்தை இரண்யன் பிரகலாதனைச் செய்ததையொப்ப இவனைச் சிந்துநதி

யில் தள்ளினன். நீரில் தத்தளித்துத் தவித்து வாடிய இச் சிறுவனைப் பூரிவசு என்ற பாடலீபுரத்து அந்தணனொருவன் கிட்டிக் கரையேற்றி சிந்துதத்தன் எனப்பெயரிட்டு உஜ்வலசங்கரரிடம் ஒப்புவித்தான்போலும்.

இவர்தான் நமது பாலகுருஸ்வாமிகள். இவர் காச்மீரநாட்டு சிஷ்யகோடிகளால் தங்கப்பல்லக்கு ஒன்று அளிக்கப்பட்டார். அப்பல்லக்கில் திக்விஜயயாத்திரை செய்துகொண்டும், தினந்தோறும் ஆயிரம் அந்தணர்களை உண்பித்துக்கொண்டும், த்ரியம்பக க்ஷேத்ரம் சென்று அங்கு பவவருஷம் ஜ்யேஷ்டசுக்லநசமியில் சிவபதமெய்தினர்கள். இவர்கள் 367-முதல் 375-வரையிலுள்ள எட்டு ஆண்டுகள் பீடாதிபதி. வடமேற்கு நாடுகளில் மூடர்களாய் அக்ரமம் செய்துவந்த பாரஸிகநாட்டாரான பாக்லிகபௌத்தர்களைப் பரதநாட்டிலிருந்து வெருட்டி உபகரித்தார்கள்.

(17) யோகிதிலகசுரேந்த்ர ஸரஸ்வதீ.

காமகோடி பீடாதிபத்யம் பெறுவதற்குமுன் மகாதேவர் எனப்பெயர்கொண்ட இவர் மகாராஷ்ட்ரதேசத்தவர். இவரது காலத்தில் முதலாவது நரேந்த்ராதித்யன் என்ற வேந்தன் காச்மீரத்தை ஆண்டான். இவனைச்சார்ந்த சுரேந்த்ரன் என்ற மன்னனது ஸபையில் துர்தீவி எனப் பெயர்வாய்ந்த ஒரு சார்வாகநாஸ்திகன் எதிர்த்தோரனைவரையும் வாதத்தில் வென்றுவந்தான். நமது யோகிதிலகர் இவனைத் தோற்கடித்தார். (ஸ்டீன்ஸ்துரை ராஜதரங்கிணீ 1-65) இதனைக்கவனித்த காச்மீரநாட்டுக் காவலன் சுரேந்த்ரரைப் பணிந்ததுமில்லாமல் சிலகாலம் அந்நாட்டைப் பரிபாலனம் செய்யுமாறும் வேண்டினன். 375—385-ல் காமகோடி பீடாதிபதிகளான இவர்கள் தாருணவருஷம் மார்கசீர்ஷசுக்ல ப்ரதமையன்று உஜ்ஜினிநகரத்திற்குச் சமீபத்தில் சித்திபெற்றார்கள்.

(18) மார்த்தாண்டவித்யாகனேந்த்ர ஸரஸ்வதீ.

பூர்வாச்ரமத்தில் ஸ்ரீகண்டர் என நாமகரணம் செய்யப்பட்ட இவர் மகாராஷ்ட்ரதேசவாஸி. பால்யம்முதல் இவரது சரீரத்தில் வெண்குஷ்டம் இருந்து குரூபியாய்ச் செய்துவந்ததால் தினந்தோறும் 1008முறை சூர்யனை நமஸ்கரித்துவந்தார். ஆதித்ய மூர்த்தியின் அநுக்ரஹத்தால் அக்குஷ்டநோய் மறைந்து அழகுற்ற மேனியுடன் தோன்றிய இவரை சூர்யதாஸர் என எல்லோ

ரும் அழைத்தார்கள். வடநாடுகளில் விஜயயாத்திரை செய்து ஏவிளம்பிவருஷம் பாத்ரபதக்ருஷ்ணநவமியில் கோதாவரீதீரத்தில் சித்திபெற்ருர்கள். 385-முதல் 398-வரையிலுள்ள 13-ஆண்டுகள் இவரது பீடாதிபத்யகாலம்.

### (19) ஸ்ரீமூகசங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

இந்த ஸ்வாமிகளின் சரித்ரம் விசேஷமானது எனவும், ஆதி சங்கரர் காலத்தை கி-பி 800ஆக நிர்ணயம் செய்திருப்பது முழுப் பிழை என விளக்கக்கூடியது எனவும் ஸ்ரீகாமகோடி பரம்பரையில் க்யாதிபெற்று ஓங்கிய மகான்களின் காலமும் சரித்திரமும் தற் கால ஆராய்ச்சிக்கு நன்ருகப் பொருந்துகின்றன எனவும் ஏற்கன வே சொல்லியுள்ளோம்.

கோனந்தவேந்தர்வம்சத்தில் ச்ரேஷ்டஸேனன் என்பவன் காச்மீரநாட்டை ஆண்டுவந்தான் இவனுக்கு ஹிரண்யன் தொர மாணன் என இருவர் புதல்வர் இருந்தனர், முதல்மகனுன ஹிரண் யன் தந்தைக்குப்பிறகு சிங்காதனம் எறிஞன். தம்பியாகிய தொரமாணனிடம் ஒற்றுமையின்றி யாதுகாரணம்பற்றியோ ஹிரண்யன் அவனைச் சிறையிலிட்டான். இவ்வாருக தொரமாண னுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அண்ணனுக்குப்பயந்த தொர மாணன் அம்மகனை ஒருவருமறியாமல் ஒரு குயவன்வசம் ஒப்பு வித்தான். (ராஜதரங்கிணீ III 105, 7) ச்ரேஷ்டஸேனனது பேர ஞன இவனே ப்ரவரஸேனன் எனக் கூறுவாம். தக்க வயதடைந்து தனது நிலைமையுணர்ந்த இச்சிறுவன் பேராசைகொண்ட பெரியப் பனுக்குப் பயந்தோடி அந்நியநாடுகளில் ஒளிந்துகொண்டான்.

விஷமாதித்யன், ஹர்ஷன், சகாரி, விக்ரமாதித்யன் எனப் பல பட்டப்பெயர்கள் கொண்ட குப்தவம்சத்து அரசனெருவன் 375—413-ல் வடதேசத்தில் ஜயசீலனுய் விளங்கினுன். இவன் காச்மீரவேந்தனுன ஹிரண்யனைப் போரில் முறியடித்து அந் நாட் டைத் தன் வசமாக்கிக்கொண்டான். இவ்வாருக ஒருநாள் நள் ளிரவில் விழித்தெழுந்த இச்சகாரிவிக்ரமன் சேவகர்களைக் கூவி னுன். இதனைச் செவியுற்ற சிறுவனெருவன் மன்னனது முன் னிலையில் வந்துநின்ருன். எல்லோரும் நன்ருக உறங்குகிற இந் நேரத்தில் நீ விழித்திருந்த காரணம் யாது? என வினவிய வேந்த

னுக்கு வடமொழி சுலோகங்களால் விடையளித்து தனது ராஜ பக்தியை இச்சிறுவன் நன்கு வெளியிட்டான். இதனைக்கேட்டுப் பெரிதுமுவந்த இவ்வேந்தன் இச்சிறுவனைப் போறிஞனாக மதித்து தான் வென்ற காச்மீரநாட்டு வேந்தனாக அமர்த்தினான்.

அரசனுக்குச் சந்தனம் அரைத்துக்கொடுக்கும் தொழிலில் அரண்மனையில் அமர்ந்திருந்த அந்தணனை இவன் அரசனானான். இவன் மாத்ருகுப்தன் என்ப்பெயர்பெற்றவன். ராஜ்யமும் கவித்வமும் ஒருங்கே கிடைக்கப்பெற்ற இவன் எவரையும் மதிக்காமல் கர்வங்கொண்டிருந்தான்.

இப்பால் நமது மூகசங்காகுருமூர்த்தி மாத்ருகுப்தனது ராஜ்யத்தில் விஜயயாத்திரை செய்தார்கள். வேந்தன் விருப்புடன் இவரைப் பணியாததாலும் நாட்டிலுள்ளாரது நடத்தையெல்லாம் அரசனையொப்ப நிகழுமே என எல்லோரும் கருதியதாலும், சிஷ்யர்களின் க்ஷேமத்தையும், அறிவையும் வளர்க்கக்கருதிய கருணை வள்ளலாகிய சங்கார், மாத்ருகுப்தமன்னனை நன்னடைக்குத் திருப்ப விருப்பங்கொண்டார்கள்.

மெந்தன் அல்லது மேது என ஓர் யானைமாவுத்தனும், ராமிலன் என்ற குதிரைப்பாகனும், அரசனிடம் இருந்தார்கள். இவ்விருவரையும் மூகசங்கார் தமது அனுக்ரகத்தால் கவிகளாகுமாறு கடாக்ஷித்தார்கள்.

உடனே இவர்களில் ஒருவனை மெந்தன் ஹயக்ரீவவதம் என்ற நாடகத்தையும், மற்றவனை ராமிலன் மணிப்ரபா என்ற நாடகத்தையும் அழகுற இயற்றி அரசனுக்குக் காட்டினார்கள். (ஸ்டீன்ஸ் துரை ராஜதரங்கிணீ I 93, குறிப்பு 269.) ‡

---

‡ ख्यातश्रीशङ्करेन्द्रप्रचुरतरकृपालब्धसाहित्यविद्यः

सद्यस्साधूक्तिसम्मोद्यपि परकवितामर्षिणो मातृगुप्तात् ।

प्रौढाः प्रौढोक्तिरूढैर्निबिडरसभरैर्गुम्फनैर्यत्र मेदुः

मेदुर्मोदादनानीद्धयवदनवधं वाग्म्यकुण्ठःस्समेण्ठः ॥

ஹயக்ரீவவதம்.

இருநூறுவருஷங்களுக்குமுன் இருந்த குருரத்நமாலைக்கு வ்யாக்யானம் எழுதிய ஆத்மபோதர் இவ்விரு நாடகங்களிலிருந்தும் மேற்கோள்கள் குறித்திருக்கின்றனர்.

ஆசார்யரின் அபாரமான மகிமைகளையுணர்ந்த மாத்ருகுப்தன் அவரது அடிகளைப் பணிந்து சிஷ்யனானான். பெரியப்பனுக்குப் பயந்தோடிய ப்ரவரஸேனனும் காச்மீரநாட்டைக்கிட்டினான். குருகடாக்ஷவீக்ஷண்யத்தால் ராஜ்யலோபமற்ற மாத்ருகுப்தன் ப்ரவரஸேனனைச் சிங்காதனத்திலேற்றி மூகருடன் காசிக்குச் சென்றான்.

---

सूत्रधारः— आर्ये अवधीयताम् ।

भङ्क्त्वा चन्दनमर्दिनः प्रणतयोः स्फूर्जद्रसां साहितीं
हर्षक्षोणिपतेः प्रहर्षमतुलं दृष्ट्वैव योऽतानिषुः ।
धीरांस्तान्गुरुशङ्करेन्द्रयमिनश्चित्ते स्मरन्नामिलः
प्राणैषीत्समणिप्रभां प्रथयितुं भक्तेर्गुरुर्गौरवम् ॥

नटी— अज्जयुत्त कोसो चन्दणमद्दके पणदा कोय हरिसमहीबालो के
वा सुगहीयणामहेआ सङ्करिन्दा ।
आर्यपुत्र कोऽसौ चन्दनमर्दके प्रणताः कोयंहर्षमहीपालः ।
केवा सुगृहीतनामधेयाः शङ्करेन्द्रा ॥

सूत्रधारः— न जानासि ?

मूकार्भोपि जगद्गुरोः करुणया विद्याघनस्याप्तवाक्
आचार्योऽस्ति हि शङ्करेन्द्रबिरुदः सर्वज्ञपीठाधिपः ।
अर्चाकिङ्करमातृगुप्तकवितागर्वस्य निर्वासना
याधाद्योऽश्वपनागपावपिकवीरामिल्लमेदूक्षणात् ॥

किञ्च—

अचार्येशद्विजन्मार्थ्यतिथिषु विनतो वैनतेयश्शकाहेः
काश्मीरानेव काव्यं किमपि कवयितुर्दत्तवानप्रमत्तम् ।
रक्षादत्तप्रहर्षप्रकृतिकृतिशताध्मातहर्षस्स हर्षः
कर्णाभ्यर्णावतीर्णः कथमततवनो विक्रमी विक्रमार्कः ॥

மணிப்ரபா.

ப்ரவரஸேனன் ராஜ்யபாரம் வகிக்கத்தொடங்கியவுடன் காச்மீரதேசத்திலுள்ள சந்த்ரபாகை அல்லது ஜீலம் என்ற நதி முதல் ஸிந்துநதிவரையில் அடர்ந்த அடவியாயிருந்தவிடத்தில் அவ்வேந்தனுடைய உதவியால் ஒரு பாதை மூகசங்கரால் ஏற்படுத்தப்பட்டது எனவும் 'ஸுஷமா' என்றஅப்பாதை இன்றுவரையில் எல்லோருக்கும் பயன்படுகின்றது எனவும் ஹரிமிச்ரீயம் என்ற வடமொழி நூலொன்று சொல்லுகின்றது.¶

இந்தியாவின் வடகோடியிலுள்ள காச்மீரதேசத்தில் காமகோடி பீடாதிபர்களின் பெருமை ஸுஷமா என்ற பாதையால் விளங்குவதையொப்ப ஆத்மபோதர் அநுக்ரஹித்தகுருரத்னமாலை வ்யாக்யானமும், அப்பரம்பரையின்பெருமையையே விளக்குவதால் ஸுஷமா என்ற பெயர் இதற்குஏற்ற காரணப்பெயராய் அமைந்ததெனச் செப்பலாம்.

ஸ்ரீமூகசங்கரேந்த்ரஸ்வாமிகள் 398 முதல் 437 வரையில் 39 வருஷங்கள் பீடாதிபதியாய் அத்வைத ப்ரசாரம் செய்து தாது ச்ராவணபூர்ணிமாதிதியில் கோதாவரிதீரத்தில் சித்திபெற்றனர்கள். இவர்கள் பால்யத்தில் ஊமையாய் இருந்தனர் எனவும், இவரது குருவான வித்யாகனஸ்வாமிகளின் அநுக்ரஹத்தால் பேசும் திறமைபெற்றனர் என்றும் மேற்குறித்த இரண்டு நாடகங்களும் நன்கு விளக்குகின்றன. காமகோடி பீடத்தில் பூஜிக்கப்படுகிற காமாக்ஷியம்மையை "மூகபஞ்சசதி" என்ற நூலால் துதித்திருக்கின்ற இவர் காமகோடி பீடாதிபரான சங்கரர் என்பதிற் சங்கை இல்லை.

இவரது கட்டளையின்படி ஸுஷமா பாதையைப்பண்படுத்திய ப்ரவரஸேனன் இம்மகானின் கடைக்கண் நோக்கினால் கவியாகி "ஸேதுபந்தம்" என்ற ப்ராக்ருத காவ்யமொன்று இயற்றி

---

¶ततः प्रवरसेनस्य साह्येनामिततेजसः ।
पदवीं सुषमां नाम हिमाद्रेस्स चकार ह ॥
आचन्द्रभवमासिन्धुहिमालयमहीभृतः ।
श्रीशङ्करेन्द्रेण कृता पद्या साऽद्यापि दृश्यते ॥

ஹரிமிச்ரீயம்

யிருக்கின்றான்.† மூகசங்கரர் அருளிய ப்ராசீன சங்கரவிஜயத்தில் இருந்து ஆத்மபோதரால் சிலமேற்கோள்கள் கூறப்படுகின்றன.

இச்சரித்ரமனைத்தும் 1000வருஷங்களுக்கு முன் எழுதப் பட்ட ராஜதரங்கிணியில் (III-106 323) குறிக்கப்பட்டுள்ளது. தேசசரித்திரத்தோடு ஒன்றுகிற சரித்ரங்களையுடையது இக்காம கோடி பரம்பரையொன்றுதானென இங்கும் கூறுகின்றோம்.

(20) ஸார்வபௌம சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

ஸார்வபௌமன் என்பது ராஜாக்களுக்கு ஏற்கும் பெயராத லாலும், நாம் முன்னம் கூறிய காச்மீரவேந்தனான ப்ரவரஸேனன் காசியில் வசித்துவந்த இப்பெரியாருக்கு எண்ணிறந்த திரவியம் காணிக்கையாக வருஷந்தோறும் அனுப்பியதாகத் தெரிதலாலும் காச்மீர அரசனாய் இருந்து மூகசங்கரரைப் பணிந்து சிஷ்யனான மாத்ருகுப்தன் ஸார்வபௌமர் எனப்பட்டம்பெற்று காமகோடி பீடாதிபதியானார் என்பது விளங்குகின்றது. இவர் காங்கன் தேசத்து மகாராஷ்ட்ர ப்ராம்மணர். 437—447க்கு இடையில் உள்ள பத்துவருஷங்கள் பீடாதிபதியாய்க்காசியில் வசித்து வ்யய வருஷம் ச்ராவண க்ருஷ்ணாஷ்டமியில் அப்புண்ய ஸ்தலத்தில் ஸித்திபெற்றார்.

(21) பரிபூர்ணபோதேந்த்ர ஸரஸ்வதீ.

ரத்நகிரி வாஸியான மகாராஷ்ட்ர மரபினைச் சேர்ந்த இவர் அச்மாபிலாபகம் என்ற மந்திரசக்தியால் யோகசித்திபெற்று தன் வந்திரியின் அவதாரமாகக் கருதக்கூடியவாறு வைத்யசாஸ்த்ர நிபுணராய் விளங்கி 447-481ல் 34 ஆண்டுகள் காமகோடி பீடாதி பதியாய் நிலைத்தோங்கினார்கள். மதுரர் என்பது இவரது பூர்வாச் ரமப்பெயர் ரௌத்ரிவருஷம் கார்த்திக சுக்லநவமியன்று ஜகந்நாத க்ஷேத்ரத்திற்கு அருகில் அடங்கினார்கள்.

---

†इअ सिरिपवरसेणविरइए दसमुहवहे महाकव्वे
पढमोआसासओ समत्तो ।
इति श्री प्रवरसेनविरचिते दशमुखवधे महाकाव्ये
प्रथम आश्वासः समाप्तः ।

ஸேதுபந்தம்.

## (22) ஸச்சித் ஸுகேந்த்ர ஸரஸ்வதீ.

பரிபூர்ணபோதஸ்வாமிகள் தாம் ஸித்திபெற்ற ஜகந்நாதத்திற் கருகிலுள்ள ஸ்ரீகாகுளத்தில்கிரீசர் என்ற பெயருடன் இருந்த ஆந்திரரான இவரைப் பீடாதிபதியாய்த் தெரிந்தெடுத்தார்கள். அறுமுகக் கடவுளை உபாஸித்து அவருடைய அநுக்ரஹத்தைப் பூர்ணமாய்ப்பெற்று விளங்கிய இவர், நாஸ்திகரான ஆர்யபடரை வாதத்தில் வென்று ஆஸ்திகர் ஆகுமாறு கடாக்ஷித்தார்கள். இப்பால் வாக்யபஞ்சாங்கங்களுக்குவழிகாட்டியாயுள்ள ஸாகரவாக்யங்கள் அடங்கிய ஆர்யபடீயம் என்ற கணிதசாஸ்திரம் இயற்றியவர் இந்த ஆர்யபடரேயாவார். கி. பி. 499ல் கியாதிபெற்று விளங்கிய இவர் கி. மு. 3101ஐ கலியுக ஆரம்பமாகக் கணக்கிட்டு அதனை வெள்ளிக்கிழமையாகக்கொண்டு கணிதமார்க்கத்தை வாக்யரூபமாயமைத்துள்ளார். சோதிடசாஸ்திர வல்லரான வராகமிகிருக்கும் கணிதசாஸ்திரத்தில் மிகத்தேர்ந்து சூர்யசித்தாந்தம், சித்தாந்த சிரோமணி,லீலாவதி முதலியன இயற்றிய பாஸ்கராசாரியருக்கும் இவர் முந்தியவர். காலாந்தரத்தில் தமது கணிதமார்க்கம் பிழைபட்டுப்போம் என இந்த ஆர்யபடரே கூறியுள்ளார். அவ்வாறே தற்காலம் பிழைநிரம்பியதாயுள்ள வாக்யபஞ்சாங்கத்தைநம்மவரிற் பலர் அநுஷ்டிப்பது அறிவீனம் என நாம் கூறவேண்டியதில்லை,

அந்நியதேசத்தில் ஸம்பவித்த ஒரு சூர்யக்ரஹணத்தைப் பார்ப்பதாகக் கடலைத் தாண்டிச்சென்ற இந்த ஆர்யபடர், காமகோடி பீடாதிபதிகளால் ப்ராயச்சித்தம் விதிக்கப்பெற்று அந்தணர் சமூகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

நமது ஸ்வாமிகள் 481 முதல் 512 வரையில் 31 வருஷங்கள் விஜயம் செய்து, கரவருஷம் வைசாக சுக்ல ஸப்தமியன்று ஜகந்நாதபுரிக்கு அருகில் ஸித்திபெற்றூர்கள்-

## (23) சித்ஸுகேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் காங்கன் ப்ரதேசத்தைச் சார்ந்த மகாராஷ்ட்ரர் சிவசர்மா என இவருக்கு நாமகரணம் செய்திருந்தார்கள். 512 முதல் 15வருஷங்கள் சந்த்ரமௌளீச்வரரை ஆராதித்துக்கொண்டு தமது ஸ்வதேசத்தில் வசித்து, 527க்குச் சரியான பாபவ வருஷம் ச்ராவணமாதம் கிருஷ்ணபக்ஷம் நவமீதிதியில் பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்னகிரியில் ஸமாதி பெற்றூர்கள்.

(24) ஸித்தகுரு ஸச்சிதானந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

பூவாரகக்ஷேத்ரமாகிய ஸ்ரீமுஷ்ணத்தில் சிவசாம்பர் எனப் பெயர்பூண்டு கல்விப்பயிற்சி பெற்ற த்ராவிடரான இவர் உத்தர தேசம் சென்று காமகோடி பீடாதிபதியானார். மடாதிபத்யம் பெற்ற 527-முதல் 21-வருஷங்களும் ஒரு இடத்திலும் தங்கியிராமல் பன்முறை திக்விஜயயாத்திரை செய்து 548ஆகிய ப்ரபவவருஷம் ஆஷாடசுக்லப்ரதமையில் கோகர்ணமஹாக்ஷேத்திரத்தில் லிங்கரூபமாய் மாறிவிட்டார்கள்.

மந்தபட்டர் என்ற கவியொருவர் இப்பெரியாரின் திவ்ய சரித்ரத்தை ஸித்தவிஜயமகாகாவ்யம் என்ற க்ரந்தத்தில் விளக்கியுள்ளார். *

(25) ப்ரக்ஞாகனேந்த்ர ஸரஸ்வதீ.

பொதியமாமலையில் ஸித்திபெற்ற 12வது ஸ்வாமிகள்முதல் இப்பீடாதிபர்வரையிலுள்ள ஸ்ரீகாமகோடி மடாதிபதிகளனைவரும் ஸ்ரீகாஞ்சீக்ஷேத்ரத்தில் தங்காமல் 250வருஷகாலங்கள் பரதநாடெங்கிலும் திக்விஜயம்செய்து சிஷ்யர்களின் க்ஷேமத்தைக்கருதி ஸ்ரீசந்த்ரமௌளீச்வர திவ்யப்ரஸாதங்களை அங்கங்கு வழங்கி அநுக்ரஹித்தார்கள் என்பது முன்னர் குறித்துள்ள சரித்திரங்களால் நன்கு விளங்கும்.

ப்ரக்ஞாகனஸ்வாமிகள் பினாகினீதீரவாஸியான சோணகிரி என்ற ஆந்த்ரர். 548—564 உள்ள 16 ஆண்டுகள் ஸ்ரீகாமகோடி பீடஸ்வாமிகளாய் இருந்து ஸ்வபாநுவருஷம் வைசாகசுக்லாஷ்டமியில் அடங்கினார்கள். இவரது சமாதி காஞ்சியில் எனச் செப்புகின்றனர்.

(26) சித்விலாஸேந்த்ர ஸரஸ்வதீ.

ஹஸ்திகிரி என்ற ஊரில் ஹரிகேசவர் என்றழைக்கப்பட்ட ஆந்த்ரஜாதியாரான இந்த ஸ்வாமிகள் 564—577-ல் பீடாதிபதி

---

* आबाल्यमद्भुतचरित्रनिधेरशेष योगानुभावकलनोदितलिङ्गमूर्तिः ।
पारेप्रभासमधुनाप्यनुभूयमानं सिद्धस्य तस्य चरितं स्पृहयामि वक्तुम् ॥
आप्तोपि विश्वगुरुतामचलोऽमलात्मा प्रत्यक्प्रभासमविकारमपेतसङ्गः ।
भूमेव यः स्फुरति लिङ्गवपुस्स सच्चि दानन्दसद्गुरुरपोहतु मे विमोहम् ॥

ஸித்தவிஜயமகாகாவ்யம்.

யாய் வீற்றிருந்து துர்முகிவருஷம் சாந்த்ரஸம்வத்ஸராதிதினத்தில் காஞ்சியில் ஸித்திபெற்றார்கள்.

### (27) முதலாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

சேஷநாராயணர் என்றழைக்கப்பட்ட இவருடைய ஊர் பத்மாசலம். மிதிலாதேசத்தவராயிருந்து ஆந்த்ரநாட்டில் குடியேறியவர் எனக்கூறுகின்றார்கள். 577—601 உள்ள 24வருஷங்கள் காமகோடி பீடாதிபத்யம் பெற்று ரௌத்ரிகார்த்திகக்ருஷ்ண தசமியில் காஞ்சியிலேயே ஸமாதியடைந்தார்கள்

### (28) முதலாவது பூர்ணபோதேந்த்ர ஸரஸ்வதீ-

ஆந்த்ரபாரம்பரையைச்சார்ந்த இவர் க்ருஷ்ணன் என்றழைக்கப்பட்டார். இவர் 601முதல் 618வரையில் பீடாதிபதியாய் இருந்து ஈச்வரவருஷம் ச்ராவணசுக்லதசமியில் சித்திபெற்று காஞ்சீக்ஷேத்ரத்தில் ஸமாதியடைந்தார்.

### (29) போதேந்த்ர ஸரஸ்வதீ.

பீடாதிபத்யம் பெறுவதற்குமுன் பாலஐயா எனப் பெயர் கொண்ட இவர் ஆந்த்ரதேசத்து அந்தணர் 618முதல் 37ஆண்டுகள் பீடாதிபதிபாய் விளங்கி 655க்கு நேரான ஆநந்தவருஷம் வைசாகக்ருஷ்ணசதுர்த்தியில் காஞ்சிமாநகரத்தில் அடங்கினார்கள்.

### (30) சீலநிதி ப்ரும்மாநந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

கடிலம் என்ற ஆற்றங்கரையிலுள்ள ஓர் க்ராமத்தில் ஜ்யேஷ்டருத்ரர் எனப் பூர்வாச்ரமப் பெயரினைக்கொண்ட இப்பெரியார் ஒருத்ராவிடர் சகல கலைகளையும் கற்றுத்தேர்ந்தவர். 655 முதல் 13வருஷங்கள் காஞ்சியிலேயே விஜயம் செய்து விளங்கினார்கள்.

காமகோடி பரம்பரையின் சரித்ரம் தேசசரித்திரத்துடன் ஒன்றிவருவதை நிரூபிப்பதற்கு உரியதோர் விருத்தாந்தத்தை இங்கு கூறுகின்றோம்.

யசோவர்மன் என்ற மன்னன் கன்னோசிநாட்டையாண்டு வந்தான். பவபூதியென்ற மகாகவியொருவர் இவனது சபையில் வித்வானாயிருந்தார். காச்மீர லளிதாதித்யன் எனக்கியாதிபெற்ற (கி—பி 699-735) வேந்தனொருவன் யசோவர்மனை வென்றதுமல்

லாமல் நமது தக்ஷிணதேசமெல்லாம் படையெடுத்துச்சென்று, கர்நாடகம், கேரளம், சோழநாடு முதலிய நாடுகளை வென்றான். (ராஜதரங்கிணீ IV, 131—145) மெச்சிப்புகழத்தக்க இவ்வரசனுடைய பெருமையை மேற்கூறிய பவபூதியென்பவர் விளக்கியுள்ளார். அந்நூலை மகாபுருஷவிலாஸம் என்பர். இச்சம்பவம் அனைத்தும் சிலகிதிஸ்வாமிகளின் காலத்தில் நடந்தேறின.

ரட்டா என்ற கர்நாடகராணியின் புதல்வனை ராஜ்யமடையவொட்டாமல் செய்த விஷயமும், மகம்மதியர்களைத்தோல்வியுற்று ஓடச்செய்ததும் தனது நாடாகிய காச்மீரத்தில் ஆதிமுதல் க்யாதி பெற்ற காமகோடி பீடாதிபர்களைத் தரிசித்து ப்ரஸாதம் பெறுவதற்கெனக் காஞ்சிக்குச்சென்ற செய்தியும் மகாபுருஷவிலாஸம் என்ற வடமொழி நாடகம் 5-உல்லாஸத்தில் காணப்படுகின்றன.†

நமது ஸ்வதேசமாகிய காச்மீரம் சென்ற லளிதாதித்யன் காமகோடி பீடாதிபதியிடம் தனக்கிருந்த அன்புப்பெருக்கால் அவர்கள் பெயர்கொண்ட அன்னசத்ரம் ஒன்றை அங்கு கட்டுவித்து அநுதினமும் ஆயிரக்கணக்கான ஏழைகளை உண்பித்தான் என அந்நூலாசிரியரான பவபூதி பகர்கின்றார். ‡

668க்குச்சரியான ப்ரபவவருஷம் ஜ்யேஷ்டசுக்லத்வாதசியில் நமது ப்ரும்மானந்த கனேந்த்ர ஸ்வாமிகள் காஞ்சீபுரத்தில் ஸித்தியடைந்தார்கள்.

---

† रट्टां कर्णाटराज्ञीं प्रसभमभिभवन्केरळीयांश्च कीश -
प्रख्यान्प्रख्यापयिष्यन्नचकलदजहद्दीर्घकौपीनपुच्छान् ।
म्लेच्छान्भूर्धार्धमुण्डानपि विधदधो विद्रवह्रीविवृत्यै
श्रीकाञ्चीकामकोटीमठमसददसौ श्रीगुरोस्सेवनाप्त्यै ॥

மகாபுருஷவிலாஸம்.

‡ चोळानभ्येत्य लीलावलयितवसुधामध्यकांच्यांसकच्या -
मास्ताचार्यान्सपर्याप्रमुदितहृदयानादधानस्ससम्राट् ।
यत्स्मृत्यै ज्योष्ठरुद्रालयपि विदधे साधुसाहस्रभक्तं
नाम्ना लक्षोत्तराणामपि तदशनदं वेश्म काश्मीरदेशे ॥

மகாபுருஷ விலாஸம்

### (31) சிதானந்த கனேந்த்ர ஸரஸ்வதீ,

ஆந்த்ரதேசவாஸியான இவர் பத்மநாபர் எனப்பூர்வம்பெயர் பெற்றிருந்தார். 668முதல் 672வரையில் உள்ள நான்குவருஷங்கள் இவர்கள் மடாதிபதியாய் வீற்றிருந்தார்கள். முன்னம் காச்மீர லளிதாதித்யனுல் வெருட்டப்பட்ட ரட்டா என்ற ராணியின் புதல்வனேச் சிங்காதனமேற்றிப் புரவலனுக்கி அநுக்ரஹித்தார்கள். லம்பிகை என்ற யோகசித்தியின்பொருட்டுச் சருகுகளேத் தின்று மகாயோகியானுர்கள். பிரஜோத்பத்திவருஷம் மார்கசீர்ஷசுக்லாஷ்டமியில் சித்தியாகிக் காஞ்சியில் ஸமாதிபெற்ருர்கள்.

### (32) ஸச்சிதாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

இவரும் ஒரு ஆந்த்ரரே. பல பாஷைகளிலும் பேசவல்லவராய் விளங்கிய இம்மகானேப் பாஷாபரமேஷ்டியெனக் கண்டோர் கொண்டாடினர். காஞ்சீ முதலிய நகரங்களில் மடத்துக்குச் சொந்தமான கட்டிடங்களேப் பழுதுபார்த்தார்கள். 672ல் பீடாதிபதியாகி 20வருஷங்கள் விஜயம்செய்து, 692 காவருஷம் பாத்பதக்ருஷ்ணுஷ்டமியில் காஞ்சியிலேயே அடங்கினுர்கள்.

### (33) இரண்டாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் த்ராவிடர் மாபினேச்சார்ந்த அந்தணர். சம்பு என்பது இவரது பூர்வாச்ரமப் பெயர். இவர்கள் திக்விஜ்யயாத்திரைசெய்து வரும்பொழுது காட்டுத்தீயில் அகப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றிய கருணேவள்ளலெனக் கூறப்படுகின்ருர். காச்மீரவேந்தனுன லளிதாதித்யன் ஸபையில் சங்குணன் என்ற பௌத்தன் மந்திரியாயிருந்தனன், காமகோடி பீடாதிபதியவர்கள் இந்த மந்திரியை வாதத்தில் வென்று விருது பெற்ருர். (ராஜதாங்கிணீ IV, 215—246—262)

692க்கும் 710க்கும் இடையிலுள்ள 18வருஷங்கள் பீடாதிபதியாய் க்யாதிபெற்ற இந்த ஸ்வாமிகள் ஸௌம்யவருஷம் மார்கசீர்ஷஅமாவாஸ்யையன்று காஞ்சீக்ஷேத்ரத்தில் அடங்கினுர்கள்.

### (34) பஹுரூப சித்ஸுகேந்த்ர ஸரஸ்வதீ.

710முதல் 737வரையிலுள்ள 27ஆண்டுகள் காமகோடி பீடாதிபதியாய் கீர்த்திபெற்றிருந்த இவருடைய ஊர் வேதாசலம். சுசீலகமலாக்ஷர் எனப் பூர்வநாமம் பெற்றனர். புண்யநதியாகிய

காவேரி உற்பத்தியாகிப் பெருகுகிற ஸஹ்யமலையிலுள்ள கவேர முனிவரின் குகையில் நெடுநாள் தவம் புரிந்திருந்து தாதுவருஷம் ஆஷாடசுக்லாஷ்டமியில் அங்கேயே அடங்கி சித்திபெற்றார்கள். இவர் ஓர் ஆந்த்ர ப்ராம்மணர்.

### (35) சித்ஸுகாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

இவரை சிதாநந்தர் எனவும் கூறுகின்றார்கள். சுரேசர் எனப் பெயர்பூண்டு பாலாற்றங்கரையில் வஸித்துவந்தவரான இவர் ஓர் த்ராவிடர். 737முதல் 21வருஷங்கள் பீடத்திலிருந்து 758க்குச் சரியான ஏவிளம்பி ஆச்விநபூர்ணிமையில் அழியாப்பேரானந்த மெய்தினார்கள். இம்மகான் அடங்கியது காஞ்சீபுரம்.

### (36 இரண்டாவது வித்யாகனேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் ஓர் த்ராவிடர் என்பதும் ஆர்யநாராயணர் என்றழைக்கப்பட்டனர் என்பதும் தெரிகின்றனவேயல்லாமல் இவரது வாசஸ்தானம் இன்னதெனக் குறிக்கப்படவில்லை.

நமது நாட்டின் மேற்குக் கடற்கரையில் மகம்மதியர் செய்த அதிக்ரமங்களை ஒருவாறு விலக்கி அப்பக்கங்களில் திக்விஜயயாத்திரை செய்துளார்கள்.* ஆதிசங்கரபகவத்பாதர்கள் தமது சிஷ்யரான பத்மபாதருடன் இவருக்குமுன் தோன்றி தமது பாதுகைகளை அளித்தவிஷயமும், அபிநவசங்கரரைப் பீடாதிபதியாக்குமாறு ஒரு அசரீரி செப்பிய செய்தியும் பின்வரும் அபிநவசங்கரர் புராணத்தில் நன்றாகக் கூறுவோம்.

758—788ல் வித்யாகனர் விளங்கினார்கள். ப்ரபவவருஷம் புஷ்யசுக்லத்விதீயைதிதியில் சிதம்பரக்ஷேத்ரத்திரத்தில் சித்திபெற்றார்கள்.

### (37) தீர அபிநவ சங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

இதுகாறும் எழுதிவந்த பாவனமான இச்சரித்ரத்தில் அடிக்கடி குறிக்கப்பட்டிருக்கிற புண்யபுருஷர் இவரே. இவரது வ்ருத்தாந்தத்தைச் சிரத்தையுடன் படிக்குமாறு விரும்புகின்றேன். இவருடைய பிறப்புவளர்ப்பும், ஸர்வக்ஞபீடாதிரோகணமும்,

---

* प्रांचते परितस्तुरुष्कचक्रे निचिते म्लेच्छगवींविभूम्निवक्रे ।

குருரத்நமாலை.

இமயமலையில் மறைந்து அருளியதும் மேலும் பல விஷயங்களும் ஆதிஸ்வாமிகளின் சரிதமாகிய சங்கரவிஜயங்களில் கூறப்பட்டுள் ளன. இவற்றைப் புகழ்ந்து கூறுகிற சங்கரேந்த்ரவிலாஸம் என்ற நூல் ஒன்றே வித்யாரண்யர் முதலிய மகான்களான பலரையும் இவ்வாறு மயங்கவைத்ததற்கு முதற்காரணம் எனப் பன்முறை யும் கூறியுள்ளோம்.

சிதம்பரக்ஷேத்ரத்தில் விச்வஜித் என்ற ஒரு த்ராவிடப்ராம்ம ணர் விசிஷ்டா எனப் பெயர்வாய்ந்த தர்மபத்நியுடன் தர்மநெறி வழுவாமல் இல்லறம் நடாத்திவந்தார். காலகதியால் விச்வஜித் சிவபதமெய்தினர். விசிஷ்டா என்ற அம்மை அக்காலவழக்கப் படி மஞ்சள்சாயமேற்றிய ஆடையணிந்து எலுமிச்சங்கனிகளால் அம்மனையாடிக்கொண்டு ஸஹகமனம் செய்வதற்குக் கிளம்பினள்.

இப்புண்யவதி கர்ப்பிணி எனக் காட்டுகிற சிற்சில குறிகளைக் கண்ட உறவினர் உடன்கட்டையேறுமல் தடுத்தனர்.§ விசிஷ்டா வும் சிசுவின்பிறப்பை எதிர்நோக்கி இல்லத்தில் தங்கினள். ப்ரஸவ காலம் கடந்து நெடுநாளாகியும் பிள்ளை பிறக்காததைக்கண்ட இவ் வம்மை நடராஜப்பெருமானை மனத்தில் த்யானித்து அபவாதத் திற்கு அஞ்சிக் காலங்கழித்தனள்.

இவ்வாறாக மூன்றுவருஷங்கள் கழிந்தன. பிறகு அழகிய ஒரு மகவு பிறந்தது.‡

கர்மசேஷத்தால் கர்ப்பவாஸம் செய்யவேண்டிய காலமனைத் தையும் இவ்வம்மையின்வயிற்றிலேயே போக்கினர் என குருரத்ன மாலையில் யோகிதிலகரான ஸ்ரீஸதாசிவப்ரும்மேந்தரர் கூறுவதால் நாம் எல்லோரும் இதனை ஏற்றுக்கொள்ளக் கட்டுப்பட்டிருக்கின்

---

§ गते दिवं गण्यतमे मखेशे तदेकपत्नीतरुणी विशिष्टा ।
कृतप्रयत्नापि किलानुगन्तुं न्यषेधि रोधाद्रजसोनिकाय्यैः ॥
சங்கரேந்த்ரவிலாஸம்.

‡ हायनेऽथ विभवे वृषमासे शुक्लपक्षदशमीदिनमध्ये ।
शेवधिद्विपतिशानलवर्षे दिष्यएनमुदसोष्टविशिष्टा ॥ (கலி3889)
சங்கரேந்த்ரவிலாஸம்.

ரேம்.‡ இதனை அபவாதமாகவே கொண்டு தோஷம் கற்பித்து அத்தோஷத்தை ஆதிசங்கரருக்கு உரியதாக்கிக் கூறுகிற க்ரந்தம் ஒன்றுளது. அதனை மத்வவிஜயம் எனக் கூறுவாம்.

அபிநவசங்கரசிசுவையீன்ற அன்னை அதனைத் தூக்கிச் சென்று சிதம்பரத்தின் புறத்தேயிருந்த தில்லைவனத்தில் கிடத்திக் கவலையற்று மீண்டனள். இவ்வாருக தெய்விகமான இக்குழந்தையைப் போஷிப்பதற்காக வ்யாக்ரபாதமுனிவர் தமது மனைவியுடன் அங்கு தோன்றி அச்சிசுவை வளர்த்து ஐந்தாமாண்டில் உபநயனம் செய்வித்து ஸகல கலைகளும் தானுகவே அறியுமாறு கடாக்ஷித்தார்.

இப்பால் திக்விஜயம் செய்துவந்த காமகோடி பீடாதிபதிபரான வித்யாகனர், சிதம்பரத்தில் தங்கினர் அபிநவரைப் பீடாதிபதியாக்குமாறு ஒரு அசரீரி கூறிற்று. சங்கரபகவத்பாதர் பத்மபாதருடன் திருவுருக்கொண்டெழுந்து பூஜிக்கத்தகுந்த தமது பாதுகைகளை வித்யாகனரிடம் கொடுக்க அவர் அவ்விரண்டையும் ஏற்றுக்கொண்டனர். காமகோடி பீடத்தில் பாதார்ச்சனை செய்யப்படுகிற திருப்பாதுகைகள் அவைதான் போலும்.

நமது சங்கராசாரியார் கலியுகாதி 3889-க்குச் சரியான கி-பி 788-ல் அவதரித்ததாகக் கூறப்படுகிறது.† இஃதே ஆதிசங்கரர் காலமென மேதாவிகளான பலர் ஏற்றுக்கொண்டு அவ்வாறு கூறிவருகின்றனர். வித்யாகனர் சிதம்பரத்தில் சித்திபெற்ற வருஷமும், 788 ஆதலால், அபிநவதீரர் வித்யாகனரிடம் ஒப்புவிக்கப்பட்ட காலத்தை அவதாரகாலமாகக் குறித்துளார் எனக்கொள்ளவேண்டும். இச்சரித்ரத்தில் இனிச் சொல்லப்படுகிற வரலாறுகள் ராஜதரங்கிணியில் கூறப்படுகின்றன.

---

‡ निजतातमृतेः परं प्रकाशे गजगर्भे त्रिशरद्विपच्चयकोशे ।
गमयन्तमिवोल्बवासशेषम् गणये विश्वजितस्मुतं विशेषात् ॥

குருரத்நமாலை.

† हायनेऽथ विभवे वृषमासे शुक्लपक्षदशमीदिनमध्ये ।
शेवधिद्विपदिशानलवर्षे(கலி 3889) तिष्यएनमुदसोष्टविशिष्टा ॥

சங்கரேந்த்ர விலாஸம்.

780–810 ல் ஜயாபீடவிநயாதித்யன் என்பான் காச்மீரதேசத்தைப் பரிபாலித்து வந்தான். அமரஸிம்மன் எழுதியுள்ள கோசத்திற்கு வ்யாக்யானம் குறித்தவராகிய க்ஷீரஸ்வாமி என்பவரும் காவ்யாலங்காரத்தை அலங்காரமாய் விவாணம் செய்த வாமன கவியும், மேலும், சடகன், சிந்துமன், சங்ககன், தாமோதரன், மனோரதேசன், தக்யன், என்ற மகாமகோபாத்யாயர்களும் அத்தேசத்தில் விளங்கினார்கள்.

கல்விப்பெருக்கும் செல்லப் பெருக்கும் ஒருங்கே பெற்று சொன்மாரி பொழியும் வல்லமையும் பெற்று புகழ்கொண்டிருந்த இவ்வெண்மரையும் வாக்பதிபட்டர் என்பவர் வாதத்தில் வென்று ஸர்வக்ஞர் எனக் கொண்டாடப்பட்டனர். இப்பட்டரின் திட்டமான கல்வியின் விநயத்தைக் கண்ட விநயாதித்யவேந்தன் இவரைத் தன் சபையில் வைத்துப்பெரும் பரிசளித்துப்போற்றினான்.

இவ்வாறிருக்க, காமகோடி பீடாதிபரான நமது சங்காகுரு காச்மீரத்திற்கு விஜயம் செய்து அளவிறந்த கல்வியின் பெருமையாலும், அரசனது அன்பினாலும் கர்வங்கொண்டிருந்த வாக்பதிபட்டரை வாதத்தில் வென்று விருது பெற்றார்கள்§ வாக்பதியால் தோல்வியுற்ற எண்மரும் வாக்பதியுங்கூடிய ஒன்பதின்மரையும் நவரத்தினங்களாலான மாலை எனச் சாற்றலாம். இவர்களால் வணங்கப்பெற்று நடுநாயகம் போல் விநயாதித்யன் சபையில் வீற்றிருந்த சங்கரர் ஸர்வக்ஞரன்றோ.

இவ்வாறு காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடம் ஏறியவர் இச்சங்கரர் என ஸத்குரு ஸந்தான பரிமளம் என்ற நூல் கூறுகின்றது.* இவ

§ क्षीरस्वामिमनोरथेशचटकश्रीसान्धिमच्छंकक
श्रीदामोदरधक्ययवामनमहोपाध्यायमुख्यान्कवीन् ।
अष्टावप्यभिभूयदुर्जयतयाभट्टोद्भट:प्रत्यहम्
योदीनारकलक्षवेतनवह:कोऽस्याग्रतस्सोऽप्यभूत् ॥

* देदीप्यच्छुक्रदन्तोद्भटनवभटाबुद्धबुद्धाध्वमध्वा
स्वादप्रोदस्तवेदाट्टतिरथसजयापीडसम्राडपिद्राक् ।
यद्वागुद्भूतबोध:श्रुतिमयवपुष:शारदाया:पुरस्तात्
पीठेसर्वज्ञयोग्येनिदधाधिपदच्छायमार्चीद्यमर्च्यम् ॥

ஸத்குருஸந்தான பரிமளம்.

யைப்பற்றிச் சாற்றுகிற சங்கரேந்த்ர விலாஸம் வாக்பதிபட்டரால் எழுதப்பட்டதென்பதைப் பலவிடங்களில் சாற்றியுள்ளோம்.

எல்லோரும் போற்றிப்புகழத்தக்க இப்பெரியார் 788முதல் 840வரையிலுள்ள 52ஆண்டுகள் ஸ்ரீகாமகோடி பீடாதிபர்களாய் வீற்றிருந்து சித்தார்த்திவருஷம் ஆஷாடஅமாவாஸ்யையன்று இமயமலையிலுள்ள ஆத்ரேயர் குகையில் மறைந்தருளினார்கள். *

அபிநவசங்காருக்கு 400வருஷங்களுக்குப் பிறகு காமகோடி பீடாதிபரான சித்விலாஸர் தாமியற்றிய சங்காவிஜயத்தில் இச் சங்காருடையஇமாலயகுகாப்ரவேசத்தைஆதிசங்காருக்குச்சாற்றுகின்றார். காச்மீரஸர்வக்ஞபீடாதிரோகணமும் அவ்வாறே கூறப் பட்டிருக்கின்றது.

ஆதிசங்கரர் எனப் போற்றத்தகுந்த ஸ்ரீ காமகோடி பீடாதிபரான தீர அபிநவசங்கரேந்த்ர ஸரஸ்வதீஸ்வாமிகளின் புராணத்தை மிகச்சுருக்கமாகக் கூறிமுடித்தோம்.

## (38) ஸச்சித்விலாஸேந்த்ர ஸரஸ்வதீ.

கான்யகுப்ஜ நாட்டு மகாராஷ்ட்ரரான இவர் ஸ்ரீபதி எனப் பூர்வாச்ரமத்தில் அழைக்கப்பட்டார். 855-884-ல் காச்மீர ராஜனான அவந்திவர்மன் சபையில் வித்வானாய் விளங்கியவரும், த்வநி என்ற க்ரந்த கர்த்தாவுமான ஆனந்தவர்த்தனராலும், ஹரவிஜயம் என்ற நூலையியற்றிய ராஜானகரத்நாகரன் எனப்பெயர் கொண்ட மகாகவியாலும் இந்த ஸ்வாமிகள் கொண்டாடப்பட்டு விளங்கினார்கள். (ராஜதரங்கணீ- V-34) 840-873-ல் காமகோடி பரம்பரையில் ப்ரபாவத்துடன் வீற்றிருந்து, நந்தன வருஷம் வைசாக பூர்ணிமையில் மடத்திற்கு உரிமையான காஞ்சீபுரத்தில் ஸமாதி பெற்றார்கள். இவர் முதல் 43-வது பரமசிவஸ்வாமிகள் வரையில் உள்ள ஸ்ரீஸ்வாமிகள் எழுவரும் சித்திபெற்ற ஸ்தலம் காஞ்சீ க்ஷேத்ரமேயாம்.

---

* आत्रेयकन्दरमनुव्रजितोपि शिष्यै रन्तर्हितस्स्वतनुरेव स शङ्करेन्द्रः ।

புண்யச்லோகமஞ்சரி.

इति परीत्य दिशो विदिशश्च यः परिधरं परिभूतमतान्तरः ।
पुनरवाप्तपुरारिधराधरः स तनुतेऽतनुतेजसि संस्थितिम् ॥

சங்கரேந்த்ரவிலாஸம்.

## 39. சோபன மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

பேரழகு வாய்ந்து ஜ்வலித்துக் கொண்டிருந்த இவரை உஜ்வலர் எனவும் கூறினர்கள். சிவராமபட்டர் என்பது இவரது வீட்டுப்பெயர். இவர் ஓர் கர்நாடகப்ராமணர். 873 முதல் 42 வருஷங்கள் விஜயம் செய்து 915-க்குச் சரியான பவவருஷம் வைசாக சுக்லாஷ்டமியில் சித்தியடைந்தார்கள். இவர் தொடங்கி 44-வது ஸ்வாமிகள் முடியவுள்ள ஏழுபீடாதிபர்களும். கர்நாடகப்ராமணர்,

## 40. கங்காதரேந்த்ர ஸரஸ்வதீ.

யாயாவர வம்சத்தைச் சேர்ந்த வேந்தர்கள் கன்னோசி நாட்டையாண்டு வந்தார்கள். இப்பரம்பரையில் மகேந்த்ர மகீபாலன் என்பான் 903-917-ல் அந்நாட்டை ஆக்ஷி செய்தான். ராஜசேகரன் என்ற கவிவேந்தன் இவ்வேந்தன் சபையில் வீற்றிருந்தான். யாதுகாரணம் பற்றியோ ராஜசேகரன் கண்பார்வையிழந்தான். முகத்திற் கண்ணிழந்த குருபியான இக்கவிராயன் திக்விஜயம் செய்து கொண்டு அங்கு தங்கிய கங்காதரரைத் தனக்குக் கதியெனக் கருதிப் பணிந்தான். உயிரற்ற மகவினைச்சங்கர பகவத்பாதர் உயிர்ப்பித்தார். வித்யாகனர் மூகருக்கு வாக்களித்தார். மூகர், குதிரை, யானைப் பாகர்களான அற்பர்களை விற்பன்னராக்கினர். இக்கங்காதரர் சேகரனுக்குப் பார்வையளித்தார். சங்கர பரம்பரையினரான இப்பெரியார்களுக்கு இஃதோர் அருமையன்று. *

கங்காதரரின் கருணை நோக்கினல் ராஜசேகரன் பலநூல்களைச் செய்துளான். அவை, பாலராமாயணம், ப்ரசண்ட பாண்டவம், கற்பூரமஞ்சரீ, வித்தஸால பஞ்சிகை என்பன. இந்நூல்கள் ஆதிசங்கரர் காலத்தவை என வித்யாரண்யர் தமது சங்கர விஜயத்தில் கூறுகின்றார்.

பீமாதீரவாஸியான நமது கங்காதரரைப் பூர்வாச்ரமத்தில் அப்பண்ணு என்றழைத்தார்கள். 915-950 காமகோடி பீடாதிபரான இவர்கள் ஸௌம்ய ச்ராவண சுக்லப்ரதமையில் அடங்கினர்கள்.

---

* कृतसट्टकसत्रिनाट्यबन्धव्रतया यावरराज शेखरान्ध्यम् ।
हृतवन्तमनन्तमन्त्रशाक्तिं व्रतिगङ्गाधरमाश्रयेऽर्थ्यसूक्तिम् ॥

குருரத்னமாலை 69,

## 41. ப்ரும்மானந்த கனேந்த்ரா ஸரஸ்வதீ.

பீடாதிபதியாவதற்கு முன் நரஸிம்மபட்டர் என்பது இவரது பெயர். 950-முதல் 978-வரையில் 28-வருஷங்கள் காஞ்சீபீடத்திலிருந்து ஈச்வர வருஷம் கார்த்திகசுக்லாஷ்டமியன்று சித்திபெற்றூர்கள்.

## 42. ஆனந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

இப்பீடாதிபதியின் ஊர் துங்கபத்ரா தீர மெனச்செப்புகின்றனர். சங்கர பண்டிதர் என்பது இவரது நாமம். 978-1014-ல் மடாதிபதியாய் விளங்கினூர்கள். ப்ரமாதிச சைத்ரசுக்ல நவமியில் சித்திபெற்றூர்கள்,

## 43. இரண்டாவது பூர்ணபோதேந்த்ர ஸரஸ்வதீ.

பூர்வாச்ரமத்தில் ஹரி என்றழைக்கப்பட்ட இவர்கள், 1014 1040-ல் காஞ்சிகாமகோடி பீடாதிபதியாய் வீற்றிருந்து ப்ரமாதி பாத்ரபதக்ருஷ்ணத்ரயோதசியில் ஸமாதி பெற்றூர்கள்.

## 44. முதலாவது பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ.

இத்த ஸ்வாமிகள் 1040-முதல் 1061-வரையிலுள்ள 21 ஆண்டுகளின் பெரும்பகுதியைக் காவேரிநதி உற்பத்தியாகிற குடகுமலேயிலுள்ள ஓர் குகையில் தவம்புரிந்து நடத்தினூர்கள். அப்பொழுது இவரண்டையில் நின்றவர் ஸோமதேவன் என்றசிஷ்யன் ஒருவனேயெனச் சொல்லப்படுகின்றது. ஸ்ரீகண்டர் என்பது இவரது பூர்வநாமம், சார்வரி ஆச்விந சுக்லஸப்தமியில் சித்தியடைந்தார்கள். இவரும், இவருக்குமுந்திய ஆறுஸ்வாமிகளும் காஞ்சியிலேயே ஸமாதி யெய்தினூர்களென்று முன்னமே குறித்துள்ளோம்.

## 45. ஸாந்த்ராநந்த போதேந்த்ர ஸரஸ்வதீ.

குருவாகிய பரமசிவஸ்வாமிகளுடன் குடகுமலேயில் இருந்த ஸோமதேவர் இவர்தான். இவர் "கதைகளாகிய நதிகள் சங்கமமாகின்ற கடல்" எனப் பொருள்படுகிற "கதாஸரித்ஸாகரம்" என்ற நூலே எழுதியருளினூர். தாரா என்ற உஜ்ஜினீ நகரத்து வேந்தனை போஜன் காணிக்கையாக ஸமர்ப்பித்த முத்துப்பல்லக்கில் ஏறி திக்விஜயம் செய்தார்கள். 1063-1089-ல் காச்மீர ராஜாவான கலாஸன் உதவியால் காஞ்சீபுரம் காமகோடி மடத்தில் துருக்கர்கள் ப்ரவேசியாமல் பாதுகாத்தார்கள்.

1061-முதல் 1098 வரையிலுள்ள வருஷங்கள் விஜயம் செய்து, ஈச்வர ஆஷாட அமாவாஸ்யையில் திருவண்ணாமலையில் ஸமாதி பெற்றார்கள். இவரும், இவருக்கு முந்திய ஆறுஸ்வாமிகளும். கர்நாடப்ராம்மணர்கள் என மேலே சொல்லியுள்ளோம். இதன் பிறகு வருகிற ஒன்பது ஸ்வாமிகள், அதாவது, 53 சாந்த்ர சூடர் வரையில் உள்ள எல்லோரும் த்ராவிடர்கள்.

## 46. மூன்றாவது சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ.

இவரது பரமகுருவான பரமசிவஸ்வாமிகளின் பூர்வநாமமாகிய ஸ்ரீகண்டர் என்பதே இவரது பூர்வ நாமம். இவரைச்சந்த்ர சூடர் எனவும் கூறுகின்றனர். சாளுக்ய மரபில் வேந்தனான குமாரபாலவித்யா லோலன் சபையில் (1143-1172) வீற்றிருந்து, குமாரபால சரிதம் என்ற அரியநூலை யியற்றிய ஹேமாசாரி என்ற ஜைநகவி யொருவன் இவர்களிடம் தோல்வியுற்று அவமானமடைந்தான்.

சந்த்ராலோகம், ப்ரஸந்நராகவம், பக்திகல்பலதிகை என்ற நூல்களின் ஆசிரியரான ஜயதேவர் என்பவர்'நமது ஸ்வாமிகளின் சொன்மாரியால்' ஹேமாசார்ய காட்டுத்தீ அவிந்தது'' எனப் புகழ்ந்து கூறுகின்றார். ‡

வங்காளவேந்தனான லக்ஷ்மணஸேனன் (1170—1200) சபையில் க்யாதிபெற்றவரும் அஷ்டபதீ என்ற கீதகோவிந்தமகாகாவ்யம் எழுதி அநுக்ரகித்தவர்களும் கண்ணபிரானுடைய கருணையைப்பூர்ணமாய்ப்பெற்றவர்களுமான ஜயதேவர் இவர்தானோ என்பது நிச்சயமாய் விளங்கவில்லை. (ஸ்மித்துரை 406)

கீர்த்திவர்மன் (1050—1100) சபையில் விளங்கி ப்ரபோத சந்த்ரோதய நூலாசிரியரான க்ருஷ்ணமிச்ரர் தமது குருவிஜயத்தில் இவர்களைக் கொண்டாடுகிறார். †

---

‡ श्रीचन्द्रचूडचरणांछितकाञ्चिपीठान् सर्वज्ञशेखरमणीन्सततं श्रयामः ।
यद्वागनर्गलगलत्सरसोक्तिवर्षै राचार्यहेमदववाह्निरपि व्यरंसीत् ॥

பக்திகல்பலதிகை.

† प्राम्शुप्रालेयपृथ्वी धरविकटतटप्रोल्लसत्प्रौढगङ्गा-
पूरावष्टम्भमुष्टिन्धयपटुभणिताचान्तहेमार्यकान्तीम् ।
आचार्याश्चन्द्रचूडानवनिपतिरथामुक्तजैनाभिमानो குருவிஜயம்.

வைத்யாபிதானசிந்தாமணி என்ற வைத்யசாஸ்த்ரபரிபாஷை களடங்கிய ஓர் க்ரந்தகர்த்தாவாகிய ஸுஹலன் என்பவர் தமது க்ரந்தத்தில் சந்த்ரசேகாருடையவெற்றியைக்கூறி அதனைக்கடவுள் வாழ்த்தாக அமைத்திருக்கின்றார். *

1098—1166-ல் 68-வருஷங்கள் பீடாதிபரான இவர்கள் கணக்கற்ற கவிகளால் போற்றப்பட்டு பார்த்திப சைத்ர அமாவாஸ்யைதினம் அருணாசலக்ஷேத்ரத்தில் அடங்கினார்கள்.

(47) சித்விலாஸ அத்வைதாநந்த போதேந்த்ர ஸரஸ்வதீ.

பிணாகினீதீரவாஸியான இவருக்கு ஸீதாபதி என்பது பூர்வாச்ரமத்தில் ஏற்பட்ட பெயர். ஸ்ரீ ஹர்ஷகவி காஞ்சீபுரத்தைப்பற்றியும் அங்கு பூஜிக்கப்படுகிற யோகலிங்கத்தைப்பற்றியும் தாம் எழுதியுள்ள நைஷதம் என்ற காவ்யத்தில் பெரிதும் பாராட்டியிருக்கின்றார். §

மேலும் ஸ்தைர்யவிசாரப்ரகரணம், சிவசக்திசித்தி என்ற நூல்களில் நமது சித்விலாஸரைப் போற்றுகின்றார். † அன்யமதஸ்

---

* द्वात्रिंशत्कविरत्नमध्यतरळश्रीमंखराजानक-
प्रेंखोल्लज्जयसिह्मकाञ्चनगुणोद्दामप्रभाभास्वरम् ।
काश्मीरेन्द्रसभावरोरुहृदयं गोशीर्षचर्चारसैः
चक्रे यश्शिशिरं चकास्तु स मम श्रीचन्द्रचूडो हृदि ॥

वைத்யாபிதான சிந்தாமணி.

§ जलदेवतास्फटिकभूर्जागर्ति योगेश्वरः ।

நைஷதம் 12—38

† तन्त्रैर्दुर्यन्त्रमन्त्रैरपि बुधजनतागाधबोधापमृत्योः
कृत्योद्यत्क्रूरधारापरुषतरमतेर्गुप्तनाम्नश्शरारोः ।
चेष्टाविष्टम्भकानां प्रतिविबुधसभोत्खातजैत्रध्वजाना
माजानज्ञानभाजां विभवमभिदधे चिद्विलासाख्यभूम्नाम् ॥

ஸ்தைர்யவிசாரப்ரகரணம்.

प्रस्फूर्जच्चिदचिद्विलासवदुमासोमार्धचूडालयोः
ऐक्योक्ताविह भारतीं मदयतां मेचिद्विलासोमनाक् ॥

சிவசக்திசித்தி.

தனான அபிநவகுப்தனை நமது ஸ்வாமிகள் வாதத்தில் வென்றதா கச்சொல்லப்படுகின்றது. சித்விலாஸர்காலத்தவர்களான ஸ்ரீஹர்ஷ அபிநவகுப்தர்களை ஆதிசங்கரர்காலத்தவர்களாக வித்யாரண்ய சங்கரவிஜயம் சாற்றுகின்றது. இவ்விருவருக்கும் நூறுவருஷங் களுக்குட்பட்ட காலத்தவராகிய வித்யாரண்யர் இவ்வாறு கூறி யிருக்கமாட்டார் எனவும் தோன்றுகின்றது. பிற்காலத்தவர்களில் யாரேனும் எழுதியிருக்கலாம்போலும்

‡ சாந்திவிவரணம்,ப்ரும்மவித்யாபரணம், குருப்ரதீபிகை,சங் கரவிஜயம் என்ற க்ரந்தங்களை சித்விலாஸஸ்வாமிகள் லோகோப காரமாய் அருளியிருக்கின்றார்கள்.

1166முதல் 34வருஷங்கள் காமகோடி பீடாதிபதிகளான இவர்கள் 1200-க்குச்சரியான சித்தார்த்திஜ்யேஷ்டசுக்லதசமியில் சிதம்பரத்தில் சித்திபெற்றார்கள்.

## (48) இரண்டாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சாயாவனம் என்றக்ராமம் இவர் களுக்குச்சொந்தமான ஊர். குருமூர்த்தியென இவர்களுக்கு நாம கரணம் செய்திருந்தார்கள். இது ஓர் காரணப்பெயராயிற்று. 1200—1247-ல் பீடாதிபதியான இப்பெரியார் ப்ரபவகார்த்திக க்ருஷ்ணாஷ்டமியில் கடிலநதீதீரத்திலுள்ள ஒரு புண்யபூமியில் ஸமாதியடைந்தார்கள்.

## (49) முதலாவது சந்த்ரசூடேந்த்ர ஸரஸ்வதீ.

தெலுங்குதேசத்தையாண்டுவந்தவிஜயகந்தகோபாலதேவன் என்ற சோழனொருவன் 1291 ஜூலைமீ 9உயுள்ள தாமிரப்பட்ட யம் ஒன்றை இவர்களுக்குக் கொடுத்திருக்கின்றான். கங்கேசர் என்றழைக்கப்பட்ட இந்த ஸ்வாமிகள் பராசக்தியை உபாஸித்து கோடி ஹோமங்கள் செய்தார்களெனச் செப்புகின்றார்கள்.

---

‡ जप्येशस्य कृपाभरात्समुदभूद्यः पार्वतीगर्भतः
प्रेमेशस्य सुतः श्रुतिप्रवचने धीरस्स सीतापतिः ।
आदेशाद्गुरुचन्द्रचूडयमिनस्सर्वज्ञपीठोविभोः
आधत्ते किल शान्तिवागनवकव्याख्यां सुखख्यातये ॥

சாந்திவிவரணம்.



ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளான 65 பீடாதிபதி
ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள்.

1247முதல் 59வருஷங்கள் காமகோடி மடாதிபத்யம் வகித்து 1297 துன்முகிஜ்யேஷ்ட சுக்லாஷ்டமியில் தமது குரு ஸித்திபெற்ற கடிலதீரத்திலேயே அடங்கினூர்கள்.

(50) வித்யாதீர்த்தேந்த்ர ஸரஸ்வதீ.

விஜயநகரவேந்தனுன புக்கமகீபதியின் மந்திரியாகிய மாதவர் தமது ஸர்வதர்சனஸங்க்ரஹம் என்ற க்ரந்தத்தில் "சாரங்கபாணி குமாரனுன ஸர்வக்ஞவிஷ்ணு எனப் பெயர்கொண்ட எமது குருவைத் தினந்தோறும் பணிகின்றேன்" எனப் பகர்கின்ருர். ‡ ஸர்வக்ஞவிஷ்ணு என்பது நமது வித்யாதீர்த்தரின் பூர்வாச்ரம நாமம். சாரங்கபாணி என்பவர் இவரது தந்தை, இதனுல் ஸர்வ தர்சனஸங்க்ரஹம் எழுதிய மாதவர் நமது ஸ்வாமிகளின் பூர்வாச் ரமகாலத்திலேயே அந்நூலியற்றினுர் எனச் சொல்லவேண்டும்.

§ வேதங்களுக்குப்பாஷ்யம் எழுதிய ஸாயனர் ருக்வேதபாஷ் யத்தின் ஆதியிலும் அந்தத்திலும் வித்யாதீர்த்தர் எனவே குறித் துத் துதிக்கின்ருர்.

ஸ்ரீ ச்ருங்ககிரி பரம்பரை 9-வது வித்யாசங்கருக்குப் பிறகு 800-வருஷங்கள் காலியாயிருந்த ச்ருங்ககிரி பீடத்தில் அமர்த்தப் பட்ட ப்ரும்மானந்தர் எனக் கூறப்படுகிற பாரதீக்ருஷ்ணர் என்ப வர் காமகோடி பீடாதிபரான வித்யதீர்த்தரிடம் சிஷ்யராயிருந்த வர் எனத்தெரிகின்றது.

---

‡ पारङ्गतं सकलदर्शनसागराणां आत्मोचितार्थचरितार्थितसर्वलोकम् ।
श्रीशार्ङ्गपाणितनयं निखिलागमज्ञं सर्वज्ञविष्णुगुरुमन्वहमाश्रयेऽहम् ॥

ஸர்வதர்சனஸங்க்ரஹம்.

§ यस्य निश्वसितं वेदाः वेदेभ्यो योऽखिलं जगत् ।
निर्ममे तमहं वन्दे विद्यातीर्थमहेश्वरम् ॥

ரிக்வேத பாஷ்யம் (ஆதி)

वेदार्थस्य प्रकाशेन तमो हार्दं निवारयन् ।
पुमर्थांश्चतुरो देयात् विद्यातीर्थमहेश्वरः ॥

ரிக்வேத பாஷ்யம் (அந்தம்)

प्रणम्य परमात्मानं श्रीविद्यातीर्थरूपिणम् ।
वैयासिकन्यायमाला श्लोकैस्संगृह्यते स्फुटम् ॥

ஆகவே நாம் முன்னர் சொன்னபடி ச்ருங்ககிரி மடஸ்தாபகரான மாதவர் எனப் பூர்வாச்ரமத்தில் அழைக்கப்பட்ட வித்யாரண்யருக்கு பில்வாரண்யத்தைத் தமது முந்திய வாசஸ்தானமாகக் கொண்டிருந்த இந்த வித்யாதீர்த்த ஸ்வாமிகள் குரு என்பது விளங்கும்.

ப்ராசீனமான புத்தகங்களில் ஸாயனமாதவர் எனவே அடிக்கடி கூறப்படுதலால் இவ்விரு பெயர்களும் ஒருவரையே குறிக்கும் எனப் பண்டிதர்களும் மயங்குவதுண்டு.

இவ்விருவரும் ஸகோதரர் என்பது யஜுர்வேத பாஷ்யத்தின் முகவுரையில் நன்கு விளங்கப்பட்டுள்ளது. *

50. ஸ்வாமிகளான வித்யாதீர்த்தர் பூர்வாச்ரமத்தில் ஸர்வக்ஞவிஷ்ணு என்றழைக்கப்பட்டனர் என்பதையும், ஸாயனமாதவர்கள் இப்பெரியாரின் சிஷ்யர்களென்பதையும், மேலும் ஸ்ரீவித்யாரண்யர், 51 ஸ்வாமிகளான சங்கரானந்தரையும் குருவாகக்கருதி தங்களுடைய நூல்களில் போற்றியுள்ளார் என்பதையும் விளக்கும் மேற்கோள்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. ¶

---

* आदिशन्माधवाचार्यं वेदार्थस्य प्रकाशने ।
सह्याहनृपतिं राजन् सायणार्यो ममानुजः ।।
सर्वं वेत्त्येष वेदानां व्यख्यातृत्वे नियुज्यताम् ।
इत्युक्तो माधवार्येण वीरबुक्कमहीपतिः ।।
अन्वशात्सायणाचार्यं वेदार्थस्य प्रकाशने । யஜுர்வேதபாஷ்யம்.

श्रीमती जननी यस्य सुकीर्तिर्मायणः पिता ।
सायणो(भोग)नाथश्च मनोबुद्धीसहोदरौ ।।
बौधायनं यस्य सूत्रं शाखा यस्य च याजुषी ।
भारद्वाजं कुलं यस्य सर्वज्ञस्स हि माधवः ।। பராசரமாதவீயம்.

बिल्वारण्यजशार्ङ्गपाणितनयः सर्वज्ञविष्णुः श्रयन्
सन्यासं गुरुचन्द्रशेखरमुनेरास्थाय पीठीं गुरोः ।
योगेशस्य च चक्रराजवसतेर्देव्याश्च सक्तोर्चने
श्रीमन्माधवबुक्कभारातियतिप्रेष्ठैर्महिष्ठैर्वृतः ।।

புண்யச்லோக மஞ்சரி.

ஸ்ரீவித்யாதீர்த்தருடைய சிஷ்யர்களில் எண்மர் ஸ்ரீவித்யாரண்யர் ஸ்தாபித்த மடங்களில் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர் என 50 ஸ்வாமிகளான வித்யாதீர்த்தருடைய புராணத்தைக் கூறுகிற புண்யச்லோக மஞ்சரியில் காண்கின்றோம்.†

இவர்கள் காமகோடி பீடாதிபர்களின் சிஷ்யர் என்பதை நாம் அடிக்கடி கூறவேண்டியதில்லை.

துருக்கர்களும் கிறிஸ்தவர்களும் மேலும் அத்வைதவைரிகளான பலரும் நமது நாட்டின் மேற்கு ப்ரதேசங்களில் செய்து வந்த இடையூறுகளைத் தவிர்த்து சங்கரமதத்தைப் போஷிப்பதற்காக மந்திரியாயிருந்த பதவியையும் வெறுத்துத் துறவியாகி எட்டு மடங்களை ஸ்தாபித்தவர்கள் ஸ்ரீவித்யாரண்யஸ்வாமிகள் எனவும், அவைகளில் விருபாக்ஷி, புஷ்பகிரி, ச்ருங்ககிரி, கரவீரம், சிவகங்கை முதலியமடங்கள் நிலைத்திருக்கின்றன. எனவும், இவைகளின் ஸ்ரீமுகங்களும் அவ்வாறே பொருள் படுகின்றன. எனவும் மடஸ்

---

† कांच्यामेव ससप्तर्तिं त्रिसहितां वर्षान्विभूष्यासनम्
शिष्यानष्टदिशागजायितयतीनादिश्य पीठावने ।
यावत्पञ्चदशाब्दपूर्तिहिमवच्छृङ्गाश्रयश्शङ्करा-
नन्दैकानुचरश्चचार परमं धीरस्तपो दुश्चरम् ॥

புண்யச்லோகமஞ்சரி

* 80வது பக்கம் குறிப்பின் தொடர்ச்சி,

प्रणम्य परमात्मानं श्रीविद्यातीर्थरूपिणम् ।
जैमिनीयन्यायमाला श्लोकैस्संगृह्यते स्फुटम् ॥

(வித்யாரண்யர்) ஜைமினீயந்யாயமாலை.

प्रणम्य परमात्मानं विद्यातीर्थमहेश्वरम् ।

(வித்யாரண்யர்)சங்கரதிக் விஜயம்

श्रीशङ्करानन्दपदं हृदब्जे विभ्राजते तद्यतयो विशन्ति ।

விவரணப்ரமேயஸங்க்ரஹம்:

मम श्रीशङ्करानन्दगुरुपादाम्बुजन्मने ।
सविलासमहामोहग्राहग्राहैककर्मणे ॥

பஞ்சதசிப்ரகரணம்,

தாபனம்என்ற அத்யாயத்தில் குறித்துள்ளோம், விரூபாக்ஷி மடத்தில் ஸ்ரீ வித்யாரண்யர் தங்கியிருந்ததாகத் தெரிகின்றது.

காமகோடி பீடாதிபரான ஸ்ரீவித்யாதீர்த்த ஸ்வாமிகள் 1297 முதல்88-வருஷங்கள் திக்விஜயம்செய்து இமயமலைகளில்நெடுநாள் தவம் புரிந்து 1385-க்குச் சரியான ரக்தாக்ஷி மாகக்ருண ப்ரதமையில் ஹிமாசலத்திலேயே சித்தி பெற்றூர்கள்.

(51) சங்கராநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

பூர்வாச்ரமத்தில் மத்யார்ஜுனம் என்ற திருவிடைமருதூர் வாஸியான இவர்களுக்கு மகேசர் என்பது பூர்வநாமம். 1385—1417-ல் பீடாதிபத்யம் பெற்றூர்கள்.

ஈச, கேன, ப்ரச்ன, ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்களுக்கு தீபிகை எழுதியிருக்கின்றூர்கள். கடைசியில் குறிப்பிட்ட உபநிஷத்தின் தீபிகைத்துவக்கத்தில் தமதுபரமகுருவான சந்த்ரசூடரையும் குருவான வித்யாதீர்த்தரையும் துதிக்கின்றூர்.* இவர்கள் வித்யாரண்யருக்கு ஸந்யாஸம் கொடுத்து உபதேசித்ததுமன்றி அவர் ஸ்தாபித்த 8மடங்கள்விஷயத்தில் உதவிபுரிந்தனர்எனவும் சொல்லப்படுகின்றது.

32-ஆண்டுகள் பீடத்தில்வீற்றிருந்த சங்கராநந்தர் துன்முகி வைசாகசுக்லப்ரதமையில் காஞ்சீபுரத்தில் ஸமாதிபெற்றூர்கள். ஆத்மபுராணம் எனக்கூறப்படுகிற கீதாபாஷ்யம் ஒன்று இவர் அருளியிருக்கின்றூர்.

(52) பூர்ணனந்த ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதீ.

1417-முதல் 81வருஷங்கள் மடாதிபத்யம் பெற்ற இவர்களுக்கு நாகாரண்யம்என்னுமூர் பூர்வாச்ரமத்தில்சொந்தமானது. இவர்கள் பாதநாடெங்கிலும் திக்விஜயயாத்திரை செய்தார்கள். இந்தியாவின் வடகோடியில் இமயமலையின் தென்சாரலில் இருக்கின்ற நேபாளநாட்டுப்பூபாலன் பூர்ணநந்தரைப் பரிவுடன் வா

* काञ्चीपीठजुषः कठोरधिषणानिर्धूतदुर्धूर्वह-
द्वैतिव्रातदुराग्रहग्रहभयान्मायाविदूराक्रियान् ।
आचार्यान्मम चन्द्रमौलिचरणध्यानैकतानाशयान्
विद्यातीर्थमहेश्वरान् हृदि सदा विद्योतमानान्भजे ॥

ப்ருஹதாரண்யகதீபிகை

வேற்றுப் பாதபூஜைகள் செய்து வணங்கினான் எனச் சொல்லப் படுகின்றது. நமது ஸதாசிவஸ்வாமிகள் 1498-க்குச் சரியான பிங்களஜ்யேஷ்டசுக்லதசமியில் கச்சிமாநகரில் சித்திபெற்றார்கள்.

(53) வ்யாஸாசல மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

இந்த ஸ்வாமிகளின் சொந்தமான ஊர் காஞ்சீபுரம். குப் பண்ணு என்பது இவரது பெயர். வ்யாஸாசலம் என்ற மலையி லுள்ள குகையில் தவம் செய்திருந்து அங்கேயே அக்ஷயஆஷாட க்ருஷ்ணப்ரதமையில் அடங்கினார்கள்.

விஜயநகரராஜாவான நரஸிம்மதேவராயர் என்பவர் சகம் 1428க்குச்சரியான 1507ல் தாமிரப்பட்டயம் ஒன்று இவர்காலத் தில் கொடுத்திருக்கின்றார். மகாதேவர் அருளியுள்ள சங்கரவிஜ யத்தை வியாஸாசலீயம் எனச் சொல்கின்றார்கள். 1498-1507-ல் இவர்கள் பீடாதிபத்யம் பெற்றார்கள்.

(54) இரண்டாவது சந்த்ரசூடேந்த்ர ஸரஸ்வதீ,

மணிமுக்தாநதிக்கரையிலுள்ள அச்மசாலை என்றக்ராமத்தா ரான இவர்களை அருணகிரி என்றழைத்தார்கள். 1507-முதல் 1524-வரையில் உள்ள 17-வருஷங்கள் இவர்களது பீடாதிபத்யம் விஜயநகரக்ருஷ்ணதேவராயர் 1522-ல் மடத்திற்கு ஒரு தாமிரப் பட்டயம் அளித்திருக்கின்றார். ஸ்வபாநு மீன சுக்ல ஏகாதசியில் காஞ்சீக்ஷேத்ரத்தில் சித்திபெற்றார்கள். இவர்களும் இவர்களுக்கு முந்திய எட்டுபீடாதிபர்களும் த்ராவிடர்கள் எனச் சொல்லியுள் ளோம். நேபாள வம்சாவளியில் ஒரு வேந்தன் ஸோம சூடர் என்று காமகோடி பீடாதிபர்களைப் போற்றியதாகக் கூறப்படுகின் றது. ஆதலின் சந்த்ர சூடஸ்வாமிகளும் நேபாளம் சென்றதாகக் கொள்வோம்.

(55)ஸர்வக்ஞ ஸதாசிவ போதேந்த்ர ஸரஸ்வதீ.

போதேச்வரர் என்பது இவரது முந்திய பெயர், வடபெண் ணையாற்றங்கரையில் வஸித்து வந்தார்கள். ராமநாதபுரம் ராஜா வான ப்ரவீர ஸேதுபதிக்கு, ''ஸ்வாத்ம நிரூபணம்'' அல்லது போதார்யா என்ற க்ரந்தத்தை எழுதி உபதேசித்தார்கள் எனச் சொல்லப்பட்டிருப்பினும் மேற்கூறிய க்ரந்தத்தை ஸதாசிவப்ரும் மேந்த்ரர் அருளியதாக ஆத்மபோதர் கூறியுள்ளார் என முன்னம் சொன்னோம். எனினும் ப்ரவீர மகாராஜா நமது ஸ்வாமிகளை அண்

டியிருந்தார் என்பது விளங்குகின்றது. காமகோடி பீடாதிபதிகளின் சரித்ர ஆராய்ச்சிக்கு அநுகூலமான புண்யச்லோகமஞ்சரி• என்ற க்ரந்தகர்த்தாவான இவரைப் பெரிதும் போற்றுகின்ரும் மேற்குறித்த க்ருஷ்ணதேவராயர் 1528-ல் அளித்த மற்ரொருபட்டயம் இப்பெரியாரின் காலத்தது. ஆந்திர மரபினைச் சேர்ந்த இவர்கள் 1524-1539-ல் பீடாதிபதியாய் வீற்றிருந்து, திக்ஜவியம் செய்துவரும்பொழுது, ஸ்ரீராமேச்வரத்தில் விளம்பி சைத்ர சுக்லாஷ்டமிதிதியில் ஸித்திபெற்ருர்கள்.

## (56) இரண்டாவது பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ.

பீடாதிபதியாவதற்கு முன் சிவராமகிருஷ்ணன் என நாமகரணம் செய்யப்பட்டிருந்த இவர்களுடைய வாசஸ்தானம் பம்பையாற்றங்கரையில் இருக்கிறது. மேற்குறித்தநதி ஆந்த்ர நாட்டில் ஓடுவதால் இவரும் ஒரு ஆந்த்ர ப்ராமணர். கரூருக்கு அடுத்த நெரூரில் யோகீச்வரராய் க்யாதிபெற்று அமாநுஷமான அநேக அற்புதச்செயல்களைச் செய்து ஸமாதியில் இருக்கிற ஸதாசிவப்ரும்மேந்த்ர ஸ்வாமிகளுக்கு பரமசிவேந்த்ரர் குருஎன்றும், ஸதாசிவர் கருணையால் கூறியுள்ள குருரத்நமாலை ஒன்றே இந்நூலுக்கு முக்கியமான ஆதாரம் என்றும் மேலும், ஆத்மவித்யாவிலாஸம் * என்றக்ரந்தத்தால் நமதுபரமசிவஸ்வாமிகளை ஸதாசிவப்ரும்மம் போற்றுகிருர் என்றும் பலவிடங்களில் பகர்ந்தோம். நெரூரில் உள்ள ஸமாதி மைசூர், புதுக்கோட்டைராஜாக்களால் விடப்பட்ட மான்யத்தாலும், ஆப்தசிஷ்யர்கள்செய்கிற திரவியஸகாயத்தாலும் பூஜிக்கப்பட்டுவருவதோடு ப்ரதிவருஷம் சங்கரஜயந்தி வருங்காலத்தில் ஆயிரக்கணக்கான செலவுடன் ஆராதனையும் செய்யப்பட்டு வருகின்றது.

இப்பெரியாருடைய குருமூர்த்திகளாகிய பரமசிவேந்த்ருடைய ஸமாதியும் திருவெண்காடு என்ற ச்வேதாரண்யத்தில் பூஜிக்கப்பட்டுவருகின்றது. தஞ்சை ஸஹாஜி மகாராஜா அவர்கள் அப் பூஜைக்காக மான்யம் விட்டிருக்கிருர்.

---

*निरवधिसंसृतिनीरधिनिपतित जनतारणस्फुरन्नौकाम् ।
परमतभेदनघुटिकां परमशिवेन्द्रार्यपादुकां नौमि ॥

ஆத்மவித்யாவிலாஸம்.




56. ஸ்ரீபரமசிவேந்த்ர ஸரஸ்வதீ. திருவெண்காடு,

இப்பால் ப்ரஸ்தாபிக்கப் படுகிற பரமசிவஸ்வாமிகள் சிவகீதைக்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். ஸதாசிவப்ருமமம் அருளிய நூல்களை முன்னமேயே சொல்லியுள்ளோம்.

1539-க்கும் 1586-க்கும் இடையிலுள்ள 47-வருஷங்கள் காமகோடி பீடாதிபர்களாய் வீற்றிருந்து பார்த்திபச்ராவண சுக்ல தசமியில் பரமசிவேந்த்ரர் சித்திபெற்றார்கள்.

### (57) விச்வாதிக ஆத்மபோதேந்த்ர ஸரஸ்வதீ.

தமிழ் நாடாகிய வ்ருத்தாசலத்தில் வசித்திருந்த இவர்கள் விச்வேச்வரர் எனப் பூர்வாச்ரமத்தில் பெயர் பெற்றிருந்தார்கள். ஆத்மபோதர் பீடாதிபதிகளாய் வீற்றிருந்த 1586-முதல் 1638 வரையில் உள்ள 58-வருஷங்களிலும் ஆஸேது ஹிமாசலம் திக்விஜயயாத்திரை செய்தும், யஜுர்வேதத்தில் நடுநாயகமாய் நின்று விப்ரர்களால் எக்காலும் அத்யயனம் செய்யப்படுகிற ஸ்ரீருத்ரத்திற்கு பாஷ்யம் எழுதியும் விளங்கினார்கள். ஈச்வர வருஷம் துலா மாஸம் க்ருஷ்ணபக்ஷம் அஷ்டமீதிதியில் ஆத்மபோத ஸ்வாமிகள் கடிலநதீதீரத்திலுள்ள ஒரு புண்ய பூமியில் அடங்கினார்கள்.

### (58)பகவந்நாம போதேந்தர ஸரஸ்வதீ.

கும்பகோணத்திற்கடுத்த திருவிசைநல்லூரில் ஸ்ரீதரவேங்கடேசர் என ஒரு மகான் இருந்தார். இவர்கள், ஆக்யாஷஷ்டி, தாராவளி, குளீராஷ்டகம் முதலிய பல துதிகள் செய்திருக்கின்றார்கள். "காமகோடி பீடாதிபரான மூகசங்கரர் அருளிய மூக பஞ்சசதியும், ஸ்ரீதரர் இயற்றிய துதிகளும் வடமொழி நூல்களில் முதன்மையாகக் கொள்ளவேண்டும்" என, பரமதகண்டன பாஞ்சஜன்யர் எனப்பட்டம்பெற்ற நடுக்காவேரி பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் சொல்வதுண்டு. ஸ்ரீதரவேங்கடேசர் அருளியுள்ள "ஆக்யாஷஷ்டி "எனும் நூல் "சிவ" என்ற திருப்பெயரை அன்னையாக விளித்துக் கூறுகின்றது- பண்டிதபாமரர்களைப் பரவசமாக்கக்கூடிய இந்நூலிலிருந்து கற்பனையொன்றைஇங்கு கூறுவோம்.†

† शिवः कामं क्रोधाकुलमतिरजैषीत्त्वदनुगैः
जितः कामः क्रोधोऽप्यथ मुनिकुमारं यमभयात् ।
शिवोऽरक्षीदेकं सयतनमिमे तद्वयहृतोऽ-
खिलस्येक्षामात्राज्जितमिह शिवाख्ये त्वदनुगैः॥ ஆக்யாஷஷ்டி.

''சிவா, என்னும் பெயராகிய அம்மே, உன்னை அண்டியவர்கள் சிவனிலும் பெரியார் எனச் சொல்லலாம், எப்படியெனில், காமனை வெல்லக்கருதிய சிவன் கோபத்தைமுன்னிட்டு அவனை எரித்தார். உனது அடியார்கள் காமத்தையும் கோபத்தையும் ஒருங்கே ஒழித்து விடுகின்றார்கள்'' இம்மாதிரியான கணக்கற்ற கற்பனைகளை ஸ்ரீதரர் அருளிய க்ரந்தங்களில் காணலாம்.

இவர்கள், இறந்து கிடந்த ஒரு குழந்தையைத் தாராவளியென்ற துதியால் உயிர்ப்பித்தும், §குளீராஷ்டகத்தால் மழைபெய்வித்தும்; கீர்த்திபெற்றார்கள். ‡ இவர்களது சரித்ரமனைத்தினையும் எழுதுவதென்றால் அதே ஒரு பெரிய புத்தகமாகுமாதலால் முக்கியமான ஒரு விஷயத்தை மாத்திரம் கீழே குறிக்கின்றேன்.

தகப்பனைக் கருதிச் செய்யும் ச்ராத்ததினத்தில் இப்பெரியார் ஒரு பஞ்சமனுக்கு அன்னமிட்டார்கள். அன்று அவர் வீட்டில் உண்பதற்கு எல்லோரும் மறுத்துவிட்டனர். ஸ்ரீதரர் தருப்பைகளில் பித்ருக்களை ஆவாகனம் செய்து சிராத்தத்தை நிவறவேற்றினர். மற்றுமோர் சிராத்ததினம் கிட்டியபொழுது தாம் செய்தது தீவினையாயின் அதற்குப் பரிகாரம் சொல்லுமாறு அவ்வூர் அந்தணர்களை வினவ அவர்கள் கங்கையில் மூழ்கிவரவேண்டுமென்றனர். உடனே எழுந்து வாயிலிலிருந்த ஒரு கிணற்றைக் கிட்டி 'கங்காபஞ்சகம்' என்ற ஐந்து ச்லோகங்களால் அவ்வம்மையையழைத்தார்கள். எல்லோரும் பார்த்திருக்கக் கிணறு பொங்கி வீதியிலோடிற்று. இதனை கங்காஷ்டகம் எனவும் கூறுவர். அங்கிருந்த அனைவரும் மூழ்கி ஸ்ரீதரரின் மகிமைகளைக் கொண்டாடினார்கள். இச்சம்பவம் கார்த்திகைமாதம் அமாவாஸ்யையில் நடந்

---

§ गजमुखशरजन्मप्रेमगाढोपगूढः
नगदुहितुरमन्दानन्दमूलैरपाङ्गैः ।
अघमखिलमपास्यन्नस्य डिम्भस्य शम्भुः
सकलभयनिवृत्तिं साम्बमूर्तिर्विधत्ताम् ॥

தாராவளீ.

‡ कर्कटकचन्द्रयोगः कर्कटकेशानमूर्ध्नि ते दृष्टः ।
कारय वृष्टिममोघां वारय वर्षोपरोधदुर्योगम् ॥

குளீராஷ்டகம்.

தேறியது. இன்றுகூட அத்தினத்தில் ஆயிரக்கணக்கான அடியார்கள் அக்கிணற்றில் மூழ்கிவருகின்றார்கள். அப்பொழுது பெரியதோர் விழாவும் அங்கு நடைபெறுகின்றது.

300-வருஷங்களுக்குமுன் நிறைவேறியஇவ்விஷயமும்அமாவாஸ்யையைப் பூர்ணிமையாகக் காட்டுவதற்கு அபிராமியந்தாதி பாடிய அபிராமபட்டர் சரிதமும் திருவையாற்றில் ஸமாதிபெற்று பூஜிக்கப்படுகிற த்யாகராஜஸ்வாமிகளின் விருத்தாந்தமும் நாஸ்திகரை ஆஸ்திகராக்கித் தெய்வபக்தியை ஊட்டக்கூடியனவாய் முதிர்ந்த இக்கலியில் நிகழ்ந்துள்ளன,

கடவுளின் கடாக்ஷத்தைப் பூர்ணமாகப்பெற்று கங்கையைக் கிணற்றில் பொங்கவைத்த ஸ்ரீதரர் காமகோடி பீடாதிபரான போதேந்த்ரரைப்பணிந்து துதிக்கின்றார்கள். அத்துதி ஹரிபஜனை நடக்குமிடமெல்லாம் குருஸ்துதியாகப் பாடப்படுகின்றது. பகவானுடைய நாமங்களை நினைப்பதனாலேயே மோக்ஷம் பெறலாமென ஸித்தாந்தம் செய்த போதேந்த்ரர் முதிர்ந்த இக்கலியுகத்திற்குத் தக்க பக்திமார்க்கத்தைப் போதித்த ஜகத்குருவன்றோ?

¶க்ருதயுகத்தில் உக்ரமான தவத்தினாலும் த்ரேதாயுகத்தில் முத்தீவளர்த்துப்பலர் ஒன்றுகூடி ஒரே மனத்தினராய் இயற்றும் யாகங்களாலும் த்வாபரயுகத்தில் மனத்தைப்புறத்தே ஓடவிடாமல் நிலைநிறுத்திக் கடவுளைப் பூஜிப்பதாலும் அடையக்கூடியது எதுவோ அதனை நாமஸங்கீர்த்தனத்தால் ஸுலபமாய் இக்கலியில் கொள்ளலாமெனக் கூறுகிற விஷ்ணுபுராணத்தின் உபதேசத்தை நமது போதர் ஸித்தாந்தம் செய்தார்கள்.

காஞ்சிக்கு அடுத்த மண்டனமிச்ரர் அக்ரஹாரத்தை இவர்கள் வாசஸ்தானமாகக்கொண்டு புருஷோத்தமர் என்றழைக்கப்பட்டார். தக்ஷிணதேசங்களில் திக்விஜயஸஞ்சாரியாய் ராமேச்வரம் சென்று ஸ்ரீஅகிலாண்டேச்வரிக்குத் தாடங்கஜீர்ணோத்தாரணம் செய்து காஞ்சிக்குத்திரும்பும்பொழுது கும்பகோணத்திற்கு ஸமீபமாயுள்ள கோவிந்தபுரத்தில் ஸித்திபெற்றார்கள். நூற்றுக்

---

¶ध्यायन्कृते यजन्यज्ञै स्त्रेतायां द्वापरेऽर्चयन् ।
यदाप्नोति तदाप्नोति कलौ सङ्कीर्त्य केशवम् ॥

விஷ்ணுபுராணம்.

கணக்கான பாகவதர்கள் இங்கு கூடி ஆண்டுதோறும் ஆராதனை செய்கிறார்கள்.

1638முதல் 54வருஷங்கள் பகவந்நாமபோதேந்த்ரர் காமகோடி மடத்தில் கீர்த்திபெற்று 1692 ப்ரஜோத்பத்தி பாத்ரபத பூர்ணிமையில் கோவிந்தர் எனப் பெயர் கொண்டிருந்த அத்வயாத்மப்ரகாசரை பீடத்தில் அமர்த்தினார்கள்.

(59) அத்வயாத்ம ப்ரகாசேந்த்ர ஸரஸ்வதீ.

இவர்கள் தஞ்சை ஸஹாஜிராஜாவால் வணங்கப்பெற்று தமது குருவின் ஸமாதியை ஆராதித்துக்கொண்டு 1692முதல் 12 வருஷங்கள் கோவிந்தபுரத்திலேயே வசித்து, 1704க்குச் சரியான ஸ்வபாநு சைத்ரக்ருஷ்ணத்விதீயை திதியில் அப்புண்யபூமியிலேயே ஸமாதிபெற்றார்கள்.

(60) மூன்றாவது மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

ஸந்யாஸம் பெறுவதற்குமுன் நாராயணன் என நாமம் பெற்றவர்களான நமது மகாதேவர் 1704—1746-ல் பரமயோகிகளாய் விளங்கி க்ரோதன ஜ்யேஷ்ட சுக்லநவமியில் சென்னையில் அடங்கினார்கள். இவரது ஸமாதி திருவொற்றியூரில் எனச் சிலர் சொல்கின்றனர்.

(61) நான்காவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

1746-முதல் 1783-வரையில் காமகோடி மடாதிபர்களான இவர்கள் காலத்தில்தான் காஞ்சீமடம் கும்பகோணமடமாயிற்று. இதனை மடஸ்தாபனம் என்ற அத்யாயத்தில் எழுதியிருக்கின்றேன். காஞ்சீபுரத்தில் பூஜிக்கப்பட்டிருந்த 'ஸ்ரீகாமாக்ஷியம்மன் தஞ்சையில் ஆலயங்கொண்டிருத்தல் யாதுகாரணம்பற்றி? மகமதியர்களால் நேர்ந்த பயங்கரமான கர்நாடகயுத்தமன்றோ! மடம் மாறியதற்கும் காரணம் இதுவேயாகும்.

சந்த்ரசேகரஸ்வாமிகள் அநந்தசயனம், பாளயங்கோட்டை, ராமநாதபுரம், புதுக்கோட்டை முதலியவிடங்களில் விஜயம் செய்து ஜம்புகேச்வரம் அகிலாண்டவம்மைக்குத் தாடங்கம் சாத்தியபிறகு சுபக்ருத் புஷ்ய க்ருஷ்ண த்விதீயையில் புதிதாய் அமைக்கப்பட்ட கும்பகோணம் மடத்தில் சித்திபெற்றார்கள்.



58. ஸ்ரீபகவந்நாம போதேந்த்ர ஸரஸ்வதீ

கோவிந்தபுரம்

### (62) நான்காவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

கும்பகோணத்தைத் தம் இருப்பிடமாகக்கொண்டு அண்ணுச்ரௌதி என்று அழைக்கப்பட்ட இவர்கள் ஒரு கர்நாடக ப்ராம்மணர்.

தற்போது கூறப்படுகிற ஸ்வாமிகள் ஒருயோகி. இவர்கள் சிலசமயங்களில் ஒருவருமறியாமல் கும்பகோணத்திலுள்ள காவேரியின் மறுகரையில் தனியே உட்கார்ந்து யோகம் செய்வதைச் செவியுற்ற தஞ்சைவேந்தன் அங்கு ஒரு மடம் கட்டுவித்தான்.

யோகிவரரான இப்பெரியாரின் காலமாகிய சாலிசகம் 1719 க்குச் சரியான 1797 பிங்கள வருஷத்தில் ச்ருங்ககிரி பீடாதிபர்களான அபிநவோத்தண்ட வித்யாரண்ய பாரதீஸ்வாமிகள் ராமேச்வரம் வரையில் திக்விஜயம் செய்து திரும்புகையில் ஜம்புகேச்வரம் முதலியப்ராந்தங்களில் பாதபூஜை முதலியன ஏற்றுக்கொண்ட குற்றத்தை ஒப்புக்கொண்டதுமல்லாமல் இனி, அவ்வாறு செய்வதில்லையென மேற்குறித்த வருஷம் ஆச்வின பகுள தசமியில் ஓர் உடன்படிக்கையும் எழுதிக்கொடுத்திருக்கின்றார்கள்.

1783 முதல் 1814 வரையில் காமகோடி பீடாதிகாரம் வகித்த இப்பெரியவர்கள், ஸ்ரீ முகவருஷம் ஆஷாட சுக்லத்வாதசியில் கும்பகோணத்தில் சித்திபெற்றார்கள்.

### (63) ஐந்தாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

இவர்கள், வேங்கடசுப்ரம்மண்ய தீக்ஷிதர் என்றழைக்கப்பட்டு கும்பகோண வாஸியாயிருந்தவர்கள். இவருக்கு முந்திய ஸ்வாமிகள் தொடங்கியுள்ள பீடாதிபர் அனைவரும் தங்களது பரம குருவின் பெயரையே பட்டமாகப் பெற்றுளார்கள். நமது சோழ மண்டலத்தை நாயகர்கள் ஆண்டுவந்த அக்காலத்தில் கோவிந்த தீக்ஷிதர் என்ற மேதாவியான ஒருவர் அமாத்யராய் இருந்தார். இந்த ஆசார்யர்கள் அவரது மாபிற்றோன்றியவர்கள்.

சந்த்ரசேகரர் மந்த்ர சாஸ்த்ர நிபுணர். 1839-ல் காஞ்சி காமாக்ஷியந்த்ரத்தையும், 1846ல் ஜம்புகேச்வரம் தாடங்கத்தையும் சீருறச்செய்தார்கள். இச்சமயம்ஜம்புகேச்வரம்தாடங்கப்ரதிஷ்டை

ஸம்பந்தமாக சிருங்ககிரி ஸ்ரீஸ்வாமிகளுக்கும் காமகோடி பீடாதிபர்களுக்கும் திரிசிரபுரம் அதாலத்கோர்ட்டார்முன் ஒரு வழக்கு நடைபெற்றது. சிருங்ககிரி மடத்தார் கொணர்ந்த ஆதாரங்கள் அனைத்தும் பயனற்றன. காமகோடி பீடாதிபர் ஒருவரே ஆதிசங்கார் அமைத்த தாடங்கத்தைச் செப்பனிட உரியார் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீசக்ரப்ரதிஷ்டாபகர் என்ற விருது காமகோடி பீடத்தாருக்கன்றோ உரியது! தாடங்கத்தில் உள்ளது ஸ்ரீசக்ரம்.

1814—1851-ல் 37 ஆண்டுகள் பீடாதிபதிகளான சந்த்ரசேகரர் ஸாதாரணவருஷம் கார்த்திக க்ருஷ்ணத்ரிதீயையன்று கும்பகோணத்தில் ஸித்திபெற்றார்கள்.

## (64) ஸுதர்சன மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

திருவிடைமருதூரில் தங்கியிருந்த இவருக்கு அங்கு திருக்கோலங்கொண்டு எழுந்தருள்கிற மகாலிங்கஸ்வாமியின் பெயரையே நம்மவர்களில் பலரையொப்ப நாமகரணம் செய்திருந்தார்கள். 1851முதல் 1891வரையில் உள்ள 40வருஷங்கள் இவர்களது பீடாதிபத்யகாலம். ஜகந்நாதம்முதல் ராமேச்வரம்வரையில் திக்விஜயயாத்திரை செய்து அங்கங்கு சிஷ்யகோடிகளுக்கு அனுக்ரஹித்து விரோதிவருஷம் பால்குன அமாவாஸ்யையில் மதுரை ஜில்லாவில உள்ள விடையாற்றுங்குடி என்ற ச்ரமாபநோதன க்ஷேத்திரத்தில் ஸித்திபெற்றார்கள். இதனை இடையாத்தங்குடி எனக் கூறுகிறார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஒரு ஆலயம் கட்டுவித்து தினந்தோறும் இப்பெரியாரின் ஸமாதிக்குப் பூஜை முதலியன நடத்திவருகிறார்கள்.

ராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதியவர்களும், புதுக்கோட்டை ராமசந்த்ர மகாராஜா அவர்களும் மேலும் விஜயநகரம் கேரளம் முதலிய ஸ்வதேச ராஜ்யங்களைப் பரிபாலனம் செய்கிற ராஜாக்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபர்களைப் போற்றியதுமல்லாமல் இப்பரம்பரையே ஆதிசங்கரர் முதல் பின்னமற்று விளங்குவது எனத்தீர்மானம் செய்தார்களென்று கூறப்படுகின்றது.

## (65) ஆறுவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ

பாலாற்றங்கரையிலுள்ள உதயம்பாக்கம் என்பது இவர்களது ஊர். ஸ்வாமிநாதன் என்பது பூர்வநாமம். 1891—1908ல் காஞ்சிபீடாதிபதிகளாய் விளங்கிய இவர்கள் பிலவங்க மாக க்ருஷ்ணாஷ்டமியில் காஞ்சிக்குச் சமீபமாயுள்ள கலவைஎன்னும் ஊரில் ஸமாதிபெற்றார்கள்.

## (66) ஐந்தாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருவிசைநல்லூர் இவர்களது ஸ்வக்ராமம். லக்ஷ்மீ என்பது இவருடைய மாதாவின் பெயர் பிதாவின்பெயர் நாஸிம்மர். லக்ஷ்மீநாஸிம்மன் எனப்பூர்வாச்ரமத்தில் மகாதேவஸ்வாமிகள் அழைக்கப்பட்டார்கள். சில தினங்கள் மாத்திரம் பீடாதிபதியாய் இருந்து 1908க்குச் சரியான பிலவங்கவருஷம் பால்குனசுக்லப்ரதமையில் தமது குரு அடங்கிய கலவை என்னும் ஊரிலேயே சித்திபெற்றார்கள்.

ஆதிசங்கரரே எனப் போற்றத்தகுந்த ஸ்ரீ காமகோடிபீடாதிபர்களின் புண்யசரித்திரங்களில் 66-ஐ எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் எழுதியுள்ளேன். கல்வியில் பெரியார் இதனை ஏற்றுக்கொள்வார்களாக.

**ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீகாமகோடி பீடாதிபர்களாய் விஜயம் செய்கின்றார்கள்.**

குருபரம்பரை நீடூழி வாழ்க.

---

# ஸ்ரீகாமகோடி பீடாதிபர்களின் காலவரை.



| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ சங்கரபகவத்பாதஸ்வாமிகள் | | |
| 2 | ஸர்வக்ஞாத்மர் | கி. மு. | 476—364 |
| 3 | ஸத்யபோதர் | ,, | 364—268 |
| 4 | ஞானாநந்தர் | ,, | 268—205 |
| 5 | சுத்தாநந்தர் | ,, | 205—124 |
| 6 | அநந்தாநந்தர் | ,, | 124—55 |
| 7 | கைவல்யாநந்தர் | கி. பி. | 55—28 |
| 8 | க்ருபாசங்கரர் | ,, | 28—69 |
| 9 | ஸுரேச்வரர் | ,, | 69—127 |
| 10 | சித்கனர் | ,, | 127—172 |
| 11 | சந்த்ரசேகரர் (1) | ,, | 172—235 |
| 12 | ஸத்சித்கனர் | ,, | 235—272 |
| 13 | வித்யாகனர் (1) | ,, | 272—317 |
| 14 | கீஷ்பதி கங்காதரர் | ,, | 317—329 |
| 15 | உஜ்வலசங்கரர் | ,, | 329—367 |
| 16 | ஸதாசிவர் | ,, | 367—375 |
| 17 | ஸுரேந்த்ரர் | ,, | 375—385 |
| 18 | மார்த்தாண்டவித்யாகனர் | ,, | 385—398 |
| 19 | மூகசங்கரர் | ,, | 398—437 |
| 20 | ஸார்வபௌமசந்த்ரசேகரர் | ,, | 437—447 |
| 21 | பரிபூர்ணபோதர் | ,, | 447—481 |
| 22 | ஸத்சித்ஸுகர் | ,, | 481—512 |
| 23 | சித்ஸுகர் | ,, | 512—527 |
| 24 | ஸத்சிதாநந்தகனர் | ,, | 527—548 |
| 25 | ப்ரக்ஞாகனர் | ,, | 548—564 |
| 26 | சித்விலாஸர் | ,, | 564—577 |
| 27 | மகாதேவர் (1) | ,, | 577—601 |
| 28 | பூர்ணபோதர் (1) | ,, | 601—618 |
| 29 | போதர் | ,, | 618—655 |
| 30 | சீலநிதிப்ருஹ்மானந்தகனர் | ,, | 655—668 |
| 31 | சிதானந்தகனர் | ,, | 668—672 |
| 32 | ஸச்சிதானந்தகனர் | ,, | 672—692 |
| 33 | சந்த்ரசேகரர் (2) | ,, | 692—710 |
| 34 | பகுரூபசித்ஸுகர் | ,, | 710—737 |
| 35 | சித்ஸுகாநந்தர் | ,, | 737—758 |
| 36 | வித்யாகனர் (2) | ,, | 758—788 |
| 37 | அபிநவசங்கரர் | ,, | 788—840 |
| 38 | ஸத்சித்விலாஸர் | ,, | 840—873 |
| 39 | சோபனமகாதேவர் | ,, | 873—915 |
| 40 | கங்காதரர் | ,, | 915—950 |
| 41 | ப்ருஹ்மானந்தகனர் | ,, | 950—978 |
| 42 | ஆனந்தகனர் | ,, | 978—1014 |
| 43 | பூர்ணபோதர் (2) | ,, | 1014—1040 |
| 44 | பரமசிவர் (1) | ,, | 1040—1061 |
| 45 | ஸாந்த்ராநந்தபோதர் | ,, | 1061—1098 |
| 46 | சந்த்ரசேகரர் (3) | ,, | 1098—1166 |
| 47 | சித்விலாஸஅத்வைதானந்த போதர் | ,, | 1166—1200 |
| 48 | மகாதேவர் (2) | ,, | 1200—1247 |
| 49 | சந்த்ரசூடர் (1) | ,, | 1247—1267 |
| 50 | வித்யாதீர்த்தர் | ,, | 1297—1385 |
| 51 | சங்கரானந்தர் | ,, | 1385—1417 |
| 52 | பூர்ணாநந்தஸதாசிவர் | ,, | 1417—1498 |
| 53 | வியாஸாசலமகாதேவர் | ,, | 1498—1507 |
| 54 | சந்த்ரசூடர் (2) | ,, | 1507—1524 |
| 55 | ஸர்வக்ஞ ஸதாசிவபோதர் | ,, | 1524—1539 |
| 56 | பரமசிவர் (2) | ,, | 1539—1586 |
| 57 | ஆத்மபோதர் | ,, | 1586—1638 |
| 58 | பகவந்நாமபோதர் | ,, | 1638—1692 |
| 59 | அத்வயாத்மப்ரகாசர் | ,, | 1692—1704 |
| 60 | மகாதேவர் (3) | ,, | 1704—1746 |
| 61 | சந்த்ரசேகரர் (4) | ,, | 1746—1783 |
| 62 | மகாதேவர் (4) | ,, | 1783—1814 |
| 63 | சந்த்ரசேகரர் (5) | ,, | 1814—1851 |
| 64 | ஸுதர்சனமகாதேவர் | ,, | 1851—1891 |
| 65 | சந்த்ரசேகரர் (6) | ,, | 1891—1908 |
| 66 | மகாதேவர் (5) | ,, | 1908—1908 |

ஸ்ரீகாமகோடி பீடாதிபர்களின் காலவரை

# அரும்பதவுரை.

அடவி=காடு
அதிகாரணம்=அத்யாயம்
அதிக்ரமம்=அநியாயம்
அத்யாத்மவித்தை=வேதாந்தஸாரம்
அநர்ஹர்=தகுதியற்றவர்
அநுஷ்டானம்=நித்யகருமம்
அந்திமனான=கடைசியான
அபவாதம்=அபகீர்த்தி
அபிப்ராயம்=எண்ணம்
அமாத்யர்=மந்திரிமார்
ஆற்றல்=வல்லமை
ஆஸ்திகர்=மதப்பற்றுள்ளவர்
இலக்கியம்=லக்ஷணம் பொருந்தியது
இல்லத்தில்=வீட்டில்
இன்றியமையாதது=இல்லாமல் முடியாதது
உஜ்ஜீவித்தனர்=கடைத்தேறினர்
உயர்தரக்கலாசாலை=ஹைஸ்கூல்

உய்யும்=கடைத்தேறும்
உவந்த=சந்தோஷித்த
கடாக்ஷவீக்ஷண்யம்=கடைக்கண்பார்வை
கண்காணிக்குமாறு=கவனிக்கும்படி
கல்லூரி=காலேஜ்
காராக்ருஹம்=சிறைச்சாலை
காரிகை=சுருக்கமான உரை
கூற்றையே=சொல்லியதையே
கோசம்=நிகண்டு
க்யாதி=கீர்த்தி
க்ரந்தம்=நூல்
சிசு=குழந்தை
சிரஞ்சீவி=நெடுநாள் ஜீவிப்பவன்
சிஷ்டாசாரம்=நன்னடத்தை
சீற்றம்=கோபம்
சுடலை=மயானம்
சுலபர்=எல்லோருக்கும் ஸாதாரணமானவர்



செப்பலாம்=சொல்லலாம்
செவியுற்ற=கேட்ட
ச்ரவணம்செய்ய=கேட்க
ச்ராத்தம்=சடங்கு
ஜீர்ணோத்தாரணம்=பழுதுபார்த்தல்
டீகா=குறிப்புரை
திருமடந்தை=லக்ஷ்மீ
திர்யக்ஜன்மம்=பறவை, மிருகம் முதலியன
தீரம்=கரை
துணிபு=நம்பிக்கை
துறவி=ஸந்யாஸி
தென்மொழி=தமிழ்
தைத்திரீயஸம்ஹிதை=யஜுர்வேதம்
நள்ளிரவு=நடுஇரவு
நாமகரணம்=பெயர்வைத்தல்
நாஸ்திகர்=மதப்பற்று இல்லாதவர்
நிர்ணயித்து=நிச்சயித்து
பகர்ந்தான்=சொன்னான்
பரமகுரு=குருவின் குரு
பரிபாஷை=சாஸ்திரத்திற்கு உரிய மொழி

பருகும்=குடிக்கும்
பாக்லிகர்=வெளிநாட்டார்
பாணிநீயம்=பாணிநிமுனிவர் எழுதிய வ்யாகரணம்
பாதஸரோருகம்=செந்தாமரைபோன்ற பாதம்
பாமரர்=மதியீனர்
பாஷ்யம்=விஸ்தாரமான உரை
புரவலன்=அரசன்
புனிதம்=பரிசுத்தம்
புறத்தே=வெளியில்
பூசுரர்=பிராம்மணர்
பூபாலர்=அரசர்
பூர்வாச்ரமம்=துறவியாவதற்குமுன்
பொலிந்து=விளங்கி
போதகர்=குரு
ப்ரக்யாதி=கீர்த்தி
ப்ரசாரம்=பரவச்செய்வது
ப்ரசுரம்செய்து=அச்சிட்டு
ப்ரபாவம்=கீர்த்தி
ப்ரயாகை=அலகாபாத் நகரம்
ப்ரவசனம்=சொல்லுதல்

ப்ராக்ருதம் = உலகவழக்கமான பேச்சு
ப்ராந்தம் = தேசம்
ப்ராயச்சித்தம் = பரீஹாரம்
ப்ரும்மவரிஷ்டர் = முதிர்ந்தஞானி
மகவு = குழந்தை
மகீபதி = அரசன்
மகாமகோபாத்யாயர் = மிகக்கற்றவர்
லோபம் = ஆசை
வடமொழி = ஸம்ஸ்க்ருதம்
வந்தித்து = வணங்கி
வாமபூஜை = பலியிட்டுப்பூஜித்தல்
வாயிலில் = வாசலில்
வார்த்திகம் அல்லது வ்ருத்தி = சுருக்கமான உரை
விஜயன் = ஜயசீலன்
விசதமாகும் = நன்ருகத்தெரியும்
விதேககைவல்யம் = பிறவியில்லாத மோக்ஷம்
விதேசி = அன்னியநாட்டான்
விழா = உற்சவம்
வைரி = விரோதி
வ்யாக்யானம் = விஸ்தாரமான உரை
வ்யாகரணம் = வடமொழி இலக்கணம்
வ்ருத்தாந்தம் = செய்தி
ஸஹகமனம் = உடன்கட்டையேறுதல்
ஸமேதர் = சேர்ந்திருப்பவர்
ஸம்பாவனை = கௌரவம்பற்றிக்கொடுக்கும் பணம்
ஸம்ஸ்காரம் = சவத்தைச்சுடுதல்
ஸர்க்கம் = அத்தியாயம்
ஸர்வக்ஞபீடாதிரோகணம் = கலைகளனைத்தும் கற்றுத் தேர்ந்தவர் உட்காரும் பீடத்தில் ஏறுதல்
ஸர்வவ்யாபகசைதன்யம் = அழிவற்று எங்கும் நிறைந்திருப்பது
ஷண்மதம் = ஆறுவிதமானமதக்கொள்கைகள்
ஷோடசதானம் = பதினாறுவகையான தானங்கள்



ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள்.

உ

# ஸ்ரீ சங்கரர் பிள்ளைக்கவி.

பாஷாத்ரய பண்டித கவிரத்நம்

ஆத்ரேய. ஸ்ரீகிருஷ்ணசாஸ்திரி.

## பிள்ளைக்கவி பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 1 | நல்லூரை | நல்லுரை |
| | 8 | தாலேதாலே | தாலே |
| | | தலேலோ | தாலேலோ |
| 9 | 8 | சப்பாணி | சப்பாணி |
| | 13 | ருகக்காரா | ருகக்கரா |
| | 16 | ஸம்ருதி | ஸ்மிருதி |
| | 22 | செய்தரே | செய்தவரே |
| 12 | 23 | அம்—லீ | அம்புலீ |
| 13 | 6 | கிப | கிய |

# முகவுரை.

பிள்ளைக்கவி என்பது, பிள்ளையாகப் பாவித்துப் பாடும் கவி எனப் பொருள்படும். இஃது தெய்வத்தையாவது, கீர்த்திவாய்ந்த பெரியாரையாவது குறித்துப் பாடப்படுதல் மரபு. முத்துக்குமார், மீனாக்ஷியம்மை எனத் தெய்வங்களையும், சேக்கிழார் எனப் பெரியாரையும் குறித்துள்ள பிள்ளைத் தமிழ்கள் பெரிதும் பாராட்டப் பட்டு விளங்குகின்றன.

தெய்வ பரமாயுள்ளது ஆண்பால் பிள்ளைத்தமிழ் எனவும் தேவிபரமாயுள்ளது பெண்பால் பிள்ளைத் தமிழ் எனவும் சொல்லப்படும். இந்நூல், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வாரானை முத்தம், அம்புலி என்ற ஏழு பருவங்கள் ஆண் பெண் பாற்களுக்குப் பொதுவாகவும், சிறுபறை, சிற்றில், சிறுதேர் என ஆணுக்கும், அம்மனை, நீராடல், ஊசல் எனப் பெண்ணுக்கும் முப்பருவங்கள் சிறப்பாகவும் சேர்ந்து, பத்துப்பருவங்களாலாக் கப்படும். பருவம் ஒன்றுக்குப் பத்துப்பாக்களாக நூறுபாடல் களாலியைந்த ஓர் சதகமே பிள்ளைத் தமிழாம்.

பருவ இலக்கணங்கள்

(1) காப்பு:—பிள்ளையைக்காக்குமாறு கடவுளாரை வேண்டுவது

(2) செங்கீரை:—தவழ்ந்து விளையாடத்தொடங்குங்கால், கால்களை மடக்கிக் கைகளை ஊன்றி மழலைமொழிந்து ஆடுதல் (கீரை - வார்த்தை)

(3) தால்:—தாலாட்டுதல் (தாலு - நாவு)

(4) சப்பாணி:—கைதட்டி விளையாடுதல்.

(5) வாரானை:—இங்குவாவென்றழைத்தல்.

(6) முத்தம்:—முத்தம்தா எனல்.

(7) அம்புலி:—''அம்புலிமானேவா'' எனக்கூறுவது. (ஆண் பெண் பாற்களுக்குப் பொதுவான பருவங்கள் ஏழும் விளக்கப்பட்டன.)

(8) சிறுபறை:—சிறிய பறையைக் கொட்டுவித்தல்.

(9) சிற்றில்:—"விளையாடுமிடத்தில் இடையூறு செய்யாதே" எனச் சிறுமியர் வேண்டல்.

(10) சிறுதேர்:—சிறிய தேர் உருட்டியோடுதல். (இம்மூன்றும் ஆண்பாலுக்குச் சிறப்பானவை)

(8) அம்மனை:—அம்மனையாடுதல்.

(9) நீராடல்:—ஜலக்ரீடை செய்தல்.

(10) ஊசல்:—ஊசலாடி இன்புறல்.

(இம்மூன்றும் பெண்பாலுக்குச் சிறப்பானவை.)

இத்தகைய பிள்ளைத்தமிழ் நூல்கள் வியக்கத்தக்க கற்பனைகளுடனும், பக்திவிளைவிக்குந் தோத்திரப்பாக்களுடனும் உள்ளன "........தானென்று வெண்ணரன் பாஷையிந் நாட்டிற் றலையெடுக்க, ஏன் என்று கேட்பவரில்லாத் தமிழ்..........."

எனத்திரிசிரபுரம் மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணுக்கருள் ஒருவராகிய, வேதநாயகம் பிள்ளையவர்கள் கூறுமாறு இவைகளைக் கற்றுணர்பவர்கள் இப்பால், மிகச்சிலரே.

ஆனதுபற்றி "சுருங்கக்கூறல்" என்ற முறைப்படி பருவத்திற்கு ஒரு பாடலாகப் பத்துப்பாடல்களும், கடவுள் வாழ்த்து, வாழிவிருத்தம் என முதலிலும் கடையிலுமிரு பாடல்களும் கூடிப் பன்னிரு பாக்களாலான "மங்களாம்பிகை பிள்ளைக்கவி" என்ற அடியேனியற்றி அச்சிட்ட ஓர் நூலை உற்றுநோக்கிய ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களான ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆதிகுருவாகிய சங்கர பகவத்பாத ஸ்வாமிகளை அவ்வாறே போற்றுமாறு அடியேனுக்குக் கட்டளையிட்டனர்.

அப்பெரியாரின் அருளை முன்னிட்டு வரையப்பட்ட இந்நூல்அவர்களது மகாஸன்னிதானத்தில் சென்றக்ரோதன வருஷம் வையாசி மாதத்தில் அரங்கேறியது.

குற்றங்களைந்து, இதனை ஏற்குமாறு கல்வியிற்பெரியாரைப் பெரிதும் வேண்டுகின்றேன்.

லால்குடி. } அடியார்பான்மேய அன்புள்ள,

ப்ரோமத கன்யாமீ } ஆத்ரேய ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரி.



## விநாயகர் வணக்கம்.

---

மங்களங் கொண்டுதொழு மாந்தரார் வேண்டவரு
மதமலை முகத்தவென்றும்
மறைசொலந் தணன்முதல் மணமக்க ளிருக
மாசுதீ ரேரம்பனே

செங்களஞ் சென்றுபல திதிமஞ்ச ரழிவுறச்
சேதுக்குமொரு கொம்புளோனே
செச்சையுறு மார்பனே சிவனீன்ற செல்வனே
செயலற் றுனைப்போற்றுவன்

சங்கதங் கொண்டுலக சங்கடந் தீர்க்கவே
சஞ்சரித் தருள்செய்தவன்
சத்தாகி யனைவருந் தவநிலை சார்ந்துதுர்ச்
சமயங்க ளகலவென்றே

தங்கவுற் றேனரன் தானெனத் தரணியோர்
தலைமீது கைகுவித்துத்
தாழுலக புங்கவன் தருமனெம் சங்கரன்
தமிழ்க்கவி தழைக்ககவன்றே

**குறிப்பு:**—மதமலை முகத்த- யானைமுகத்தானே, என்றும் - எப்பொழுதும், மறைசொல்அந்தணன் - பிரமன், மண்மக்கள் - புவிமாந்தர், மாசு -

குற்றம், வரம்பனே - விநாயகரே, செங்களம் - யுத்தகளம், திதிமஞ்சர் - அசுரர், செச்சை - சிவப்பான சந்தனம், சங்கதம் - சிநேகம், உலகபுங்கவன் - ஜகத்குரு.

பொழிப்புரை:— சுபசோபன காலங்களில் மனிதர்கள் வேண்டி வணங்கியவுடன் எழுந்தருள்கிற யானைமுகக்கடவுளே, பிரமன்முதல் மனிதர் முடியவுள்ள எல்லோருடைய குற்றங்களையும் எக்காலத்தும் விலக்கி அருள்செய்கிற விநாயகரே, யுத்தகளத்திற் புகுந்து எண்ணிறந்த அசுரர்கள் அழியும்படி குத்திக்கொல்லக் கூடிய ஒப்பற்ற ஒரே தந்தத்தையுடையவரே, சிவந்த சந்தனக் குழம்புபூசிய மார்பையுடையவரே, சிவனது திருக்குமாரரே, உலகிலுள்ளோருடைய சங்கடங்களைப் போக்குவதற்காக நட்புடன் விஜயயாத்திரை செய்தவரும், எல்லோரும் நல்லோராய் தவநிலை பெறவும், துர்மதங்கள் விலகுதலின் பொருட்டும், உலகில் தங்கியவரும், புவியிலுள்ளோரனைவரும் சிவனென மதித்துத் தலைமீது கைகுவித்து நமஸ்கரிக்கிற ஜகத்குருவும், தர்மரூபியுமான எமது சங்கரபகவத்பாதஸ்வாமிகளைக் குறித்துப்பாடுகிற இத்தமிழ்க் கவியானது இடையூறு இல்லாமல் நிறைவேறுவதற்காக வேறு செயலின்றித் தங்களைத் துதிக்கின்றேன்.






# ஸ்ரீ சங்கரர் பிள்ளைக்கவி.

## காப்புப் பருவம்,

மச்சமாய்க் கற்கியாய் மண்ணினைப் புரக்கவரு
மாலுடன் மாதேவனும்
மண்போதுத் தந்தையும் மாவேனு மம்மையும்
மலைவந்த காமாக்ஷியும்

விச்சையுறு தூயளோடு விக்கினக் கடவுளும்
விபுதரின் னதிகவேட்டோன்
வீரபத் திரனுமே விரைவுற்ற சீயமேல்
வீரியும் பரிந்துகாக்க

கச்சக மனத்தினைக் கடிதினி லடக்கவுங்
கங்கைவே ணியன்பதத்தில்
கட்டவு மாசற்ற அருளினைப் பெறுமாறு
காட்டவுங் கருணைபொங்கி

நோச்சிசூழ் கச்சிமுத ஞேக்குற்ற விடமேலாம்
நுண்ணிலா மவுலியோங்க
நுண்மைசெய் தான்பலவு நூலுளோன் காலடி
நோக்குமேம் பெருமானையே.........க

**குறிப்பு:—** மண்பொதுத்தந்தை - பிரமன், மா எனும் - லக்ஷ்மி என்கிற, விச்சையுறு தாயள் - ஸரஸ்வதி, விபுதரின் அதிகம் வேட்டோன்-தேவசேனையை விரும்புகிற முருகக்கடவுள், சீயம் - சிங்கம், வீரி - துர்க்கை, கச்சகம் - குரங்கு, கங்கைவேணியன் - சிவபிரான், நொச்சி - மதில், நுண்ணிலா மவுலி - சந்திரமவுளீச்வரர், நுண்மை - சேர்த்தி, காலடி - கேரளதேசத்துள்ள ஓர் ஸ்தலம்.

பொழிப்புரை:— மனக்குரங்கை உடனே அடக்கிச் சிவனுடைய பாதங்களில் கட்டவும், குற்றமில்லாத அருளைப் பெறுகிற வழியைப் போதிக்கவும் கருணை நிரம்பி, மதில் சூழ்ந்த காஞ்சீபுரம் முதலிய அருள்பார்வை சேர்ந்தவிடங்களிலெல்லாம் சந்த்ரமவுளீச்வரர் எழுந்தருளும்படி ஒழுங்கு செய்தவரும், பல நூல்களால் கொண்டாடப்பெற்றவரும், காலடி என்ற புண்யபூமியில் கடாக்ஷித்தவருமான எமது குருமூர்த்தியை, மச்சாவதாரம்முதல் கற்கி அவதாரம் வரையில் தசாவதாரமெடுத்து லோகஸம்ரக்ஷணை செய்கிற மகாவிஷ்ணுவும், சிவனும், பிரமதேவனும், லக்ஷ்மியும் பர்வத ராஜபுத்ரியான காமாக்ஷியம்மையும், கலைமாது எனப்புகழ்பெற்ற ஸரஸ்வதியும், விநாயகரும், தேவஸேநாபதியான முருகக்கடவுளும் வீரபத்ரமூர்த்தியும், சிங்கவாகனத்திலேறிக் கடிதென அருள்கிற பத்ரகாளியம்மனும் அன்புடன் காப்பார்களாக.

## செங்கீரைப் பருவம்.

நாத்தழும் பேறவீண் நாத்திகம் பேசுவோர்
நண்ணலாச் சினவரன்தன்
நால்வகைக் கேள்வியை நன்றெனக் கொண்டவர்
நானிலம் பரவிநின்ற

சாத்தனைச் சார்ந்தவர் சன்மார்க்க மில்லாத
சமயவா திகணிறைந்து
சந்தேக மேறவுஞ் சாத்திர மிஃதெனச்
சாதிக்க வையமுய்ய

நீத்தலுற் றேய்நல்ல நீதியுற் றேய்சிதடு
நித்திரை நீக்கவல்லலோய்
நீதியா மத்துவித நீளறிவு நிலைநிற்க
நிமிர்பரத நாடலைந்து

சேத்தசீ ரங்கிரிச் செல்வநீ உவந்தினிய
செங்கீரை யாடியருளே
சேத்துப் பிறக்காத சேமமேற் கருளநீ
செங்கீரை யாடியருளே...............உ

**குறிப்பு:—** சினவரன் - சினன், நண்ணலா - சேரக்கூடாத, நால் வகைக்கேள்வி - கற்றல் கேட்டல் அவ்வழிநிற்றல் ஓதல், சாத்தனைச்சார்ந் தவர் - சமணர், வையம் உய்ய - உலகிலுள்ளோர் ஈடேற, நீத்தல் - ஸன் யாஸம், சிதடு - அறிவீனம், சேத்த - சிவந்த, அங்கிரி - பாதம், சேமம் எற்கு - க்ஷேமத்தை எனக்கு.

பொழிப்புரை:— நாவு தழும்புபடும்படி வீணான நாஸ்திக வாதம் செய்பவர்களும், நல்லோர் சேரக்கூடாத புத்தனது உபதே சங்களை மதித்த புத்தமதத்தினர்களும், தேசமெங்கும் பரவியிருந்த சமணர்களும் சன்மார்க்கமில்லாத வேறு பல சமயவாதிகளும் நிறைந்து சந்தேகங்கள் மிகுந்திருந்த அக்காலத்தில் தத்துவத்தைச் சாதித்து உலகிலுள்ளோர் கடைத்தேறுவதற்காகவே துறவியான வரே சன்மார்க்கமுள்ளவரே அக்ஞான நித்திரையைப் போக்கவல்ல வரே, உண்மையான அத்வைத ஞானத்தை நிலைநாட்டுதற்காக விஸ்தாரமான பரதநாடெல்லாம் அலைந்து சிவந்த பாதங்களோடு கூடியவரே, நீர் சந்தோஷமாக மழலைமொழிந்து ஆடுவீராக; ஜனன மரணமில்லாத க்ஷேமத்தை அடியேனுக்கு அருளும்வண்ணம், மழலை மொழிந்து ஆடுவீராக.

## தாலப் பருவம்.

---

சங்கர னுதவிய லிங்கம தருளிய
வாகைத் தாதாவே
சந்தத மும்பர மந்திர மேபுகல்
சீலா மாதேவா

சிங்க வுளப்பிற தந்திர மேனிலை
சேரா தாளானேய்
செம்புக ணற்குரு வந்தன மேனுமுன
மாரோ வேன்னுமல்

வங்கண நல்லூரை செஞ்சேவி புகவிட
ஆசை கொள்வோனே
வஞ்சனை யற்றுனே வந்தனை செய்தவர்
வாதை மேவாமல்

தங்கமு றப்பணு மிறைவா தகையோய்
தாலே தாலேலோ
தாரணி மகிழுஞ் சமயந் தந்தவ
தாலே தாலே தாலேலோ............ரு

குறிப்பு:— வாகை - தருமநெறி, சிங்கல் - அழிதல், பிறதந்திரம் - அந்யமதம், செம்புகழ் நற்குரு, வங்கணம் - நேசம்.

பொழிப்புரை:— சிவபிரான் அநுக்கிரகித்த பஞ்சலிங்கங்களை இங்கு ஸ்தாபித்த தருமநெறியுள்ள தலைவரே, மேலான மகா மந்திரங்களை எக்காலத்தும் உச்சரித்து சன்மார்க்கமுற்றுச் சிவனெனக் கொண்டாடத் தகுதியுள்ள குருவரரே, அழியக்கூடிய அன்னிய சித்தாந்தங்கள் தலையெடுக்காவண்ணம் ஜயம்பெற்றவரே, க்யாதிபெற்ற குருமூர்த்தியே, 'வந்தனம்' என்று சொல்வதற்கு முன்னே இவன் யாரோ எனக் கருதாமல் நட்புடன் அருமையான உபதேசங்களைப்போதிப்பதற்கு ஆசையுள்ளவரே, கபடமில்லாமல் பணிந்தவர்கள் துன்பம் நீங்கிப் பரிசுத்தமாகும்படி கடாக்ஷிக்கும் தலைவரே, பெருந்தன்மை பொருந்தியவரே, யோக நித்திரை செய்வீராக; உலகிலுள்ளோர் மனமொப்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய அத்வைதசித்தாந்தம் செய்தவரே, யோகநித்திரை செய்வீராக.

## சப்பாணிப் பருவம்.

---

எண்ணிலா வேதமும் ஏலுவனே ருண்மைசொலும்
எய்ப்பிலாத் தருமநூலும்
எல்லையில் லாக்கதையும் ஏற்றஇதி கரசமும்
எதிரிலாக் கலையனைத்தும்

புண்ணியப் புருடராம் புனிதப்பெருந்தவர்
போற்றுமொரு வேதரஸமும்
புகழ்ச்சுக னின்றவன் போதித்தபல சூத்திரம்
புவியளந் தோனிசைப்பும்

திண்ணமாய்த் துவிதமில் தீட்டிய வுரையெனத்
தெரியவைத் துலகமெல்லாம்
தீதிலாச் சமரஸச் சீர்பெறச் செய்தவா
தெய்வமொன் றறிதியென்றே

ஷண்மதந் தந்தவா ஸரஸீ ருகக்கரா
சப்பாணி கொட்டியருளே
சரவடிப் பிறவிபோஞ் சாங்குலி கற்றவா
சப்பரணி கொட்டியருளே (௪)

**குறிப்பு:**—எலுவன் நேர் - சிநேகனைப்போல்; எய்ப்பு இலா - குறைவு இல்லாத; கதையும் - புராணங்களும் புண்ணிய...... ......ரஸமும் தவமுனிவர்கள் பாராட்டிய உபநிஷத்துக்களும்; சுகன் ஈன்றவன் - வியாஸமுனிவர், பொறித்த - எழுதிய; புவி அளந்தோன் இசைப்பும் - பகவற்கீதையும்; அறிதி - அறிந்துகொள் ஸரஸீருகக்காரா - தாமரைபோன்ற கைகளையுடையவரே; சரவடி - பரம்பரையான; சாங்குலி - வைத்யம் -

பொழிப்புரை:—கணக்கற்ற வேதங்களும், நண்பனைப்போல் உண்மையைச்சொல்கிற குறைவற்ற ஸம்ருதிகளும், எல்லையில்லாத புராணங்களும், மேலான இதிகாசங்களும் ஒப்பில்லாத கலைகளும், புண்ணிய புருஷர்களான பரிசுத்தமுள்ள ரிஷிகள் கொண்டாடிய உபநிடதங்களும், சுகப்பிரம முனிவரின் தந்தையாகிய வ்யாச முனிவர் அருளிய பிரமசூத்திரங்களும், மூன்றடிகளால் உலகமெலாமளந்த கண்ணபிரான் கூறிய பகவத்கீதையும், நிச்சயமாய் அத்வைதமெனவே விளக்கி, உலகமெங்கும் ஸமரஸபாவம் பெற்றுச் சிறப்படையச்செய்தவரே "கடவுள் ஒருவரே அறிவாயாக" என ஷண்மதஸ்தாபனம் செய்தரே. தாமரை மலர்போன்ற கைகளையுடையவரே கைதட்டி விளையாடுவீராக. வரிசையாய் வருகிற பிறவிப் பிணியைப் போக்கவல்ல வைத்தியம் கற்றவரே, கைதட்டி விளையாடுவீராக.

## வாரானைப் பருவம்.

---

பிஞ்சுமதி சூடினோன் பிஞ்ஞகன் புகழினைப்
பிடித்தொழுகு மாறுகாட்டிப்
பிணிமுப் பிலாப்பதம் பிணக்கிலா நற்குணப்
பீடருள வருககுருவே

மஞ்சுமொழி பகரவா மாசிலாக் குணமலை
மண்டனர் மனையாட்டியாம்
மாதெனச் சொன்னபா மகளினை வெற்றிகொளும்
மண்டலப் பண்டிதாவா

நெஞ்சுதடு மாற்றமிற நெகிழ்ந்துனைப் போற்றமதி
நேமிக்க நீவருகவே
நேர்பெற்ற வாரியா நேமநிட் டைகொள்ள
நெறியளித் தருகுவாவே

எஞ்சுறுத லுற்றமதி எய்த்தலைப் போக்கவா
எம்பிரான் வருகவருக
எதிரிலாக் கவிவரா ஏவமிற் குருபரா
ஏமமுற நீவருகவே (௫)

குறிப்பு:-பிஞ்சுமதி - பிறைச்சந்திரன், பிஞ்ஞகன் - சிவன்; பீடருள- பெருமையருள; மஞ்சு- அழகு; பாமகளினை - ஸரஸ்வதியை. எஞ்சுறுதல்- குறைதல்; எய்த்தலை - இளைத்தலை; ஏவம் இல் - குற்றமில்லாத; ஏமம் உற - யாங்கள் களிப்படைய

பொழிப்புரை:—சந்திர கலாதரரான சிவபிரானது லீலா விபூதிகளையறிந்து அவரிடத்தில் பக்திபூண்டு ஒழுகும் வழிகளைப் போதித்துப் பிணியும் மூப்பும் இல்லாத நிலையும் கோபமற்ற நல்ல குணமுள்ள பெருமையும் அடியேனுக்கு அருளும்பொருட்டு வந்தருள்வீராக, அழகான மொழிகளைப் பேசுதற்கு வருவீராக. குற்றமற்ற குணங்களைக்கொண்ட மலைபோன்ற மண்டனருடைய பெண்சாதியெனக் கூறப்படுகின்ற ஸரஸ்வதியை வென்ற உலகிற் பெரிய பண்டிதரே, வருவீராக. மனதிடத்துள்ள சந்தேகங்கள் விலகவும் உருக்கத்துடன் உன்னைத் துதிப்பதற்கு மதியளிக்கவும் வரவேண்டுகின்றேன். சிறப்புவாய்ந்த பூஜ்யரே, நியமநிஷ்டைகளை அடியேன் பெறும் மார்க்கத்தை உபதேசித்து அநுக்ரகிப்பதற்கு வந்தருள்வீராக. குறைந்து வருகிற எனதுமதியின் இளைப்பைப் போக்குதற்கு எழுந்தருள வேண்டும். எமது தலைவரே வாருங்கள். ஒப்பற்ற கவி சிரேஷ்டரே குற்றமற்ற ஜகத்குருவே யாங்கள் களிப்படைய வந்தருள்வீராக.

## முத்தப் பருவம்.

ஆற்றிலொரு வல்லமீன் அலமரச் செய்தபோழ்
தன்னைக் களித்தமுத்தம்
அனந்தருறு மாந்தரார் ஆனந்த மெய்தவே
அன்றுநீ பயின்றவாரம்

மாற்றிலாப் பொன்மழை மனையினிற் பொழியவே
மாவினைத் துதித்ததரளம்
மகுடமன் னர்களும் மாறிலாச் சீடரும்
மகிழுமொரு முத்தாபலம்

ஊற்றமொடு மன்றினில் உரைத்தபல நித்திலம்
உறுசாக் கியமௌனம்
உண்மையிற் சமணரும் உவந்தேற்ற மவுத்திகம்
உலகெலாம் புகழுமுன்றன்

கூற்றெலா முத்தெனக் கொண்டியா னேற்றுவன்
குவளைவாய் முத்தமருளே
குபுருட ஞயினும் குணமேற்ற சங்கரன்
குவளைவாய் முத்தமருளே (௬)

குறிப்பு:— வல்லமீன் - முதலை, அலமரல் - அச்சம், அனந்தர்உறு - மயங்கியுள்ள, பயின்ற ஆரம் - கூறியமுத்து, மாவினை - லக்ஷிமியை, தரளம் - முத்து, முத்தாபலம் - முத்து, ஊற்றமொடு - சஞ்சலமில்லாமல், மன்றினில் - சபையில், நித்திலம் - முத்து, சாக்கியமௌனம் - புத்தர்களின்சங்கம், உண்மையில் - தத்துவமில்லாத, மவுத்திகம் - முத்து, கூற்று எல்லாம் - மொழிகளெல்லாம், குபுருடன் - துஷ்டன்.

பொழிப்புரை:— ஆற்றிலிருந்த ஒரு முதலை தங்களை அஞ்சும்படி செய்தபொழுது, தாய்க்குச்சொல்லிய முத்தான மொழிகளும் மயங்கியுள்ள மனிதர்கள் ஆனந்தமடையும்படி அக்காலத்தில் நீர் உபதேசித்த முத்துப்போன்ற வார்த்தைகளும் (ஓர் ஏழையின்) வீட்டில் மாற்றில்லாத பொன்மழை பொழியும்படி லக்ஷ்மியைத் துதித்த முத்தான தோத்திரங்களும், க்ரீடாதிபதிகளும் ஒற்றுமையுள்ள சிஷ்யர்களும் ஆனந்திக்கும்படி சொல்லிய ஒப்பற்ற முத்தெனத்தகும் சொற்களும் சஞ்சலமில்லாமல் சபைகளில் பேசிய

எண்ணிறந்த முத்துக்களுக்கொப்பான உபந்யாஸங்களும்பௌத்த சங்கத்தாரும் உண்மையறியாத சமணர்களும் சந்தோஷித்து ஏற்றுக்கொண்ட முத்தைப்போன்ற தத்துவங்களும், மேலும் உலகெலாம் கொண்டாடுகிற தங்களது (நூல்களிலுள்ள) மொழிகளெல்லாம் முத்தெனக்கொண்டு அடியேன் துதிக்கின்றேன்; குவளையொப்ப உனது வாய்முத்தம் தந்தருளவேண்டும்; துஷ்டனுபினும் குணத்தைக்கொள்கிற சங்கரகுருவே, முத்தந்தருவீராக

## அம்புலிப்பருவம்.

---

தலந்தோறு நீலமாத் தகையுற்ற வானிடை
தரியாது திரியுமதியே
தக்கனது வேள்வியில் தாளுற்று சிரமதில்
தண்ணமுறு நின்னைநோக்கிப்

பொலந்தர நிரந்தரம் பொத்தைச் சடைதனிற்
பொருட்படுத் தேற்றசிவனும்
பொள்ளாத மணியினைப் போற்றுமோ ராரியன்
பொருக்கென வருகவென்றான்

உலந்தரு வலமுள்ள உள்ளமே தாழ்ப்பமாய்
உறுகாமத் திமிகொண்டகோள்
உறுத்தற் றிமிங்கிலம் உரவுள்ள வாசைவளர்
உற்பவத் திரைகொண்டமா

அலந்தலை யளக்கருக் கம்பியாங் குருவுடன்
அம்புலீ யாடவாவே
அன்புற்று மாணவர் அண்முமா சானுடன்
அம்புலீ யாடவாவே (எ)

குறிப்பு:— தக்கனதுவேள்வியில் - தக்ஷயாகத்தில், பொலந்தர - அழகாக, நிரந்தரம் - எப்பொழுதும், பொத்தை - பருத்த, பொள்ளாத மணியினை - சந்த்ரமௌளீசுவரரை, பொருக்கென - சீக்கிரமாக, உலந்தரு - கல்லுக்கு ஒப்பான. தாழ்ப்பமாய் - ஆழமாக, திமி - திமிங்கலத்தை விழுங்கும் ஓர் மீன், கோள் உறுத்தல் - கொடிய கோபம், உரவுள்ள - வலிமையுள்ள, உற்பவத்திரை - பிறவியாகிய அலை, மா அலந்தலை அளக்கருக்கு - பெரிய துன்பக்கடலுக்கு, அம்பி - கப்பல், அண்மும் - கிட்டி வருகிற, ஆசான் - குரு.

பொழிப்புரை:—எவ்விடத்திலும் நீல நிறங்கொண்டு பெருமைபெற்ற வானத்தில் நிலைத்திராமல் அலைகின்றசந்திரனே, தக்ஷன் செய்த யாகத்தில் உன்னைத் தேய்த்தபொழுது தலையில் குளிர்ச்சியுண்டாக்கியதை நோக்கி பருத்த தனது ஜடாபாரத்தில் உன்னைப் பெரிதாக மதித்து அழகாகத்தரித்துக்கொண்டிருக்கிற சிவபிரானுகியசந்த்ரமௌளீச்வரரைப் பூஜிக்கின்ற பெரியாரான சங்கரர் "சீக்கிரமாக வா" என்றழைக்கிறார்.

கல்லைப்போல கடினமான மனதை ஆழமாகவும், காமம்என்ற திமியைக்கொண்டும், கொடியகோபமாகிய திமிங்கிலத்தோடு கூடியும், வலுவான ஆசையினுல் ஏற்படுகிறபிறவியாகிய அலைகளோடு இணைந்துமுள்ள பெரிய துன்பக்கடலுக்குக் கப்பலேபோல் விளங்குகிற ஜகத்குருவுடன் விளையாடுதற்கு அம்புலீ வருக. பக்திபெற்ற சீடர்கள் நெருங்கியுள்ள குருவுடன் விளையாடுதற்கு அம்புலீ வருவாயாக.

## சிறுபறைப் பருவம்,

---

நீதகஞ் சிறிதிலார் நெறியிலார் காலடி
நின்றபல வந்தணர்கள்
நின்னம்ம னைதுஞ்ச நிலையமுற் றிருக்கவே
நிர்ணயஞ் செய்ததாலே.

மேதக வன்னைபால் மிகமேவு முறவினுல்
மேதினி துறந்தநீயும்
மேசகமி லாநல்ல மேலுலக மெய்தவனை
மேனியைச் சுட்டசெயலும்

பீதகன் தானெனப் பீடுற்ற குருவினைப்
பின்பற்றி நின்றபண்பும்
பேருலக வுதவியும் பேசுமோரு துறவமும்
பிடித்தொழுகி முழக்குமொருவ

சீதகர முககமல சின்மயானந்தகுரு
சிறுபறை முழக்கியருளே
சீதரன் சிவனெனத் திரிபிலாக் குருவரா
சிறுபறை முழக்கியருளே. (க)

**குறிப்பு:**—நீதகம் - நியாயம்; நின் அம்மனை துஞ்ச - உனது தாயார் இறந்தபொழுது; நிலயம் - வீடு; மேதக - மேன்மையான; மேசக - இருள்; பீதகன்தான் என - பிரகஸ்பதியே என்றுசொல்லும்படி; பீடுற்ற- பெருமைகொண்ட; சீதகராமுககமல - பூர்ண சந்திரன் போலவும் தாமரை போலவும் முகத்தையுடையவரே; திரிபு இலா - பேதமில்லாத.

பொழிப்புரை:—நியாயம் சிறிதுமில்லாதவர்களும் நெறியற்ற வர்களுமான காலடி என்ற ஊரிலிருந்து அந்தணர்கள் உனது தாய் அடங்கியபொழுது வீட்டிலேயே தங்கியிருப்பதற்கு உறுதி கொண்டதாலும் மேன்மை பொருந்திய தாயினிடத்தில் நீ வைத் திருந்த பேரன்பினாலும் உலகத்தைத்துறந்த நீயும் இருளற்ற கபதவியடையும்படி தாய்க்கு தகனகிரியை நடத்திய செ பிருகஸ்பதிக்கு ஒப்பானபெருமைவாய்ந்த குருவுக்குக்கீழ்ப்ப நடந்தவிதமும் நீசெய்த லோகோபகாரமும் கீர்த்திவாய்ந்த உ ஸன்யாஸ தர்மமும் நடத்திக்காட்டி வெளியிடும் ஒப்பற்ற சந்திரனை ஒப்ப முககமலமுள்ளவரே, சின்மயானந்த கு சிறுபறை முழக்குவீராக. விஷ்ணு சிவன் எனப்பேதமற்ற வாரே, சிறுபறை முழக்குவீராக.

## சிற்றில் பருவம்.

---

உறுமிவரு மறலிவிரை வுற்றநே ரந்தனில்
உன்னுவார்க் கபயமுளதே
ஊமையா யானவிதி யுற்றசிறு பிள்ளையை
ஓங்குநா வலனுக்கினேய்

வெறுமைபெறு வறுமையும் வீறுற்ற சஞ்சிதமும்
வேறுமுள கருமபந்தம்
வேவிக்கு நோய்களும் விடமேனத் தாக்கிவரு
வீரனு மேதிரிதானும்

மறுமையுட னிம்மையும் மாசுற்ற குறுமையும்
மாப்பெருஞ் சிறுமைதானும்
மயக்கோடு கயவராம் மானிடர் துயரமும்
மாறுறச் சீர்செய்தவா

சிறுமியர் தகுளமாச் சேருமிந் நேரமேம்
சிற்றிலைச் சிதைத்திடாதே
சின்முத்தி ரைகோண்ட சிற்சுகா னந்தகுரு
சிற்றிலைச் சிதைத்திடாதே. (கூ)

குறிப்பு:— மறலி - யமன், உன்னுவார்க்கு - தியானிப்பவருக்கு வீறு உள்ள - வெறுக்கத்தக்க, குறுமை - தாழ்ந்த நிலை, சிறுமை - அவித்தை கயவர் - கீழ்மக்கள், சிறுமியர் - சிறுபெண்கள், தகுளமா - விளையாட்டாக,

பொழிப்புரை:—கனைத்துக்கொண்டு யமன் வேகமாய் வருங் காலத்தில் தியானிப்பவர்க்கு உனது அபயம் கிடைக்கும். ஊமையாகவிருக்கக்கூடிய விதியடைந்த ஒரு சிறுவனை பேரறிஞனுக்கவல்லவே, ஒன்றுமிலாத் தரித்திரமும், வெறுக்கத்தக்க ஸஞ்சிதமான கர்மங்களும் வேறான கர்மபந்தங்களும், துன்புறுத்தும் நோய்களும், விஷத்தைப்போல் தாக்குகிற வீரனான சத்துருவும். இம்மை மறுமைகளும், பாவமுள்ள தாழ்ந்த நிலையும், பெரிய மதிக்குறைவும், அக்ஞானத்தால் துன்பமடைந்த மனிதர்களுடைய துக்கமும் விலகும்படிசெய்தவரே, சிறுபெண்கள் விளையாடக்கூடுமிக்காலத்தில் எங்களது சிறியவீட்டைக்கலைக்கவேண்டாம் சின்முத்திரையேற்ற சிற்சுகானந்தகுருவே சிறிய வீட்டைக் கலைக்கவேண்டாம்,

## சிறுதேர்ப் பருவம்.

---

தும்மினும் பரியுமித் தூலத்தை யுற்றுபல
துவக்குளே புகுந்துலாவித்
துற்றலுக் கலைதலும் தூங்கலுமின்றியான்
தூயநேறி கற்றிலலேனே,

இம்மைநீங் கலுமேனக் கினியம்மை யெம்மையோ
ஈனமிகு வெம்மைபோமோ
இங்குவம் மேனவழைத் தீசனைப் போற்றுவார்க்
கிம்மியு முதவவில்லை.

சிம்மத வணிகலச் சேம்மலைச் சார்ந்திலேன்
சினப்பிலாத் திருமாலினைச்
சிந்திக்கு மனமில்லை சிறங்கணிப் பீனையின்று
சிறியேனற் கருளிநிதமும்

செம்மைபெற நின்மரபு செழித்துமிகு புகழ்பெறச்
சிறுதே ருருட்டியருளே
சேகமெலாஞ் சமரஸச் சிந்தைவளர் கொள்கையோய்
சிறுதே ருருட்டியருளே (௰)

குறிப்பு:— தவக்குளே - சரீரத்தில், துற்றலுக்கு - உண்பதற்கு இனி அம்மை எம்மையோ - இனி வரும் பிறவி யாதோ, இங்கு வம்மென இங்கு வாருங்கள் என்று, இம்மியும் - கொஞ்சமும், இம்மி என்பது 10,75,200-ல் ஒருபாகம், சிம்மத அணிகலச்செம்மலை - ஸர்ப்பாபரண பூஷிதரான சிவனை, சினப்பிலா - கோபமில்லாத, சிறங்கணிப்பு - கடைக் கண்பார்வை.

பொழிப்புரை:—தும்மலிலும் பிரிந்து போகக்கூடிய இந்தச் சரீரத்தைப்பெற்றும், பல சரீரங்களில் புகுந்து சஞ்சரித்தும் ஆகாரத்திற்கு அலைதலும், தூங்கலும் அல்லாமல் பரிசுத்தமான நெறியை அடியேன் அறிந்தேனல்லேன். இப்பிறவிபோன பின் இனி வரும்பிறவியாதோ! கேவலமான இத்துக்கம் நீங்குமோ! "இங்குவாருங்கள்" எனச் சிவனடியாரை யழைத்து இம்மிகூட உபகரித்தவனில்லை. சர்ப்பாபரண பூஷிதரான சிவபெருமானைச் சார்ந்திருக்கவில்லை. கோபமற்ற மகாவிஷ்ணுவைத் தியானிக்கின்ற மனநிலையில்லை. தங்களது கடைக்கண் பார்வையை சிறியனுகிய, எனக்கு அருளி, ஒழுங்குடன் எக்காலத்தும் விளங்குகிற நினது பரம்பரை செழிப்புடன் புகழ்பெற்றோங்குமாறு சிறிய தேரை உருட்டுவீராக. ஸமரஸமான மனோபாவம் உலகில் வளருகிற அத்வைத மதாசாரியாரே, சிறியதேரை உருட்டுவீராக.

அங்கமு வேதந் தானும் ஆகம நூல்க ளேல்லாம்
அங்கத மின்றி யாளும் அரசரு மமைச்சர் கூட்டம்
சங்கர பகவத் பாதர் சார்ந்துள மதங்கள் வாழி
மங்களம் பொங்க வெங்கும் மாரியும் பொழிய மாதோ.

குறிப்பு:— அங்கதம் - அபவாதம்.

பொழிப்புரை:— அங்கங்களோடு கூடிய வேதமும் எல்லா ஆகமங்களும், அபவாதமின்றிப் பரிபாலனம் செய்கிற மன்னர்களும், மந்திரிகளின் சமூகமும் சங்கரபகவத்பாதர் அநுக்ரகித்த ஷண்மதங்களும் சிறந்தோங்கவேண்டும். எங்கும் மங்களம் விளங்கவேண்டும். காலந்தவறாது மழையும் பொழியவேண்டும்.

ஸ்ரீ சங்கர ஜகத்குரு சீர்பாதம் வாழ்க.